விலை: ரூபா 20 பக்கங்கள் 32

# உதயன்

சுடர் 30 கதிர் 266 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 2, புதன்கிழமை 19.08.2015

## விருப்பு வாக்கில் போட்டி

யாழ்ப்பாணம், ஓக.19
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களான ஈ.சரவணபவன் மற்றும் க.அருந்தவபாலன் ஆகியோருக்கு இடையில் விருப்பு வாக்கில் நெருக்கமான போட்டி நிலவியது. இருப்பினும், பக்கம் 21

# வடக்கில் தெரிவான எம்.பிக்கள்



யாழ்ப்பாணம், ஓக 19
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் தெரிவாகியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களின் விவரம் வருமாறு.
இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் சி.சிறீதரன் (72,258), மாவை .சேனாதிராசா (58,782), எம்.ஏ.சுமந்திரன்(58.043), த.சித்தார்த்தன் (53,741), ஈ.சரவணபவன் (43,719) ஆகியோரும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி சார்பில் டக்ளஸ் தேவானந்தாவும் (16,399), ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் திருமதி விஜயகலா மகேஸ்வரனும் (13,071) தெரிவாகியுள்ளனர்.
இதேவேளை- வன்னித் தேர்தல் மாவட்டத்தில் தெரிவாகியுள்ள இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விவரம் வருமாறு:- சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சிவமோகன். ரிஷாத் பதியுதீன், காதர் மஸ்தான். (த-5)

## தேசிய அவையில் இணைந்து தீர்வை எட்டும் கூட்டமைப்பு

### வெற்றியின் பின்னர் மாவை தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 19
அரச அமைச்சில் அங்கம் வகிக்க வேண்டும் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் நாம் அதில் பங்குபற்ற மாட்டோம். தேசிய அவை அமைக்கப்படுமானால் அதில் கடமையாற்றக் கூடியதாக இருக்கும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் எமது மக்களின் இனப்பிரச்சினை, எமது மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வை அந்தச் சபை ஊடாக நாம் எதிர்காலத்தில் எட்ட முடியும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.
யாழ்.மத்திய கல்லூரியில் நாடாளுமன்றத் தேர்தல் வாக்களிப்பு வெற்றி விவரம் அறிவிக்கப்பட்ட பின்னர் பாடசாலையிலிருந்து வெளியேறிய அவர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே பக்கம் 21

## ரணிலுக்கு மோடி வாழ்த்து

கொழும்பு, ஓக. 19
பொதுத் தேர்தலில் வெற்றிபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி தொலைபேசியில் நேற்றுப் பாராட்டு தெரிவித்துள்ளார்.
இது குறித்து தனது டுவிட்டர் தளத்தில் செய்தி வெளியிட்டுள்ள இந்தியப் பிரதமர் மோடி,
ரணில் விக்கிரமசிங்கவுடன் உரையாடி, அவருக்குப் பாராட்டு தெரிவித்ததுடன், அவரது கூட்டணி தேர்தலில் மிகவும் அற்புதமாக செயற்பட்டுள்ளது என்றும் பாராட் பக்கம் 21

## சம அந்தஸ்துடன் கூடிய நாட்டை உருவாக்குவோம்

### பிரதமர் ரணில் அழைப்பு

கொழும்பு, ஓக. 19
இணக்கப்பாட்டுடன் கூடிய ஓர் அரசொன்றினூடாக அனைவருக்கும் சம அந்தஸ்துடன் கூடிய புதிய நாடொன்றை உருவாக்குவோம் என ஐக்கிய தேசிய கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
நேற்று முற்பகல் தேர்தல் முடிவுகள் வெளியா கிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் விடுத்த விசேட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
அந்த அறிக்கையில் பக்கம் 21

## அர்ப்பணமற்றோரை அரசியலிலிருந்து முற்றுமுழுதாக அகற்றினர் தமிழர்கள்

### தேர்தல் வெற்றி குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 19
பொய்யுரைத்தவர்களை, அர்ப்பணமற்றவர்களைத் தெளிவாக அறிந்து முற்றுமுழுதாக இந்தத் தேர்தலில் தோற்கடித்து அரசியல் அரங்கிலிருந்து அகற்றியுள்ளனர் தமிழ் மக்கள்.
இவ்வாறு தமிழரசுக்கட்சியின் தலைவரான மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார். பக்கம் 21

# நல்லாட்சியை தக்க வைத்தது ஐ.தே.க.

## 106 ஆசனங்களைத் தம் வசப்படுத்தியது



கொழும்பு, ஓகஸ்ட் 19
தேசிய ரீதியில் மட்டுமன்றி சர்வதேச மட்டத்திலும் பெரும் பரபரப்பையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தி யிருந்த இலங்கையின் நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி வெற்றி வாகைசூடியுள்ளது.
கொழும்பு, கண்டி,நுவரெலியா உட்பட 12 மாவட்டங்களை தன் வசப்படுத்தியுள்ள மேற்படி முன்னணி, 22 தேர் தல் மாவட்டங்களில் இருந்தும் 50 லட்சத்து 98 ஆயிரத்து 927 வாக்குகளைப்பெற்று 13 போனஸ் ஆசனங்களுடன் மொத்தமாக 106 ஆசனங்களைக் கைப்பற்றியுள்ளது.
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தலைமையில் களமிறங்கிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 47 லட்சத்து 32 ஆயிரத்து 669 வாக்குகளைப்பெற்று 06 போனஸ் ஆசனங்களுடன் 95 ஆசனங்களைக் கைப்பற்றி பிரதான பக்கம் 21

## தீர்வுக்கான பயணம் தொடரும்

### சம்பந்தன் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 19
இலங்கையின் எட்டாவது நாடாளுமன்றத் தேர்தலில் வடக்கு - கிழக்கில் தமிழ்த் தேசியக் பக்கம் 04

## முன்னாள் அமைச்சர்கள் பலர் தோல்வி

கொழும்பு, ஓக. 19
இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் முன்னாள் அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் பலர் தோல்வியைத் தழுவி பக்கம் 21

## மூன்றாவது பெரும் கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

### 16 ஆசனங்களுடன் அமோக வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 19
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 16 ஆசனங்களைக் கைப்பற்றி, மீண்டும் அமோக வெற்றியைப் பெற்றுள்ளது.
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 5 ஆசனங்களையும், வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 4 ஆசனங்களையும், திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் ஓர் பக்கம் 21

## பொன்சேகாவின் கட்சிக்கு ஓர் ஆசனம்கூட இல்லை

### பலசேனாவும் தோல்வி
### ஜே.வி.பியின் கனவும் கலைந்தது

கொழும்பு, ஓக. 19
இறுதிக்கட்டப்போரின்போது இராணுவத்துக்கு தலைமை வகித்தவரும் 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக களமிறங்கிய வருமான பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா தலைமையிலான ஜன பக்கம் 21



LENOVO மடிக்கணினிகளுக்கு
4 வருட உத்தரவாதம்
Lenovo
Abans மற்றும் SINGHAGIRI
இடமிருந்து மாத்திரமே
49,990 ரூபாவிலிருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊர்வலங்களுக்கு ஒரு வாரம் தடை

கொழும்பு, ஓக.19

எதிர்வரும் ஒரு வார காலத்துக்கு ஊர்வலங்கள் மற்றும் பேரணிகள் நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணையாளரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய, தேர்தல் சட்டங்களின் அடிப்படையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்துள்ளார்.

குறித்த தடையை மீறி ஊர் வலங்கள் மற்றும் பேரணிகளை நடத்தும் வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மீது, பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கப்படுமெனஅவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

# வடக்கில் 9 ஆசனங்கள் தமிழ்க் கூட்டமைப்புக்கு

## ஈ.பி.டி.பி. , ஐ.தே.க. , ஐ.ம.சு.மு. என்பவற்றுக்கு தலா ஓர் ஆசனம்

யாழ்ப்பாணம், ஓக.19

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாணத்தில் 9 ஆசனங்களைக் கைப்பற்றி, அமோக வெற்றியைப் பெற்றுள்ளது. யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 5 ஆசனங்களையும், வன்னித் தேர்தல் மாவட்டத்தில் 4 ஆசனங்களையும் பெற்று கூட்டமைப்பு வெற்றி கொண்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி 2 ஆசனங்களையும், ஈ.பி.டி.பி. மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்பன தலா ஓர் ஆசனத்தையும் வடக்கில் கைப்பற்றியுள்ளன.

தமிழ் மக்கள் தங்களின் ஏகோபித்த வாக்குகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை, வடக்கில் மீண்டும் அமோக வெற்றியடையச் செய்துள்ளனர்.

எட்டாவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நேற்று இடம்பெற்றது. வடக்கில் சுமுகமான இடம்பெற்ற இந்தத் தேர்தலில், யாழ்ப்பாணம் – கிளிநொச்சி நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில், 61.56 சதவீத வாக்குப் பதிவாகியது. மன்னார் – முல்லைத்தீவு – வவுனியா ஆகிய நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் தொகுதியில் 71.89 சதவீத வாக்கும் பதிவாகியது.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில், இலங்கை தமிழ் அரசுக் கட்சி 2 லட்சத்து 7 ஆயிரத்து 577 வாக்குகளைப் பெற்று போனஸ் ஆசனத்துடன் 5 ஆசனங்களையும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி 30 ஆயிரத்து 232 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தையும், ஐக்கிய தேசியக் கட்சி 20 ஆயிரத்து 25 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.

வன்னித் தேர்தல் மாவட்டத்தில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி 89 ஆயிரத்து 886 வாக்குகளைப்பெற்று போனஸ் ஆசனத்துடன் 4 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 39 ஆயிரத்து 513 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 20 ஆயிரத்து 965 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.(த–5)

## வடக்கு, கிழக்கு முடிவுகள் ஒரே பார்வையில்

### யாழ்ப்பாண மாவட்டம்

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| இ.த.க. | 2,07,577 | 69.12 | 5 |
| ஈ.ம.ஜ.க. | 30,232 | 10.07 | 1 |
| ஐ.தே.க. | 20,025 | 6.67 | 1 |
| ஐ.ம.சு.மு. | 17,309 | 5.76 | 0 |
| அ.இ.த.கா. | 15,022 | 5 | 0 |

செல்லுடியான வாக்குகள் 3,00,309 (92.17%)
நிராகரிக்கப்பட்டவை 25,496 (7.83%)
மொத்த வாக்களர்கள் 5,29,239

### வன்னி மாவட்டம்

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| இ.த.க. | 89,886 | 54.55 | 4 |
| ஐ.தே.க. | 39,513 | 23.98 | 1 |
| ஐ.ம.சு.மு. | 20,965 | 12.72 | 0 |
| ஸ்ரீ.மு.கா. | 5,716 | 3.47 | 0 |
| ஈ.ம.ஜ.க. | 2,120 | 1.29 | 0 |

செல்லுடியான வாக்குகள் 1,64,775 (90.57%)
நிராகரிக்கப்பட்டவை 17,115 (9.43%)
மொத்த வாக்காளர்கள் 2,53,058

### திருகோணமலை மாவட்டம்

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.தே.க. | 86,638 | 46.38 | 2 |
| இ.த.க. | 45,894 | 25.44 | 1 |
| ஐ.ம.சு.மு. | 38,463 | 21.32 | 1 |
| ம.வி.மு. | 2,556 | 1.42 | 0 |
| அ.இ.த.கா. | 1,144 | 0.63 | 0 |

செல்லுடியான வாக்குகள் 1,80,396 (94.48%)
நிராகரிக்கப்பட்டவை 10,542 (5.52%)
மொத்த வாக்காளர்கள் 2,56,852

### மட்டக்களப்பு மாவட்டம்

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| இ.த.க. | 1,27,185 | 53.52 | 3 |
| ஸ்ரீ.மு.கா. | 3,8477 | 16.11 | 1 |
| ஐ.தே.க. | 32,359 | 13.55 | 1 |
| ஐ.ம.சு.மு. | 32,232 | 13.49 | 0 |
| த.வி.கூ | 959 | 0.4 | 0 |

செல்லுடியான வாக்குகள் 2,38,846 (94.64%)
நிராகரிக்கப்பட்டவை 13,538 (5.36%)
மொத்த வாக்காளர்கள் 3,65,167

### திகாமடுல்ல மாவட்டம்

| கட்சி | வாக்குகள் | வீதம் | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.தே.க. | 1,51,013 | 46.03 | 4 |
| ஐ.ம.சு.மு. | 89,334 | 27.39 | 2 |
| இ.த.க. | 45,421 | 13.92 | 1 |
| அ.இ.ம.கா. | 33,102 | 10.15 | 0 |
| ம.வி.மு. | 5,391 | 1.65 | 0 |

செல்லுடியான வாக்குகள் 3,26,192 (94.65%)
நிராகரிக்கப்பட்டவை 18,423 (5.35%)
மொத்த வாக்காளர்கள் 4,65,757

# கவிழ்ந்தது முன்னணி

## மண் கவ்வினார் க.குமார்

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 19

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கடுமையாக விமர்சித்து வந்த, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் (அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்) தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பலத்த போட்டியை வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், மிகக் குறைந்தளவிலான வாக்குகளை மட்டும் பெற்றுப் படுதோல்வியடைந்துள்ளனர். 15 ஆயிரத்து 22 வாக்குகளை மட்டுமே அவர்கள் பெற்றுக்கொண்டுள்ளனர்.

நேற்று நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் வாக்கு எண்ணும் பணிகள் இன்று மதியத்துடன் வடக்கில் நிறைவுக்கு வந்தன.

வடக்கில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 9 ஆசனங்களைக் கைப்பற்றி மிகப் பெரும் வெற்றியைப் பதிவு செய்தது. யாழ்ப்பாணத்தில் வேறு எந்தவொரு கட்சியும், ஓர் ஆசனத்தைப் பெறுவதற்கு வேண்டிய முழுமையான வாக்குகளைப் பெற்றுக் கொள்ளவில்லை. பிரதிநிதித்துவத் தேர்தல் முறையில் மிச்சத்தில் சொச்சம் வாக்குகளின் அடிப்படையிலேயே ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி என்பனவும் ஒவ்வோர் ஆசனங்களைப் பெற்றுள்ளன.

தேர்தல் காலங்களில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தீவிரமாகவும் – கடுமையாகவும் விமர்சனம் செய்து வாக்குச் சேகரித்த, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரை தமிழ் மக்கள் அடியோடு நிராகரித்துள்ளனர். அவர்களுக்கு ஓர் ஆசனம் கூடக் கிடைக்கவில்லை.

சமூகவலைத் தளங்களில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினருக்கு ஆதரவாக – தீவிரமான பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றாகக் கடும் போட்டியை வழங்குவார்கள் என்று மாயத் தோற்றம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் தமிழ் மக்கள் தமது தெளிவான அரசியல் சிந்தனை மூலம், மாயையை உடைத்தெறிந்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே தமது [illegible] சர்வ தேசத்துக்கு உணர்த்தியுள்ளனர்.(உ–த–5)

## தொங்கு நாடாளுமன்றம் அமையக்கூடிய சாத்தியம்

### எந்தக் கட்சியும் பெரும்பான்மை பெறாததால்

கொழும்பு, ஓக.19

தெற்கில் இன்று மாலை வரை கிடைக்கப் பெற்ற தேர்தல் முடிவுகளின் அடிப்படையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் சம அளவிலான ஆசனங்களே கிடைக்கப் பெற்றுள் ளன. இதனால் எதிர்வரும் நாடாளுமன்றம் தொங்கு நாடாளுமன்றமாகவே அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி 47 லட்சத்து 37 ஆயிரத்து 895 வாக்குகளைப் பெற்று 70 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 44 லட்சத்து 72 ஆயிரத்து 448 வாக்குகளைப் பெற்று 69 ஆசனங்களையும், மக்கள் விடுதலை முன்னணி 5 லட்சத்து 23 ஆயிரத்து 579 வாக்குகளைப் பெற்று 3 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளன.

இதுவரை 153 ஆசனங்களுக்குரிய முடிவுகளே வெளியாகியுள்ளன. இன்னமும், 43 ஆசனங்களுக்குரிய முடிவுகள் வெளியாகவில்லை. அத்துடன், 29 ஆசனங்கள் தேசியப் பட்டியல் அடிப்படையில் பகிரப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (த–5)


தெல்லிநகர் துர்க்காதேவி ஆலய
திருமுறைத் திருவிழா
இன்று (19.08.2015) புதன்கிழமை



நற்றமிழ் நல்கிய நால்வர் எழுந்தருள
நாயகி துர்க்காதேவி நயன மகள்
பண்ணோசை கேட்டு பக்தர்களுக்கு அருளும்
பக்தி மிகு திருமுறைத் திருவிழா காண வாரீர்.
வீதி எல்லாம் திருமுறை அர்ச்சனை ஒலிக்க
வீர நாயகி துர்க்காதேவி விழியால் நோக்க
உள்ளம் உருகி உத்தமியைத் தரிசிக்கும் பக்தர்
ஊரெல்லாம் கூடி வலம் வரும் நாள்.

இந்து இளைஞர் சங்கம், தெல்லிப்பழை.

அனுசரணை: ச. செந்தூரன் குடும்பம். தெல்லிப்பழை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண முடிவுகள்

## ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதி

| | | 2015 | |
|---|---|---|---|
| இலங்கை தமிழ் அரசுக்கட்சி | -7,688 | செல்லுபடியானவை | - 3,129 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | -3,924 | நிராகரிக்கப்பட்டவை | - 1,389 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 424 | வாக்களிப்பு | - 14,518 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -421 | பதிவு செய்த வாக்காளர்கள் | - 22,057 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | -329 | | |



## வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதி

| | | 2015 | |
|---|---|---|---|
| இலங்கை தமிழ் அரசுக்கட்சி | -17,237 | செல்லுபடியானவை | -26,453 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | -3,843 | நிராகரிக்கப்பட்டவை | - 2,679 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 2,678 | வாக்களிப்பு | - 29,132 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -4,311 | பதிவு செய்த வாக்காளர்கள் | - 47,621 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | -1,320 | | |



## காங்கேசன்துறை தேர்தல் தொகுதி

| | | 2015 | |
|---|---|---|---|
| இலங்கை தமிழ் அரசுக்கட்சி | -14,756 | செல்லுபடியானவை | -22,840 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | -2,464 | நிராகரிக்கப்பட்டவை | - 1,964 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 2,064 | வாக்களிப்பு | - 24,804 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -1,656 | பதிவு செய்த வாக்காளர்கள் | - 63,217 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | -1,033 | | |



## மானிப்பாய் தேர்தல் தொகுதி

| | | 2015 | |
|---|---|---|---|
| இலங்கை தமிழ் அரசுக்கட்சி | -20,875 | செல்லுபடியானவை | -30,862 |
| ஐக்கிய தேசியக் கட்சி | -2,888 | நிராகரிக்கப்பட்டவை | - 2,623 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | - 2,129 | வாக்களிப்பு | - 33,485 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -1,959 | பதிவு செய்த வாக்காளர்கள் | - 54,567 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | -1,498 | | |



## கோப்பாய் தேர்தல் தொகுதி

| | | 2015 | |
|---|---|---|---|
| இலங்கை தமிழ் அரசுக்கட்சி | -20,975 | செல்லுபடியானவை | -30,289 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -2,699 | நிராகரிக்கப்பட்டவை | - 2,938 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | - 2,588 | வாக்களிப்பு | - 33,227 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 1,983 | பதிவு செய்த வாக்காளர்கள் | - 55,891 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | -1,130 | | |



## உடுப்பிட்டி தேர்தல் தொகுதி

| | | 2015 | |
|---|---|---|---|
| இலங்கை தமிழ் அரசுக்கட்சி | -12,850 | செல்லுபடியானவை | -18,303 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -2,192 | நிராகரிக்கப்பட்டவை | - 1,835 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | -1,606 | வாக்களிப்பு | - 21,138 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | -1,037 | பதிவு செய்த வாக்காளர்கள் | - 39,204 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 925 | | |



## பருத்தித்துறை தேர்தல் தொகுதி

| | | 2015 | |
|---|---|---|---|
| இலங்கை தமிழ் அரசுக்கட்சி | -12,678 | செல்லுபடியானவை | -18,301 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | -1,920 | நிராகரிக்கப்பட்டவை | - 1,631 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | -1,858 | வாக்களிப்பு | - 20,932 |
| ஐக்கிய தேசியக் கட்சி | -1,987 | பதிவு செய்த வாக்காளர்கள் | - 36,138 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -1,050 | | |



## சாவகச்சேரி தேர்தல் தொகுதி

| | | 2015 | |
|---|---|---|---|
| இலங்கை தமிழ் அரசுக்கட்சி | -20,188 | செல்லுபடியானவை | -26,395 |
| ஐக்கிய தேசியக் கட்சி | -1,682 | நிராகரிக்கப்பட்டவை | - 2,486 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -1,591 | வாக்களிப்பு | - 28,881 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | -1,469 | பதிவு செய்த வாக்காளர்கள் | - 51,702 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | - 766 | | |



## நல்லூர் தேர்தல் தொகுதி

| | | 2015 | |
|---|---|---|---|
| இலங்கை தமிழ் அரசுக்கட்சி | -18,783 | செல்லுபடியானவை | -27,152 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | -2,420 | நிராகரிக்கப்பட்டவை | - 1,707 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | -2,005 | வாக்களிப்பு | - 28,858 |
| ஐக்கிய தேசியக் கட்சி | -1,662 | பதிவு செய்த வாக்காளர்கள் | - 246,699 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -1,444 | | |



## யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதி

| | | 2015 | |
|---|---|---|---|
| இலங்கை தமிழ் அரசுக்கட்சி | -13,545 | செல்லுபடியானவை | -20,119 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | -2,203 | நிராகரிக்கப்பட்டவை | - 1,283 |
| ஐக்கிய தேசியக் கட்சி | -1,414 | வாக்களிப்பு | - 21,402 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | -1,132 | பதிவு செய்த வாக்காளர்கள் | - 33,050 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -1,110 | | |



## கிளிநொச்சி தேர்தல் தொகுதி

| | | 2015 | |
|---|---|---|---|
| இலங்கை தமிழ் அரசுக்கட்சி | -38,155 | செல்லுபடியானவை | -49,268 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | -6,417 | நிராகரிக்கப்பட்டவை | - 4,689 |
| ஐக்கிய தேசியக் கட்சி | -1,646 | வாக்களிப்பு | - 53,957 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -1,285 | பதிவு செய்த வாக்காளர்கள் | - 79,093 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | -532 | | |



## தபால்மூல வாக்களிப்பு யாழ்ப்பாணம்

| | | 2015 | |
|---|---|---|---|
| இலங்கை தமிழ் அரசுக்கட்சி | -10,087 | செல்லுபடியானவை | -15,198 |
| ஐக்கிய தேசியக் கட்சி | -1,472 | நிராகரிக்கப்பட்டவை | - 272 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | -1,398 | மொத்தம் | - 15,470 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | -1,233 | | |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 591 | | |



# வன்னி முடிவுகள்

## மன்னார் மாவட்டம்

| | | 2015 | |
|---|---|---|---|
| இலங்கை தமிழ் அரசுக்கட்சி | -27,095 | செல்லுபடியானவை | -46,569 |
| ஐக்கிய தேசியக் கட்சி | -12,738 | நிராகரிக்கப்பட்டவை | - 4,206 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | -2,826 | வாக்களிப்பு | - 50,775 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -2,586 | பதிவு செய்த வாக்காளர்கள் | - 79,433 |



## முல்லைத்தீவு மாவட்டம்

| | | 2015 | |
|---|---|---|---|
| இலங்கை தமிழ் அரசுக்கட்சி | -27,289 | செல்லுபடியானவை | -38,475 |
| ஐக்கிய தேசியக் கட்சி | -8,244 | நிராகரிக்கப்பட்டவை | - 6,012 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -2,562 | வாக்களிப்பு | - 44,487 |
| ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி | - 970 | பதிவு செய்த வாக்காளர்கள் | - 83,920 |
| அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் | - 326 | | |



## வவுனியா மாவட்டம்

| | | 2015 | |
|---|---|---|---|
| இலங்கை தமிழ் அரசுக்கட்சி | -31,836 | செல்லுபடியானவை | -66,246 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -14,402 | நிராகரிக்கப்பட்டவை | - 6,423 |
| ஐக்கிய தேசியக் கட்சி | -14,380 | வாக்களிப்பு | - 72,669 |
| புரவசி பெரமுன | -1,417 | பதிவு செய்த வாக்காளர்கள் | - 109,705 |



## தபால்மூல வாக்களிப்பு வன்னி

| | | 2015 | |
|---|---|---|---|
| இலங்கை தமிழ் அரசுக்கட்சி | -3,581 | செல்லுபடியானவை | -8,399 |
| ஐக்கிய தேசியக் கட்சி | -1,444 | நிராகரிக்கப்பட்டவை | - 199 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 770 | மொத்தம் | - 8,588 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 185 | | |
| மக்கள் விடுதலை முன்னணி | - 78 | | |



## இடம்பெயர்ந்தோரின் வாக்களிப்பு

| | | 2015 | |
|---|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | -4,707 | செல்லுபடியானவை | -7,086 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | -1,717 | நிராகரிக்கப்பட்டவை | - 315 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 615 | மொத்தம் | - 7,401 |
| இலங்கை தமிழ் அரசுக்கட்சி | - 4 | | |



# திருகோணமலை முடிவுகள்

## திருகோணமலை தேர்தல் தொகுதி

| | | 2015 | |
|---|---|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | -27,812 | செல்லுபடியானவை | -56,714 |
| ஐக்கிய தேசியக் கட்சி | -17,674 | நிராகரிக்கப்பட்டவை | - 3,755 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 811 | வாக்களிப்பு | - 60,469 |
| | | பதிவு செய்த வாக்காளர்கள் | - 86,870 |



## சேருவல தேர்தல் தொகுதி

| | | 2015 | |
|---|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -22,325 | செல்லுபடியானவை | -50,954 |
| ஐக்கிய தேசியக் கட்சி | -20,619 | நிராகரிக்கப்பட்டவை | - 2,998 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | - 5,628 | வாக்களிப்பு | - 53,952 |
| மக்கள் விடுதலை முன்னணி | -1,562 | பதிவு செய்த வாக்காளர்கள் | - 74,070 |



## மூதூர் தேர்தல் தொகுதி

| | | 2015 | |
|---|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | -40,130 | செல்லுபடியானவை | -82,0[illegible] |
| இலங்கை தமிழரசுக் கட்சி | -10,555 | நிராகரிக்கப்பட்டவை | - 3,85[illegible] |
| சுயேட்சைக் குழு 6 | - 5,177 | வாக்களிப்பு | - 85,662 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -5,033 | பதிவு செய்த வாக்காளர்கள் | - 95,604 |



## தபால்மூல வாக்களிப்பு வன்னி

| | | 2015 | |
|---|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | -5,215 | செல்லுபடியானவை | -10,688 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -2,894 | நிராகரிக்கப்பட்டவை | - 137 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | - 2,099 | மொத்தம் | - 10,825 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 301 | | |



## திருகோணமலை மொத்த வாக்குகள்

| | | 2015 | |
|---|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | -83,638 | செல்லுபடியானவை | -180,386 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | -45,894 | நிராகரிக்கப்பட்டவை | - 10,542 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -38,463 | வாக்களிப்பு | - 190,938 |
| சுயேட்சைக் குழு 6 | -6,476 | பதிவு செய்த வாக்காளர்கள் | - 256,852 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திகாமடுல்ல முடிவுகள்

## அம்பாறை தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -60,506 |
| ஐக்கிய தேசியக் கட்சி | -40,751 |
| மக்கள் விடுதலை முன்னணி | - 4,029 |
| முன்னிலை சோசலிசக் கட்சி | - 118 |

| 2015 | |
|---|---|
| செல்லுபடியானவை | -114,803 |
| நிராகரிக்கப்பட்டவை | - 6,963 |
| வாக்களிப்பு | - 121,766 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | - 161,999 |

நாடாளுமன்றத் தேர்தல் 2015

## சம்மாந்துறை தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | -23,206 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | -14,033 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | - 7,540 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -6,448 |

| 2015 | |
|---|---|
| செல்லுபடியானவை | -51,871 |
| நிராகரிக்கப்பட்டவை | - 2,856 |
| வாக்களிப்பு | - 54,727 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | - 80,357 |

நாடாளுமன்றத் தேர்தல் 2015

## கல்முனை தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | -24,992 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | -10,847 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | - 8,549 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 726 |

| 2015 | |
|---|---|
| செல்லுபடியானவை | -45,883 |
| நிராகரிக்கப்பட்டவை | - 2,051 |
| வாக்களிப்பு | - 47,434 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | - 71,254 |

நாடாளுமன்றத் தேர்தல் 2015

## பொத்துவில் தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | -43,533 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | -25,147 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -15,575 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | -9,517 |

| 2015 | |
|---|---|
| செல்லுபடியானவை | -94,849 |
| நிராகரிக்கப்பட்டவை | - 5,837 |
| வாக்களிப்பு | - 100,686 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | - 152,147 |

நாடாளுமன்றத் தேர்தல் 2015

## தபால்மூல வாக்களிப்பு திகாமடுல்ல

| | |
|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | -9,531 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -6,079 |
| இலங்கை தமிழ் அரசுக்கட்சி | -1,854 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் | - 961 |
| மக்கள் விடுதலை முன்னணி | - 770 |

| 2015 | |
|---|---|
| செல்லுபடியானவை | -19,289 |
| நிராகரிக்கப்பட்டவை | - 716 |
| மொத்தம் | - 20,005 |

நாடாளுமன்றத் தேர்தல் 2015

# மட்டக்களப்பு முடிவுகள்

## கல்குடா தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | -28, 718 |
| ஐக்கிய தேசியக் கட்சி | -17,142 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -7, 990 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | -9,093 |

| 2015 | |
|---|---|
| செல்லுபடியானவை | -65,114 |
| நிராகரிக்கப்பட்டவை | -4, 234 |
| வாக்களிப்பு | - 69,348 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | - 105,056 |

நாடாளுமன்றத் தேர்தல் 2015

## மட்டக்களப்பு தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | -56,876 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | -27,869 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -20,258 |
| ஐக்கிய தேசியக் கட்சி | -6,179 |

| 2015 | |
|---|---|
| செல்லுபடியானவை | -114, 859 |
| நிராகரிக்கப்பட்டவை | -5, 525 |
| வாக்களிப்பு | -120,384 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | -172,499 |

நாடாளுமன்றத் தேர்தல் 2015

## பட்டிருப்பு தேர்தல் தொகுதி

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக் கட்சி | -35,535 |
| ஐக்கிய தேசியக் கட்சி | -7,937 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -3,276 |
| முஸ்லிம் காங்கிரஸ் | - 125 |

| 2015 | |
|---|---|
| செல்லுபடியானவை | - 49,415 |
| நிராகரிக்கப்பட்டவை | - 3, 706 |
| வாக்களிப்பு | -53, 120 |
| பதிவு செய்த வாக்காளர்கள் | -87, 812 |

நாடாளுமன்றத் தேர்தல் 2015

## தபால்மூல வாக்களிப்பு மட்டக்களப்பு

| | |
|---|---|
| இலங்கை தமிழ் அரசுக்கட்சி | -6,056 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | -1,390 |
| ஐக்கிய தேசியக் கட்சி | -1,101 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 708 |

| 2015 | |
|---|---|
| செல்லுபடியானவை | -9,458 |
| நிராகரிக்கப்பட்டவை | - 86 |
| மொத்தம் | - 9,544 |

நாடாளுமன்றத் தேர்தல் 2015

# வெறும் ஏழே வாக்குகளால் நழுவியது 6ஆவது ஆசனம்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினால் வந்த வினை

யாழ்ப்பாணம், ஓக. 18

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ். தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்றது. ஏற்கப்பட்ட 3 லட்சத்து 309 வாக்குகளில் 2 லட்சத்து 7 ஆயிரத்து 577 வாக்குகளைப் பெற்று 5 ஆசனங்களைக் கைப் பற்றியது. எனினும் கூட்டமைப்பு 6 ஆசனங்களைக் கைப்பற்றுவதற்கு வாய்ப்பு இருந்தது. 7 வாக்குகளால் அந்த வாய்ப்பு நழுவிப் போனது.

இலங்கையின் பொதுத் தேர்தல் நடைமுறையில் 5 சதவீதங்களுக்குக் குறைந்த வாக்குகளைப் பெறும் கட்சி மற்றும் சுயேச்சைகளின் வாக்குகள், ஆசனங்களுக்கான வாக்குகளின் கணக்கெடுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை.

கட்சிகள் மற்றும் சுயேச்சைகள் 5 சதவீதத்துக்குக் குறைவாகப் பெறும் வாக்குகளின் மொத்த எண்ணிக் கையை செல்லுபடியாகும் மொத்த வாக்குகளில் இருந்து கழித்துவிட்டு, எஞ்சிய வாக்குகளே மாவட்ட ஆசனங்களால் (போனஸ் ஆசனம் நீங்கலாக) பிரிக்கப்பட்டு ஓர் ஆசனத் துக்குரிய வாக்குகள் கணிக்கப்படும்.

அதாவது ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்த வாக்குகளான 3 லட்சத்து 309 வாக்குகளில் இருந்து 5 சத வீதத்துக்குக் குறையப் பெற்ற கட்சி கள் மற்றும் சுயேச்சைகள் உள்ளடங்கலாகப் பெற்ற 10,102 வாக்குகளைக் கழித்தால் ஏற்கப்பட்ட மொத்த வாக்குகள் 290,207. இந்த நிலையில் ஓர் ஆசனத்துக்கு 48,367 வாக்குகள் தேவைப் படுகிறது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் 5 சதவீதத்துக்கும் குறைந்த வாக்குகளைப் பெற்றிருந்தால் அதனது 15,015 வாக்குகளும் (முன்னணி பெற்ற மொத்த வாக்குகளில் 7 வாக்குகள் குறைவாக) கழிக்கப்பட, 275,195 வாக்குகள் மட்டும் ஆசனங்களுக்கான வாக்குகளாகக் கணிக்கப்படும் இந்த நிலையில் ஓர் ஆசனத் துக்குத் தேவையான வாக்குகள் 45,865.

இதன் அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற 207,557 வாக்குகளுக்கு 4 முழுமையான ஆசனங்களும் மீதியாக 24,097 வாக்குகள் இருந்திருக்கும். கூட்டமைப்பின் இந்த வாக்குகள் ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற 20,025 வாக்குகளைவிட அதிகம் என்பதால் 5ஆவது ஆசனமும் கூட்டமைப்புக்குக் கிடைத்திருக்கும். போனஸ் ஆசனமும் கிடைக்க, கூட்டமைப்பு மொத்தமாக 6 ஆசனங்களையும் ஈபிடிபி ஒரு ஆசனத்தையும் பெற்றிருக்கும்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பெற்றுக் கொண்ட அந்த அதிகபட்சமான 7 வாக்குகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 6ஆவது ஆசனம் பறிபோனது.

(உ–5, 4)

# கிழக்கில் இம்முறை சுமுகமான வாக்களிப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் வாக்களிப்பு 64 வீதம் வாக்களிப்பு பதிவாகியுள்ளதாக அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் எந்தவித பாரிய அசம்பாவிதங்களுமின்றி அமைதியான முறையில் மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்குடா ஆகிய தொகுதிகளில் வாக்களிப்பு இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்களிப்பு இடம்பெற்ற பின்பு வாக்கெண்ணும் நிலையம் அமைந்துள்ள மட்டக்களப்பு இந்துக் கல்லூரிக்கு வாக்குப் பெட்டிகள் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கொண்டு செல்லப்பட்டன. குறிப்பிடத்தக்கது. நாடாளுமன்றதேர்தலுக்கான வாக்களிப்பு மட்டக் களப்பு நகரில் உள்ளவாக்குச் சாவடிகளில் தேர்தல் தினத்தன்று வாக்காளர்கள் காலையிலேயே வாக்களிக்க ஆர்வத்தோடு வாக்களிப்பு நிலையங்க ளுக்கு சென்றதைக் காண முடிந்தது.

வயோதிபர்கள், விசேடதேவையுடையோர்மற்றும்சுகயீனமுற்றோர்கூடதங்களைப் பராமரிப்போரின் உதவியுடன் வாக்களிப்பி ல்கலந்துகொண்டனர்.

இயலாத நிலையில்உள்ள பெற்றோர்கள் மற்றும் வயோதிபர்களை கூட தமது; பிள்ளைகள் ஆதரவோடு வாக்களிப்பதற்காக அழைத்துச் சென்றிருந்தனர்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பிரதம வேட்பாளராக போட்டியிட்ட பொன் செல் வராசாமட்டக்களப்பு மஹாஜனக் கல்லூரியில் அமைந்துள்ள வாக்குச் சாவ டியில் தனதுவாக்கைப்பதிவு செய்திருந்தார்.

இதேவேளை தாண்டவன் வெளி வயோ திபர் இல்லத்தில் வயோதிபர்களை பராமரிக்கும்அருட் சகோதரிகள் துணையோ டுவாக்களிக்கச் சென்றனர்.

# சட்டரீதியான செயலாளர் நானே-சுசில்

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சட்டரீதியான செயலாளர் நானே என நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்துள்ளார்.தேர்தல் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இதனை அவர் குறிப்பிட்டிருந்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்–

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஸ்தாபிக்கப்பட்ட நாளிலிருந்தே நான் தான் செயலாளராகச் செயற்பட்டுவருகின்றேன். கடந்த ஜூன் மாதம் 13 திகதி கூட்டமைப்பின் கட்சித் தலைவர்களுடன் பேசி 29 தேசியப் பட்டியல் உறுப்பினர்களது பெயர்களை தேர்தல்கள் ஆணையாளருக்கு அனுப்பியிருந்தேன். இந்த நிலையில் நான் செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளேன். ஆகவே இதனை ஒரு பிரச்சினையாக கருதாது தீர்க்கப்பட வேண்டிய ஒரு விடயம் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார். (ஈ)

தொடர்ச்சி....

## தீர்வுக்கான

கூட்டமைப்பை மீண்டும் அமோக வெற்றியடைச் செய்த தமிழ் மக்களுக்கு கட்சியின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் 33 ஆயிரத்து 834 விருப்பு வாக்குகளைப் பெற்று மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாகியுள்ள இரா.சம்பந்தன், வடக்கு – கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி தொடர்பில் நேற்று உதயனிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் குறிவைத்துத் தாக்கிய போலிப் பரப்புரைகளுக்கு மயங்காமல் – சலுகைகளுக்கு விலைபோகாமல் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியத்தை நேசித்து – தாய் மண்ணுக்கு மரியாதை செலுத்தி கூட்டமைப்புக்கு வாக்களித்துள்ளனர். மக் களின் அமோக வாக்குகள் மூலம் நாம் மீண்டும் வெற்றியடைந்துள்ளோம்.

வடக்கு – கிழக்கில் 14 ஆசனங்களை நாம் வெற்றி கொள்ள தமிழ் மக்கள் எமக்கு பேராதரவு வழங்கியுள்ளனர். அதேவேளை, தேசியப் பட்டியல் ஊடாக எமக்கு மேலும் இரண்டு ஆசனங்கள் கிடைத்துள்ளன.

தேர்தல் நெருங்கும் வேளையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பில் சில உதிரிக் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் தவறான – விசமத்தனமான பரப்புரைகளை மேற்கொண்டுவந்தன. இந்தப் பரப்புரைகளால் எமது மக்களை தமது பக்கம் இழுக்கும் முயற்சியில் உதிரிக் கட்சிகளும், சுயேச்சைக் குழுக்களும் படுதோல்வியடைந்துள்ளன.

இந்த விசமத்தனக் குழுக் களுக்கு தேர்தலில் தமிழ் மக்கள் தக்க பதிலடி கொடுத் துள்ளனர். எனினும், எமது மக்களில் சிலர் இவர்களின் போலிப் பரப்புரைகளால் குழம்பிப்போயுள்ளனர் என்பது புலனாகின்றது.

ஏனெனில், நாம் வடக்கு – கிழக்கில் 20 ஆசனங்களைப் பெற்று வெற்றியடைய வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தோம். ஆனால், 20 ஆசன இலக்கை அடையாமல் நாம் அமோக வெற்றியடைந்துள்ளோம் – என்றார். (த–சி)

# தோல்வியை ஏற்கிறாராம் மஹிந்த

8 ஆவது நாடாளுமன்றத் தேர் தலில் தோல்வியடைந்துள் ளதை ஏற்றுக் கொள்வதாக, முன்னாள் ஜனாதிபதியும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் குருநாகல் மாவட்ட வேட்பாளருமான மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளதாக ஏ.எஃப்.பி செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

இந்தத் தேர்தலில் ஐ.ம.சு.கூ அறு திப் பெரும்பான்மையைப் பெற முடியாது என்பதனாலேயே அவர் தனது தோல்வியை ஏற் றுக்கொண்டுள்ளதாகத் தெரி கின்றது.

பிரதமராக வருவது என்ற என்னுடைய கனவு இல்லாமற் போயுள்ளது. நான் ஏற்றுக் கொள்கிறேன். சிறப்பான போட்டி யொன்றில் நாம் தோல்வியடைந்துள்ளோம் என அவர் தெரிவித்ததாக, ஏ.எப்.பி செய்திச் சேவை தெரிவிக்கின்றது.

ஐ.ம.சு.கூ ஆட்சியமைக்காத போதிலும், எதிர்க்கட்சி உறுப்பினராக அவர் தொடர்ந்தும் கட மையாற்றுவார் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

எனினும், தற்போது டுவிட்டர் தளம் மூலம் கருத்தொன்றை வெளிப்படுத்தியுள்ள முன்னாள் ஜனாதிபதி, வெற்றியையோ அல்லது தோல்வியையோ ஏற்றுக்கொள்வ தற்கு, அவர் இன்னமும் உத்தியோகபூர்வ முடிவொன்றைப் பெறவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்முறை நடைபெற்றது சுயாதீனமான தேர்தல்

## தேர்தல்களுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு



கொழும்பு, ஓக.19
2001ஆம் ஆண்டின் பின்னர் நாட் டில் நடைபெற்ற மிகவும் சுயாதீனமான தேர்தல் இம்முறை நடை பெற்ற நாடாளுமன்றத் தேர்தலே என்று தேர்தல்களுக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ன தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:-
மிகவும் அமைதியான முறையி லும், சுயாதீனமான முறையிலும் இம்முறைத் தேர்தல் நடைபெற்றது. நான் ஏழு பொலிஸ் மா அதிபர் களின் கீழ் கடமையாற்றியுள்ளேன். ஏழாவது பொலிஸ் மா அதிபர் தற் போதைய பொலிஸ் மா அதிபர் என்.கே. இலங்கக்கோனாவார். எனது பதவிக் காலத்தில் பொலிஸ் மா அதி பர் என்.கே. இலங்கக்கோனின் தலை மையிலேயே மிகவும் நீதியான முறையில் தேர்தல் நடைபெற்றுள்ளது. இந்த தேர்தல் ஒட்டு மொத்த உல குக்கும் முன்னுதாரணமாக அமைந் துள்ளது. தேர்தலை அமைதியாக நடத்தியமைக்காக வெளிநாட்டு கண் காணிப்பாளர்கள் எமக்கு நன்றி களைத் தெரிவித்துக் கொண் டனர். – என்றார். (ந)

## ஐ.ம.சு. முன்னணி குருநாகலில் பின்னடைவு

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போட்டியிட்ட குருநாகல் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந் திர முன்னணி வெற்றி பெற்றாலும், 2010 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர் தலுடன் ஒப்பிடுகையில் பின்ன டைவை எதிர்கொண்டுள்ளது.
2010 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 10 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 5 ஆசனங்களையும் பெற்றுக் கொண்டது.

## புதிய அரசியல் கலாசாரம் நாட்டில் உருவாக்கப்படும்

### பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



கொழும்பு, ஓக.19
நாட்டில் புதிய அரசு அமைக்கப் பட்டு, புதிய அரசியல் கலாசார மொன்று உருவாக்கப்படும் என்று பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரி வித்துள்ளார்.
தற்போது வெளியாகியுள்ள தேர் தல் முடிவுகள் குறித்து ஊடகங்க ளுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.
ஜனாதிபதி மைத்திரி மற்றும் பிரத மர் ரணில் தலைமையில் உரு வாக்கப் படும் புதிய அரசை மேலும் வலுப் படுத்தி, எதிர்வரும் 2020 ஆம் ஆண்டு வரை ஸ்திரமான அரசை அமைப் போம் என்று அவர் கூறியுள்ளார்.
பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட தையடுத்து, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிற்குள் பல திடீர் திருப் பங்கள் ஏற்பட்டன. குறிப்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் அங் கம் வகித்த ஜாதிக ஹெல உறுமய அமைப்பு, பெயர் மாற்றத்துடன் நல்லாட் சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி யில் இணைந்து கொண்டது. (ந)

## வசந்த சேனாநாயக்க மாரடைப்பால் வைத்தியசாலையில்



பொலனறுவை மாவட்டத்தில் ஐக் கிய தேசியக் கட்சித் தலைவராக செயற்பட்ட வசந்த சேனாநாயக்க திடீர் மாரடைப்புக் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டுள்ளார்.
தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அவருக்கு திடீரென மாரடைப்பு ஏற் பட்டு பொலனறுவை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுப், பின் னர் மேலதிக சிகிச்சைகளுக்காக அவசர விமானம் மூலம் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப் பட்டார்.
அதேவேளை, பொலனறுவை மாவட் டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, ஒரு லட்சத்துக்கு 18 ஆயிரத்து 845 வாக்குகளைப் பெற்று வெற்றியீட் டியுள்ளது. (ந)

## நாமலுக்கு அதிக விருப்பு வாக்குகள்

கொழும்பு, ஓக.19
அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் நாமல் ராஜபக்ஷவும், ஐ.தே.க. சார்பில் சஜித் பிரேமதாச வும் அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றுள்ளனர்.
அம்பாந்தோட்டை மாவட்டத்தில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்ன ணிக்கு 4 ஆசனங்கள் கிடைத்துள் ளன. நாமல் ராஜபக்ஷ ஒரு லட் சத்து 27 ஆயிரத்து 201 விருப்பு வாக்குகளுடன் முதலிடத்தில் உள் ளார். அதையடுத்து மஹிந்த அமர வீர, சமல் ராஜபக்ஷ, டி.வி. சானகஆகி யோர் தெரிவாகியுள்ளனர்.
ராஜபக்ஷ குடும்பத்தைச் சேர்ந்த முன்னாள் பிரதியமைச்சர் நிரு பமா ராஜபக்ஷ தோல்வியடைந் துள்ளார்.
அதேவேளை, ஐ.தே.க. சார்பில், சஜித் பிரேமதாச ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 645 விருப்பு வாக்குகளுடன் முத லிடத்தையும், திலீப் வேதாராச்சி 65 ஆயிரம் 391 விருப்பு வாக்குகளை யும் பெற்று தெரிவாகியுள்ளனர்.
ஜே.வி.பி. சார்பில் நிகால் கலப்பதி தெரிவாகியுள்ளார். (ந)

## மனோ கணேசன் கொழும்பில் வெற்றி

கொழும்பு, ஓக.19
ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொழும்பில் போட்டியிட்ட மேல் மாகாண மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் வெற்றி பெற் றுள்ளார்.
அதேவேளை, கொழும்பில் போட் டியிட்ட மேல்மாகாண மக்கள் முன்ன ணியின் மற்றொரு உறுப்பினரான சண்.குகவரதனும் வெற்றி பெறு வதற் கான சந்தர்ப்பம் உள்ளது என்றும் அதேபோன்று கண்டியிலும் ஒருவர் தெரிவாகும் வாய்ப்பு உண்டென்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ந)

## ஐ.ம.சு.முன்னணியிலிருந்து சுதந்திரக் கட்சி விலக முடிவு?

ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி பிலிருந்து விலகிக் கொள்ள சிறி லங்கா சுதந்திரக் கட்சி தீர்மா னித் துள்ளது என்று தகவல்கள் வெளி யாகியுள்ளன.
இது குறித்து எதிர்வரும் 24ஆம் திகதி அறிவிக்கப்படும் எனக் கட்சி யின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார் என் றும் அந்தத் தகவல்கள் தெரி வித்தன.
சுதந்திரக் கட்சி ஐக்கிய மக் கள் சுதந்திர முன்னணியி லிருந்து விலகிக்கொண் டால், தேசிய சுதந்திர முன் னணி, மஹாஜன ஐக்கிய முன்னணி, பிவித்துரு ஹெல உறுமய போன்ற கட்சிகள் தனிமைப்படுத்தப்படக் கூடிய நிலை உருவாகும்.
அதேவேளை, எதிர்வரும் 24ஆம் திகதி சிறி லங்கா சுதந்திரக் கட்சி யின் மத்திய செயற்குழு கூட உள்ளது. சுதந்திரக் கட்சியின் சில உறுப்பினர் கள் புதிய அரசில் அமைச்சுப் பதவி களை ஏற்றுக்கொள்வார்கள் என்றும் கூறப்படுகின்றது. (ந)






## இன்று கொடியேற்றம்



நேற்று கொடியேற்றத்துக்கான கொடிச்சீலை கொண்டு வரப் பட்ட போது....

### "அப்பா நீயின்று கொடியேறுவாய்"

கொடிதான போரெமக்கு வேண்டாமென்ற
கோரிக்கையை ஏற்று கொடியேறுவாய்
குழந்தைகள் குமருகள் படும்பாட்டினை
போக்கிடவே நீயின்று கொடியேறுவாய்

இடிபோல உலகெங்கும் போர் வெடிக்கிறதே
இதைநிறுத்த முருகா நீ கொடியேறுவாய்
அத்தனை குழந்தைகளுக்கும் அப்பா நீ தானே
அவர்க்கருள முருகா நீ கொடியேறுவாய்

விடிவாக ஒரு தேசம் வேண்டுமென்றால்
வேள்வியைத் தடுத்திடவே வேண்டுமையா
வீதிகளில் விபத்துகளை தடுத்திடவேண்டி
விதிகளை உணர்த்தி நீ கொடியேறுவாய்

*கே.எஸ்.சிவஞானராஜா.*

### நல்லையில் ஏறுது கொடி!

நல்லூர்ப் பதியில் கொடியேறிடவே
அடியார்கள் உன் பதி சூழ
மயிலேறி சேவற் கொடியாடும்,
உன் கொடியேற்றம் காண்பதற்காய்
நாற்றிசையிருந்தும் பக்தர்கள் நாம்
நாடியே உன்னடி வருகின்றோம்
நல்லைக் கந்தா காத்திடுவாய்
எம் வினை யாவும் தீர்த்திடவே

*சிந்து சிவதாஸ்.*

### வாழ்வோங்க வழி செய்வாய் வடிவேலனே!

சூழும் வலி நீக்க வல்ல
சுந்தர வேலா
தாழ்ந்தோரை தலைதூக்க
தயை செய்யப்பா!
நாள் தோறும் நலிவுற்று
நலம் இழப் போரின்
வாழ்வோங்க வகை சேர்ப்பாய்
வடிவேலனே!

*மானியூர் ரட்ணேஸ்.*

### நீர் மழை சிந்திட வேண்டும்

வரமொன்று கேட்கின்றோம் முருகா– நாட்டின்
வறட்சியை தணித்திடைய்யா!– நம் தேசம்
வனமாக மாறிடா வரம் வேண்டும் நிலத்தில்
விளைச்சல் பெருகிட வேண்டும் – நிதமும்
விண்ணகம் நீர் மழை சிந்திட வேண்டுமென்று!

*மிஷாந்தி செல்வராஜா.*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** எதிலும் விடாமுயற்சி தேவைப்படலாம். தொழில், வியாபாரத்தில் சுமாரான வருமானம் இருக்கும். அத்தியாவசியத் தேவைக்குக் கடன் வாங்க நேரிடும். வாகன பயணத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது.

**இடபம்:** எண்ணம், செயலில் புதிய உற்சாகம் பிறக்கும். நிலுவைப் பணியைச் சுறுசுறுப்பாக நிறைவேற்றுவீர்கள். மனதில் ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**மிதுனம்:** கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முயல்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். வாகனப் பயணத்தில் விழிப்புடன் இருப்பது நல்லது.மனைவிவழிஉறவினர்களின்ஒத்துழைப்புக்கிடைக்கும்.

**கடகம்:** மன உறுதியுடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். வெகுநாள் வாங்க நினைத்த பொருளை வாங்கி மகிழ்வீர்கள். மனைவியின் அன்பு கண்டு மனம் நெகிழ்வீர்கள்.

**சிங்கம்:** பொறுப்பு அதிகரிப்பதால் சோர்வு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். அதிக பயன் தராத பொருகள் வாங்குவதைத் தவிர்ப்பது நல்லது. உடல்நலனில் அக்கறை செலுத்துவது அவசியம்.

**கன்னி:** பிறர் நலனில் அதிக அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். வீட்டுத் தேவை பெருமளவில் பூர்த்தியாகும். பணியாளர்களுக்குப் பாராட்டும், வெகுமதியும் கிடைக்கும்.

**துலாம்:** அறிவுத் திறமையைப் பயன்படுத்தி நன்மை பெறுவீர்கள். சமூகத்தில் மதிப்பு கூடும். தெய்வ வழிபாடு சிறக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்லலாம்.

**விருச்சிகம்:** பேச்சில் நிதானத்தைப் பின்பற்றுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் தடை குறுக்கிட்டாலும் லாபம் குறையாது. வாகன வகையில் பராமரிப்புச் செலவு உண்டாகும். அரசியல்வாதிகள் மக்கள் ஆதரவைப் பெற முயல்வர்.

**தனுசு:** பெற்றோரின் ஆலோசனையை ஏற்று செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் மந்தநிலை மறைந்து இலாபம் உயரும். பெண்கள் மனம் போல ஆடம்பரச் செலவு செய்வர். மாணவர்கள் படிப்பில் அக்கறையுடன் ஈடுபடுவர்.

**மகரம்:** நண்பரின் உதவியால் நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். ஆதாயம் கூடும். மனைவியின் செயற்பாடு பெருமைக்கு வழி வகுக்கும். புத்திரரின் எதிர்கால நலனுக்காகப் பாடுபடுவீர்கள்.

**கும்பம்:** எதிலும் முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் காண்பீர்கள். உணவு விடயத்தில் எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம். தந்தை வழி உறவினர்களிடம் இருந்த கருத்து வேறுபாடு மறையும்.

**மீனம்:** உங்கள் வளர்ச்சி கண்டு மற்றவர்கள் வியப்பர். தொழில், வியாபாரத்தில் தடை நீங்கி இலாபம் அதிகரிக்கும். கண்களின் பாதுகாப்பில் தகுந்த கவனம் வேண்டும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாகலாம்.

## உங்களுக்குத் தெரியுமா?

"Selfie" என்பதன் தமிழ் வார்த்தை



தாமி

**அப்பு! ஏதோ வட்சப், டுவிட்டர்ன்னு சொல்றாங்களே அது எங்கள விட வேகமா தகவலைப் பரிமாறிக்குமா?**




## பேஸ் புக்கில் பிடித்தவை...




**10,20 ரூபாய்க்கு முறுக்கு பாக்கெட் வாங்கிக் குடுத்தா பிச்சைக்காரன் மாதிரி பாக்குறாங்க...... அதுவே, 5 ரூபாய்க்கு "Dairy Milk" வாங்கிக் குடுத்தா பெரிய அம்பானி மாதிரி பாக்குறாங்க.....**

**தூ இதாண்டா இன்னைக்கு உலகம்**




## ரஜினி படத்துக்கு மீண்டும் புதிய தலைப்பு?

ரஜினியின் அடுத்தப் படத்தை அட்டக்கத்தி பா ரஞ்சித் இயக்குவது உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், தற்போது அந்தப் படத்தின் தலைப்புத் தெரிவு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் இந்தப் படத்துக்கு முதலில் "காளி" என்ற தலைப்பை வைக்க முடிவு செய்துள்ளதாகவும், பின்பு, "கண்ணபிரான்" என்றதலைப்பை வைக்க பரிசீலனை நடந்து வருவதாகவும் கூறப்பட்டது. ஆனால், இந்தத் தகவல்களை படக்குழுவினர் மறுத்தனர். தற்போது கடைசியாக இந்தப் படத்துக்கு "கபாலி" என்று தலைப்பு வைக்க முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தப் படத்தில் ரஜினியின் கதாபாத்திரத்தின் பெயர் கபாலீஸ்வரன் என்பதால், அந்தப் பெயரைச் சுருக்கி "கபாலி" என்று வைக்கலாம் என முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது. அது மட்டுமல்லாமல், மயிலாப்பூரில் மிகப் பெரிய தாதாவாக வலம்வந்த கபாலியை மையப்படுத்தியே ரஜினியின் கதாபாத்திரம் உருவாக்கப்பட்டுள்ளதால் இந்தத் தலைப்பை வைக்க முடிவு செய்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இப்படத்தின் படப்பிடிப்பை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் தொடங்கவிருப்பதாக கூறப்படுகிறது. அதற்கு முன்னதாக இந்தப் படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டரை வெளியிட படக்குழுவினர் முடிவு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் படத்தில் ராதிகா ஆப்தே, தன்ஷிகா, கலையரசன், அட்டக்கத்தி தினேஷ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர். சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார். கலைப்புலி எஸ்.தாணு பிரம்மாண்டமாக தயாரிக்கிறார்.



# பல தடவை யோசிப்பீர்கள்

நான்கு மெழுகுவர்த்திகள் எரிந்து கொண்டு இருந்தன. மெலிதாய்காற்று வீசிக்கொண்டு இருந்தது....

காற்றைக் கண்டதும் "அமைதி" என்ற முதல் மெழுகுவர்த்தி "ஐயோ காற்று வீசுகின்றது, நான் அணைந்துவிடுவேன்" என்று பலவீனமாகக் கூறியது. காற்றுப் பட்டதும் அது அணைந்துவிட்டது "அன்பு" என்ற அடுத்த மெழுகுவர்த்தியும் காற்றை எதிர்க்க முடியாது என்று அணைந்து விட்டது.

"அறிவு" என்ற மூன்றாவது மெழுகுவர்த்தியும் காற்றை எதிர்க்க முடியாமல் அணைந்தது.

நான்காவது மெழுகுவர்த்தி மட்டும் காற்று வீசிய சில நொடிகள் போராடி ஜெயித்து விட்டது.

அப்போது அந்த அறையில் ஒரு சிறுவன் நுழைந்தான். "அடடா மூன்று மெழுகுவர்த்திகளும் அணைந்துவிட்டதே என்று கவலையுடன் கூறினான். அதற்கு எரிந்து கொண்டு இருந்த நான்காவது மெழுகுவர்த்தி "வருத்தப்படாதே நான் இருக்கின்றேன். என்னை வைத்து மற்றமூன்றையும் பற்ற வைத்துக்கொள்" என்றது. சிறுவன் உடனே.. நான்காவது மெழுகுவர்த்தியைப் பார்த்து " உனதுபெயர் என்ன ? " என்று கேட்டான். "நம்பிக்கை" என்றது அந்த மெழுகுவர்த்தி. நாம் எப்போதும் வாழ்வில் நம்பிக்கையை மட்டும் இழக்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரேஷ்ட பிரஜைகளின் சேவையில் ஒவ்வொரு வரலாறு பதிந்துள்ளது

## சிரேஷ்ட பிரஜைகள் பேரவையின் தலைவர் தெரிவிப்பு

மானிப்பாய், ஓக.19

கடந்த காலங்களில் சமுகத்துக்கு அர்ப்பணிப்புள்ள மகத்தான சேவையாற்றி இளைப்பாறியுள்ளவர்களே இன்றைய சிரேஷ்ட பிரஜைகள். ஒவ்வொரு சிரேஷ்ட பிரஜைகளின் சேவையிலும் ஒவ்வொரு வரலாறு பதிந்துள்ளது. – இவ்வாறு யாழ்.மாவட்ட சிரேஷ்ட பிரஜைகள் பேரவையின் தலைவர் இ.மயில்வாகனம் தெரிவித்தார்.

நிகழ்வொன்றில் 'வடக்கு சிரேஷ்ட பிரஜைகளின் வாழ்வும் வளமும்' எனும் தலைப்பில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தென்னிலங்கையில் சிரேஷ்ட பிரஜைகளின் வளர்ச்சி அபிவிருத்திக்காக பல சர்வதேச தொண்டு நிறுவனங்களும் மத சார்பான நிறுவனங்களும் உதவி வருகின்றன.

வடக்கில் சிரேஷ்ட பிரஜைகளின் வளர்ச்சிக்காக இதுவரை சர்வதேச தொண்டு நிறுவனங்கள் எதுவும் உதவவில்லை. தற்போது வடக்கில் உள்ள சிரேஷ்ட பிரஜைகளுக்கு அரசு ஒருசில உதவிகளை முன்வந்து செய்துள்ளது.

இன்றைய சிரேஷ்ட பிரஜைகள் கடந்த காலங்களில் சமூக, பொருளாதார மற்றும் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பல்வேறு வழிகளிலும் முன்னின்று செயல்பட்டு பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள்.

எனவே இவ்வாறான சேவையாளர்களை இன்றைய சமூகங்கள் மனமுவந்து பாராட்ட முன்வர வேண்டும்.

கடந்த காலங்களில் வாழ்ந்த சிரேஷ்ட பிரஜைகளுக்கு கட்டுக்கோப்பான நெறிமுறையான நிறுவன ஒழுங்கு காணப்படவில்லை.

ஆனால் இன்று பிரதேச செயலக மட்டம், கிராமமட்டம், மாவட்ட மட்டம், மாகாண, தேசிய மட்டம் என ஒரு வரையறையுண்டு.

இதன் மூலம் சிரேஷ்ட பிரஜைகள் முன்னுதாரண பிரஜைகளாக மதிக்கப்படுகின்றார்கள். – என்றார். (ற–50)

## தெய்வீக இசை அரங்கு

யஇளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசை அரங்கில் இன்று கே.எஸ்.ஆர். திருஞானசம்மந்தனின் திருமுறைக் கச்சேரி இடம்பெறுகின்றது. துர்க்கா மணிமண்டபத்தில் பி.ப 6.45 மணிக்கு இடம்பெறும் இந்த நிகழ்வில் உடன் பாடுபவர் செல்வி.க.சித்ரா. இதே வேளை ஹார்மோனியம் ந.செல்வச்சந்திரன், மிருந்தங்கம் சதாவேல்மாறன், கடம் அ.செல்வ ரத் தினம் ஆகியோர் பக்க வாத்தியக் கலைஞர்களாக நிகழ்வுக்கு அணி செய்வர். (ற–10)

## தோல்வியை ஏற்றார் உதய கம்மன்பில

கொழும்பு மாவட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர் உதய கம்மன்பில தனது தோல்வியை ஏற்று கொண்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.

உதய கம்மன்பிலவின் உத்தியோக பூர்வ பேஸ்புக் பக்கத் தில் அவர் தனது தோல் வியை ஏற்றுக் கொள்வ தாக தகவல் ஒன்றைப் பதிவு செய்துள்ளார் என்றும், தாய் நாட்டை பாது காப்பதற்காக முன் நின்ற அனைவருக்கும் தனது நன்றியைத் தெரிவித்து கொள்வதாக குறித்த பதிவில் குறிப்பிடப்பட் டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறை தேர்தலில் தோல்விய டைந்தாலும் தங்கள் போராட்டம் தொடரும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)

## மரண அறிவித்தல்

### திருமதி தெரேசம்மா அந்தோனிப்பிள்ளை

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், சாவகச்சேரி மட்டுவில் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெரேசம்மா அந்தோனிப்பிள்ளை நேற்று (18.08.2015)செவ்வாய்க் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - பெனடிற்றம்மா தம்பதியினரின் மகளும் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மேரிப்பிள்ளை, மரியாம்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை மற்றும் லில்லியோசப்பின் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜேசுராஜனின்( ஓய்வுபெற்ற தேசியசேமிப்பு வங்கி உதவி முகாமையாளர்) சிறிய தாயாரும் மனோரஞ்சிதமலரின் பாசமிகு மாமியாரும் ஜொபிற்றா மேசி (லண்டன்), ஜஸ்ரின், ஜயந்தன்(கனடா), ஜிட்ஜீவன்(R.D.A), ஜெராட் ஜோன்சன்(N.S.B), ஜேம்ஸ்யூலியன்(ராம் கொன்ரக்சன்), ஜெனி ஜெறோம்(வீதிகட்டட ஒப்பந்தகாரர்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (19.08.2015) புதன் கிழமை மு.ப 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக மட்டுவில் வடக்கு லூர்துமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மட்டுவில் மத்தி, சாவகச்சேரி.
077 172 7650, 077 247 9796,
077 193 0443.

தகவல் :-
பெறாமகன் ஜேசுராஜன்
குடும்பத்தினர்.


பனை அபிவிருத்திச் சபை
பனை நடுகை நிகழ்ச்சித்திட்டம் - 2015

பனை அபிவிருத்திச்சபையினால் ஆண்டு தோறும் மேற்கொள்ளப்பட்டு வரும் பனை நடுகை நிகழ்ச்சித்திட்டத்திற்கு வலுச்சேர்க்கும் முகமாக இவ்வாண்டு ஆர்வமுள்ள பொது அமைப்புக்களுடன் இணைந்து மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இச்செயற்திட்டத்திற்காக மேலதிகமாக ஐந்து இலட்சம் (500 000) பனம் விதைகளை நாட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், பனம் விதை கொள்வனவு, நடுகை போன்றவற்றிற்கான செலவீனங்கள் மற்றும் கண்காணிப்பு என்பன பனை அபிவிருத்திச் சபையினால் மேற்கொள்ளப்படும்.

எனவே பனை நடுகையில் ஆர்வமுள்ள பொது அமைப்புக்கள், தாம் நடுகைக்கு தெரிவு செய்துள்ள இடம், தேவையான பனம் விதைகளின் எண்ணிக்கை என்பவற்றினை பனை அபிவிருத்திச் சபையின் அபிவிருத்தி முகாமையாளருடன் 31.08.2015 ஆம் திகதிக்கு முன்பதாக தொடர்பு கொண்டு வழங்குவதன் மூலம் தங்கள் பங்கேற்பினை உறுதி செய்து கொள்ள முடியும்.

தலைவர் - பனை அபிவிருத்திச்சபை,
தேசிய வீடமைப்புச் செயலகக் கட்டடம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே
0212222034,
0772321051



30 ஆண்டுகால தனித்துவமிக்க பயிற்சி நிலையம்
1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....



யாழ். கலாலயா பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

மகளிருக்கான 4 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,




மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

- (B) பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள்: (கிழமை நாட்களில் மட்டும்)

சனி, ஞாயிறு மற்றும் கிழமை நாள்
புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன!
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-


## மரண அறிவித்தல்

### திருஞானசம்பந்தர் ஞானகுரு



கோப்பாயை பிறப்பிடமாகவும் யாழ் அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருஞானசம்பந்தர் ஞானகுரு (16.08.2015) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருஞானசம்பந்தர்( V.T சம்பந்தர்)- தையல்நாயகி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகமணி -கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் , கந்தசாமி, மகாலிங்கசிவம்,நடராஜா ஆகியோரின் பெறாமகனும் , காலஞ் சென்றவர்களான சண்முகசுந்தரம் ,அருச்சுணராஜா, பாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு சகோதரனும், நாகேஸ்வரி,மகேஸ்வரி,ராஜேஸ்வரி,செல்வரட்ணம் காலஞ்சென்ற விஜயரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் , சந்திரகுமார், சுகுமார்,வசந்தகுமார்,ஜெயந்தி,துஸ்யந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் யோகானந்தராஜா,சிவப்பிரியன், சிவரூபி, தனலட்சுமி,சந்திரா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் விஜயகுமார்,ஜெயன்,ஸ்ரீகாந், வசந்தி, காலஞ்சென்றவர்களான ஜெகன் உதயகுமார், விஜயந்தி ஆகியோரின் அன்புச்சிறியதந்தையும் கீத்தா,சுயாத்தா,ரமேஸ்,அனித்தா,அனுராஜ், சரண்ஜா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஜெயக்காந்தன், சுரேஸ், சுதர்சன் ,சுமதி , ரஞ்சினி,வனஜா,கிரிஜா,டயான்,பிரதீபன்,சறா,அஜித் ஆகியோரின் அன்புமாமனாரும் சர்மிலன்,பவித்திரா, புருஷோத்மன், தாட்சாயினி,அபினா,ராகவி, கோகுலன்,காயத்ரி காலஞ்சென்ற உத்தமன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.08.2015 வியாழக்கிழமை முற்பகல் 10 .00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

50/9 குறுக்கு வீதி, அத்தியடி
யாழ்ப்பாணம்.
T.P:-021 222 9275, 071 181 1886

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்துடன் நீண்டகால தொடர்பினை கொண்டிருந்தவரும், பெண்களின் அபிவிருத்தி மற்றும் மேம்பாட்டிற்காக தன்னை அர்ப்பணித்தவருமான

சமூக சேவையாளர்

**திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன்**

அவர்களின் மறைவையிட்டு எமது அஞ்சலியை செலுத்துவதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எம் இராஜநாயகம் அன்ட் கம்பனி,
பட்டயக் கணக்காளர்
நிறுவன உரிமையாளர்களும், பணியாளர்களும்.

140, பலாலி வீதி,
திருநெல்வேலி.

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் நீண்டகால அங்கத்துவ நிறுவனமாகிய சிறுவர் கல்விக்கும், பால்நிலை அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் INS & GD நிறைவேற்றுப் பணிப்பாளராகவும், யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் பல்வேறு நிர்வாகப் பதவிகளிலும் அரும்பணி ஆற்றி 16.08.2015 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த

**திருமதி பொன்மலர் இராஜேஸ்வரன்**

அவர்களின் ஆத்மசாந்திக்காக யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் சார்பாகப் பிரார்த்திப்பதோடு, அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள்,
அங்கத்தவர்கள், ஊழியர்கள்
யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம்
இல.76(40) கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 22 05 1937

மறைவு 04 08 2015

**அமரர் பொன்னையா புண்ணியமூர்த்தி**

கடந்த 04.08.2015 சிவபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம் அமரர் பொன்னையா புண்ணியமூர்த்தி அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும், தொலைபேசி வாயிலாகவும் ஆறுதலைத் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலிப்பிரசுரம் வெளியிட்டோருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (19.08.2015) புதன்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். தயவு செய்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.68, செங்குந்தா வீதி,
கல்வியங்காடு.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 25 11 1944

இறப்பு 30 08 2014


**சோமசுந்தரம் விக்கினேஸ்வரன்**

அன்புடனே அரவணைத்தீர்....
பண்புடனே பணிபுரிந்தீர்....
தரணியிலே தலைநிமிர வைத்து
இறைவனடி சேர்ந்த மர்மமென்ன!
நினைக்க, நினைக்க பதைக்கிறது நெஞ்சம்
ஆண்டுகள் ஒன்றுகடந்திட
நீளுது நெஞ்சில் நினைவுகள் என்றும்.....

இணுவில் மேற்கு,
இணுவில்.
021 221 1750

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 20.07.2015
திங்கட்கிழமை
சிவபதமடைந்த எமது
குடும்பத்தலைவர்

அமரர்

**மார்க்கண்டு நவரத்தினம்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று [19.08.2015] புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

செட்டிவளவு ஒழுங்கை,
இணுவில் மேற்கு, இணுவில்.
075 046 8921

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**சந்திரலிங்கம் சுதர்சன்**

(டயலொக் நிறுவனம் - யாழ். அலுவலக ஊழியர்)



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் பக்கஸ்லேன், மானிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட சந்திரலிங்கம் சுதர்சன் 16.08.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் சந்திரலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்) - நாகேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மகனும் பற்குணராஜா(இளைப்பாறிய பாதுகாப்பு உத்தியோகத்தர்) - இராஜலக்ஷ்மி (இளைப்பாறிய ஆசிரியர்) தம்பதி களின் அன்பு மருமகனும் கார்த்தி காவின் (உதவிப் பொறியியலாளர், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை - யாழ்ப்பாணம்) பாசமிகு கணவரும் சுஜீவனின் அன்புச் சகோதரனும் துஷ்யந்தன்(ஆசிரியர் - கிளி/ முழங்காவில் மகாவித்தியாலயம்), துஷாந்தன் (கிராம உத்தியோகத்தர் - காரைநகர்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் சிவபாதம்(கனடா), பாஸ்கரன் (கனடா), காலஞ்சென்ற K.பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும் சிவேஸ்வரி(கனடா), சுப்பிரமணியம்(கனடா), காலஞ்சென்ற சிவபாதம் மற்றும் சிவயோகநாதன்(DGM) ஆகியோரின் பாசமிகு பெறாமகனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2015) புதன் கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூடவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

[illegible],
மானிப்பாய்.

தகவல் :-
குடும்பத்தினர்.

## 2ஆம் ஆண்டு கண்ணீரின் நினைவுகள்



**நாகன் எட்வேட்**

அப்பா எங்கள் தெய்வமே
பார் போற்ற நீங்கள் வாழ்ந்தீர்கள்
ஊர் போற்ற எங்களை வாழ வைத்தீர்கள் நீங்கள் காட்டிய வழியில்
நாங்கள் வாழ்கின்றோம் -
ஆனால் எம் வழிகாட்டி நீங்கள் மாயமாகிப்
போனது ஏனோ?
எங்களை துடி துடிக்க வைத்துவிட்டு ஏன்
சென்றீர்கள் ஆறவில்லையே எங்கள் மனம்
வற்றவில்லையே எங்கள் கண்ணீர்
இறந்தவர்கள் உயிர்ப்பது உண்மை எனில்
எங்களுடன் வந்திடுங்கள் எங்கள் அப்பா.

தோற்றம் 02.06.1942 மறைவு 19.08.2013

கண்ணீரைக் காணிக்கையாக்கி நிற்கும்
குடும்பத்தினர்.
18/1, ஆசீர்வாதம் லேன், ஆஸ்பத்திரி
வீதி, யாழ்ப்பாணம்.

## முள்ளியவளை நெல் சந்தைப்படுத்தும் சபை நெல் கொள்வனவு

கிளிநொச்சி, ஓக.19

விவசாயிகளிடமிருந்து நிர்ணய விலையில் நெல் கொள்வனவு செய்யும் நடவடிக்கையில் முள்ளியவளை நெல் சந்தைப்படுத்தும் சபை ஈடுபட்டு வருகின்றது. 1 கிலோ கோறா நெல் (சிவப்பு ) 45 ரூபாவுக்கும், 1 கிலோ சம்பா நெல் 50 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்படுகின்றது.

அதேவேளை நெல் கொள்வனவின் போது சில நிபந்தனைகள் விவசாயிகளுக்கு விதிக்கப்பட்டுள்ளது. ஒரு விவசாயியிடமிருந்து ஆகக் கூடுதலாக இரண்டாயிரம் கிலோ நெல்லை மட்டுமே கொள்வனவு செய்வதாகவும் விவசாயிகள் நெற் செய்கையின்போது கமநல சேவைத்திணைக்களமிடமிருந்து பசளை மருந்து பெற்றமைக்கான பதிவு கள் சமர்ப்பிப்பது அவசியம் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை நெல் நிறைக்கும் பையில் குறைந்தது 51 கிலோ நெல் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், அதனடிப்படையில் முதல் மூன்று தொடக்கம் ஐந்து பைகள் நிறுக்கப்படும் வேளை ஒவ்வொரு பைகளிலும் 51 கிலோ இருக்க வேண்டும் என்றும், ஏனைய நெல் பைகள் நிறையிடாது சம நிறையில் கருதப்பட்டு கொள்வனவு செய்யப்படுவதாகவும், ஆனாலும் இறுதி மூன்று நெல் பைகளும் எடையிடப் படுவதாகவும் இதன்போது ஏதாவது ஒரு நெல் பையில் எடை 51 கிலோவிற்கு குறைவாக காணப்பட்டால் அதில் எந்த எடை ஆகக் குறைவானதோ அதே இடையே ஆரம்பம் முதல் கொள்வனவு செய்யப்பட்ட நெல் பைகள் அனைத்திற்கும் கணிக்கப்பட்டு கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவதாகவும் விவசாயிகள் தெரிவித்தனர்.

விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்யப்படும் நெல்லுக்கான கொடுப்பனவுகள் யாவும் அவர்களின் இலங்கை வங்கி கணக்குக்கு நெல் சந்தைப் படுத்து சபையினரால் வைப்பிலிடப்பட்டு வருதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ந-109)

## அனைவரையும் இணைத்து தேசிய அரசு அமைக்கப்படும்

### அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவிப்பு

கொழும்பு, ஓக.19

தேர்தல் வெற்றியை அடுத்து அனைவரையும் இணைத்து தேசிய அரசு ஒன்றை அமைப்போம் என அமைச்சர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

தேசிய அரசு அமைக்கப்பட்டதன் பின்னர், 6 மாதங்களில் நாட்டில் பெரும் மாற்றமொன்றை ஏற்படுத்துவோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்த சமயம் சிங்கள மொழி ஊடக மொன்றுக்குக் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் முடிவுகள் இன்னமும் முழுமையாக வெளியாகாத நிலையில், ஐக்கிய தேசியக் கட்சி 105 தொடக்கம் 107 வரையான ஆசனங்களைப் பெற்று ஆட்சியமைக்கும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

(ந)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவர்களைக் கேட்டு வேலைவாய்ப்பு, கொடுப்பனவு வழங்க வேண்டாம்

## பொதுமக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஓக.19

மக்களுக்கான வேலை வாய்ப்பு மற்றும் சுயதொழில் முயற்சிக்கான கொடுப்பனவுகளை வழங்கும்போது முகவர்களை மட்டும் கேட்டு வழங்காது, அரச அதிகாரி அதாவது பிரதேச செயலர், கிராம அலுவலர்களின் அனுசரணையுடன் வழங்கப்பட்டால் அவை பாதிக்கப் பட்ட மக்களை சரியாகச் சென்றடைய வாய்ப்பு உண்டு என பாதிக்கப்பட்ட மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். குறிப்பாக அமைச்சுக்களால் தெரிவு செய்யப்பட்ட முக வர்களோ அன்றி இணைப்பாளர்களோ மக்களுக்கான கொடுப்பனவுகளையோ அன்றி வேலைவாய்ப்புக் களையோ வழங்கும்போது அவர்கள் தமது குடும்ப உறுப்பினர்களையும் தமது உறவினர்களையும் கருத் தில் கொண்டு செயற்படுகின்றார்கள். அதனால் தொழில் வாய்ப்புக்கள் மற்றும் கொடுப்பனவுகள் ஒரே குடும் பத்தை சென்றடைகின்றன. இவைகள் மாற்றப்பட வேண்டும். இதனால் மக்கள் விரக்தி நிலையை அடைந் துள்ளனர். கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மூலமாக வும் தெரிவுகளை மேற்கொள்ளலாம். அதுமட்டுமல்ல வழங்கப்படும் உதவிகள் எவற்றையும் பகிரங்கப்படுத் துவதில்லை.

உதாரணமாக தையல் இயந்திரம் வைத்திருப்ப வர்க்கே தையல் இயந்திரத்தை வழங்கியும், அவருக்கு தொழில் வாய்ப்பையும் வழங்கினால் உண்மையில் பாதிக்கப்படுவது எதுவுமற்ற ஏழை மக்கள். இப்படியான முறைகேடுகள் நடை பெறாது தடுக்கப்பட வேண் டும். அத்தோடு மீள்பரி சீலனை செய்யப்படவேண்டும் எனவும் மக் கள் தெரிவித்துள்ளனர். (ற-500)

# புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

யாழ்ப்பாணம், ஓக.19

இராமகிருஸ்ண மிஷன் வெளி யீடுகளின் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் இன்று பிற்பகல் 4மணிக்கு இடம்பெறவுள்ளது. நல் லூர் முருகன் ஆலயப் பின்வீதி யிலுள்ள மூத்ததம்பி மடத்தில் இவை நடைபெறும்.

இந்தக் கண்காட்சியும் வெளி யீடும் இராமகிருஷ்ண மிஷன் துறவியான ஸ்ரீமத் சுவாமி ரித மயானந்த ரால் ஆரம்பிக்கப்பட வுள்ளது. நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடைபெறும் இந்த நிகழ்வு தினமும் மாலை 4மணி முதல் 7மணி வரை இடம்பெறும். எனவும், சப்பறம், தேர், தீர்த்தத் திருவிழா வின்போது காலை 7மணி முதல் மாலை 7வரை இடம்பெறும் எனவும் ஏற்பாட்டா ளர்கள் அறிவித்துள்ளனர். (ற)


**வேலையாள்கள் தேவை**

இந்திய மற்றும் நுவரெலிய பூக்களால் மாலை கட்ட தெரிந்தவர்கள் தேவை.

தொடர்பு : 077 296 3848

**வீடு வாடகைக்கு**

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதியில் பெரிய Hall ஐந்து அறைகள், சமையல் அறை இணைந்த குளியல் அறை , பிரத்தியேக குளியல் அறை, வாகனத் தரிப்பிட வசதியுடன் வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு :-077 900 7481

**மிருகவைத்திய சேவை**

தாவடிக்கு அண்மையில் மிருகவைத்திய சேவைகளுக்கு.

தொடர்பு: 077 973 8802

**விற்பனைக்கு**

4 மாதம் நிரம்பிய கிறேடன் ஆண் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 075 742 6574

**வீடு வாடகைக்கு**

வட்டு இந்துக்கல்லூரிக்கு மிக அண்மையில் Carpet Main Road முகப்பு, சமையலறை, சாப்பாட்டறை அடங்கலான 6 அறைகள், வசதியான வீடு தளபாடங்களுடன், உடன் குடிபுகலாம்.

தொடர்பு: 077 203 5419

NORTH LEAD

Computer & Accessories Wholesaler, Computer Repairing & Services
Computer & Language Classes, Computer Printing & Designing.

**கண்காணிப்பு கமெராக்கள் விசேட விலையில்**



4Channel Full Set: 34850/=
8Channel Full Set: 53250/=
12Channel Full Set: 84700/=
Camera Starting From: 3750/=
AHD Camera & DVR Available

உங்கள் வீடுகள் மற்றும் வியாபார ஸ்தலங்களின் பாதுகாப்பினை கண்காணிக்க குறைந்த செலவில் கூடிய உத்தரவாதத்துடன் ஒரே நாளில் பொருத்தி தருகின்றோம். உங்கள் கமெராக்களை நீங்களே பரிசோதித்து நம்பிக்கையை உறுதி செய்யுங்கள்

சகல கண்காணிப்பு கமெரா உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்

# 1-2 Years Warranty For Camera, DVR, HDD & LED
# Currency & Number Plate Viewing Ability
# Free Mobile View & Online Setting
# 100% After Service

எமது சேவை வடமாகாணம் முழுவதும்

**North Lead CCTV Security System**

No: 328, Stanley Road, Jaffna. (Near to Ariyakulam Junction) Tel: 021-222 4459, 0774192275

Branch: No:12, Kanagapuram Road, Kilinochchi (Near to Barathi Hotel) Tel/Fax: 021-206 0909, 0772533390



* பல் மூக சீராக்கல் (Consultant orthodontist)
* முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்.

* மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
* ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
* நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
* வேர்முறை சிகிச்சை (Root canal Filling)
* நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
* பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்ஷினி)

**சகல விதமான வைபவங்களுக்கும்**

நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு மிகமிக குறைந்த விலையில் அசல் யாழ்ப்பாணக் கறி சுவைத்திட ஆச்சி ஹொட் பூட்





இல. 117, பிறவுண் வீதி யாழ்ப்பாணம்.

கிளைகள்: இராமநாதன்வீதி(Campus)

தொடர்பு- 021 222 2092, 021205745?, 021 205 7456


விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், நீர் வழங்கல், உணவு வழங்கலும் விநியோகமும், சுற்றாடல் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, வட மாகாணம்

**பெறுகை அறிவித்தல்**

## 2015/2016ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்புச் சேவைக்கான விலைமனுக் கோரல்

## பெறுகை இல: NP/06/03/CLE/2015

தலைவர், மாகாண அமைச்சுப் பெறுகைக்குழு அவர்களினால் வடமாகாண விவசாய அமைச் சுக்குட்பட்ட காரியாலயங்களுக்கான 2015/2016ஆம் ஆண்டுக்கான சுத்திகரிப்புச் சேவையை (Cleaning Service) பின்வரும் மாவட்டங்களில் வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| சுத்திகரிப்புச் சேவை வழங்கவேண்டிய மாவட்டம் | எதிர்பார்க்கப்படும் / தேவையான ஆளணி எண்ணிக்கை |
|---|---|
| யாழ்ப்பாணம் | 10 |
| வவுனியா | 10 |
| கிளிநொச்சி | 7 |
| மன்னார் | 4 |
| முல்லைத்தீவு | 7 |
| **மொத்தம்** | **38** |

1) சேவை வழங்குனர்கள் சுத்திகரிப்புச் சேவையை வழங்குதலுக்கான வியாபாரப்பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந் தது 3 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
2) சேவை வழங்குனர்களின் தலைமைக் காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் வடக்கு மாகாணத்தில் அமைந்திருத்தல் வேண்டும் என்பதுடன், சேவையை வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் வழங்க கூடியதாக இருத்தல் வேண்டும்.
3) சேவை வழங்குனர்கள் பெறுகைக்கான ஆங்கிலத்தில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை இல 04 புருடிலேன் அரியாலை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வட மாகாண விவசாய அமைச்சு அலுவலகத்தில் 20.08.2015 தொடக்கம் 09.09.2015 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 3.00 மணிவரை மீளளிக்கப்படாத வைப்புப்பணமாக ரூபா 1000.00 ஐ செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்
4) பெறுகை ஆவணங்கள் 10.09.2015 ஆம் **திகதி பி.ப 2.00 மணிக்கு** முன்பதாக கிடைக்கக் கூடியவாறு **"தலைவர், மாகாண அமைச்சு பெறுகைக் குழு, விவசாய அமைச்சு, வடமாகாணம், இல 04,புருடி லேன், அரியாலை, யாழ்ப்பாணம்"**. என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது வட மாகாண விவசாய அமைச்சு அலுவலகத்திலுள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.
5) சகல கேள்விகளுடனும் ரூபா 80,000/- பெறுமதியான, கேள்விப்பிணை ஒன்று இணைக் கப்படல் வேண்டும்.
6) கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்ப தற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதி காரம் உள்ளது.

**ம.பற்றிக் டிறஞ்சன்**
**தலைவர்,மாகாண அமைச்சு பெறுகைக்குழு,**
**விவசாய அமைச்சு, வட மாகாணம்,**
**04,புருடி லேன்**
**அரியாலை**
**யாழ்ப்பாணம்.**

திகதி : 19.08.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மண்டைதீவு

# திருவெண்காடு ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான மன்மத வருட மஹோற்சவ பெருவிழா 20.08.2015

சித்திவிநாயகப் பெருமான் மெய்யடியார்களே!

தீவகத்தின் தலைத்தீவாய் விளங்கும் மண்டைதீவில் திருவெண்காடு எனும் புண்ணிய சேஷத்திரத்தில் எழுந்தருளி துயர்தீர்க்கும் கருணை வள்ளலாகிய ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானுக்கு நிகழும் மன்மத வருடம் ஆவணி மாதம் 03 ஆம் நாள் 20.08.2015 வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் மஹோற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்கள் மஹோற்சவம் நிகழ சித்திவிநாயகப் பெருமான் திருவருள் பாலித்துள்ளார்.

| | | |
|---|---|---|
| 20.08.2015 வியாழக்கிழமை | கொடியேற்றம் | மு.ப. 10.35 மணி |
| 27.08.2015 வியாழக்கிழமை | வேட்டைத்திருவிழா | பி.ப. 04.30 மணி |
| | சப்பைரதம் | பி.ப. 06.00 மணி |
| 28.08.2015 வெள்ளிக்கிழமை | தேர் | மு.ப. 10.00 மணி |
| 29.08.2015 சனிக்கிழமை | தீர்த்தம் | மு.ப. 10.00 மணி |
| | கொடியிறக்கம் | இரவு 08.30 மணி |

- பத்து நாள்களும் விசேட நாதஸ்வர தவில் கச்சேரிகளும், சமய செற்பொழிவுகளும், பஜனைகளும் நடைபெறும்.
- பத்து நாள்களும் அடியார்களுக்கு அன்னதானம் (மாகேஸ்வர பூசை) வழங்கப்படும்.

**அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வருகை தருவதோடு, எம்பெருமானுக்கு வேண்டிய பால், இளநீர், புஸ்பம் என்பவற்றைக் கொண்டுவருமாறு வேண்டுகின்றோம்.**

சித்திவிநாயகரின் பெருவிழா காண வாரீர் வாரீர்....
அழகொழுகும் திருக்கோலம் பாரீர் பாரீர்.

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

பொ.வி.திருநாவுக்கரசு,
இரத்தினசபாபதி யோகநாதன் (இந்திரன்)
ஆலய தர்மகர்த்தாக்கள்
மற்றும் மஹோற்சவ உபயகாரர்கள்.
சித்திவிநாயகப் பெருமான் தொண்டர்கள்.

திருவெண்காடு, மண்டைதீவு.
T.P.No:021 321 3937
Web add-www.thiruvenkadumandaitivu.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்கள் ஈ-மெயில் பயனாளியா?

ஈ–மெயிலில் இரட்டை மின்னஞ்சலை பயன்படுத்தும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ஈ–மெயிலில் கணக்கு தொடங்கும் எல்லோருக்குமே, அவர்கள் வழக்கமான இமெயில் முகவரியுடன் உதாரணம் gmail.com அதே பெயரில் உதாரணம் googlemail.com என இன்னொரு முகவரியும் இருக்கும். உங்கள் சொந்த மெயிலைக் கொடுக்க வேண்டாம் என நினைக்கும் இடங்களில் இந்த கூகுல் மெயில் முகவரியைச் சமர்ப்பிக்கலாம். இதற்கு வரும் மெயில்களும் உங்கள் இன்பாக்சில்தான் வந்து சேரும். அதற்கேற்ப ஈ–மெயிலில் உள்ள பில்டர் வசதியைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.




# விண்டோஸ் 10:
## புதிய வசதிகள் என்னென்ன?

கணனி துறையில் முடி சூடா மன்னனாகவிளங்கிவரும்மைக்ரோசொப்ட் தனது முதல் இயங்குதளமான எம்.எஸ் விண்டோஸ் 1 ஐ கடந்த 1985 ஆண்டு வெளியிட்டது.

தற்போது சரியாக 25 வருடங்கள் அதாவதுகால்நூற்றாண்டுக்குப்பிறகு விண்டோஸ் 10 இயங்குதளத்தை வெளியிட்டுள்ளது. இந்த 25 வருடங்களில் அதன் வளர்ச்சி அபரிமிதமானது. எனினும் அதன் முந்தைய வெளியீடான விண்டோஸ் 8 எதிர்பார்த்த அளவு வாடிக்கையாளர்களைக் கவரவில்லை.

எனவே உடனடியாக ஒரு புதியதை வெளியிட்டாக வேண்டிய கட்டாயத்தில் விண்டோஸ் 10 வெளிவந்துள்ளது. கடந்த ஜுலை மாதம் வெளியிடப்பட்ட விண்டோஸ் 10 வாடிக்கையாளர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. வெளியிடப்பட்ட 24 மணித்தியாலங்களில் 1 கோடிக்கு அதிகமானவர்கள் இந்த இயங்குதளத்தைப் பயன்படுத்தி இருப்பதே இதற்குச் சாட்சி. சரி விண்டோஸ் 10ன் முக்கிய அம்சங்களைப் பார்ப்போம்:

விண்டோஸ் 7இல் இருந்தது போன்று ஸ்டார்ட் மெனுவை (Start Menu) சிறிதாக மீண்டும் கொண்டுவந்துள்ளது. மேலும் இதில் இண்டர்நெட் எக்ஸ்புலோரருக்கு (Internet Explorer) பதிலாக கோர்டானா (Cortana) என்ற புதிய செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலமாக உங்கள் தேடல் எளிமையாக இருக்கும்.

ஒரே நேரத்தில் நான்கு அப்ளிகேசன் வரை பயன்படுத்தலாம்.

எக்ஸ்புலோரருக்கு மாற்றாக எட்ஜ் பிரவுசர் (Edge Browser) இணைக்கப்பட்டுள்ளது. இதன் அதிவேக பிரவுசர் மூலம் உங்கள் நேரம் மிச்சப்படும்.

விளையாட்டு பிரியர்களுக்காகவே எஸ் பொக்ஸ் (X BOX) செயலியும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரு சிறந்த கேமிங் அனுபவத்தை பெறலாம். சாதாரண கணனியை மட்டுமன்றி தொடுதிரை வசதியுள்ள சாதனங்களையும் மனதில் வைத்து இது வடிவமைக்கப்பட்டுள்ளது.



## நீடித்து உழைக்கும் மின்கலத்துடன் Asus ZenFone Max

புவிற்வி நிறுவனமாது ZenFone Max எனும் புத்தம் புதிய ஸ்மார்ட் கைப்பேசியினை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளது. இக் கைப்பேசியானது ஒரு முறை சார்ஜ் செய்து நீண்ட நாட்களுக்கு பயன்படுத்தக்கூடிய வகையில் 5,000 mAh மின்சக்தியை வழங்கக்கூடிய மின்கலத்தினை உள்ளடக்கியதாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும் 5.5 அங்குல அளவுடைய Gorilla Glass 4 தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன், Snapdragon 410 Processor, பிரதான நினைவகமாக 2GB RAM என்பவற்றினை உள்ளடக்கியுள்ளது. இவை தவிர 13 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 5 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா என்பனவும் தரப்பட்டுள்ளன.



யாழ்.குடாநாட்டில் சில தினங்களாகக் காணப்படும் அதிக வெப்பமான காலநிலையை அடுத்து செவ்விளநீர், வெள்ளரிப்பழம், கெக்கரிப்பழம் என்பன பெருமளவில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. செவ்விளநீர் ஒன்று 60 ரூபா முதல் 70ரூபா வரை விற்பனைசெய்யப்படுகின்றது. (ற–135)

## பெரிய வெங்காய இறக்குமதியை நிறுத்த வேண்டுமென கோரிக்கை

கொழும்பு, ஓக.19

தற்போது உள்ளூர் பெரிய வெண்காயத்தின் அறுவடை ஆரம்பமாகியுள்ளது என்றும், அதேவேளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பெரிய வெண்காயமே சந்தையை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதாகவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதன் காரனமாக உள்நாட்டு உற்பத்தியான பெரிய வெண்காயத்தின் கொள்வனவு விலை கிலோ ஒன்று 50 முதல் 70 ரூபாவாகக் காணப்படுகின்றது என்றும், உள்ளூர் பெரிய வெண்காயத்தை கிலோ ஒன்று 100 ரூபாவுக்கு விற்பனை செய்யக்கூடியதாகப் பெரிய வெண்காய இறக்குமதியை இடைநிறுத்தவோ அல்லது வரி விதிக்கவோ வேண்டும்என்றும்அவர்கள்கோரிக்கை விடுத்துள்ளனர்.

சந்தையில் தற்போது இறக்குமதியாகும் வெளிநாட்டு பெரியவெங்காயமே பெருமளவில் விற்பனை செய்யப்படுகின்றது என்றும் கிலோ ஒன்று 50 க்கும் 80 க்கும் இடைப்பட்ட விலைகளில் விற்பனையாகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது சிகிரியா, தம்புள்ளை, வெவலவெவ ஆகிய பிரதேசங்களில் விவசாயிகள் பெரிய வெண்காயத்தை அறுவடை செய்ய ஆரம்பித்துள்ளனர். (ற–22)

## வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்ததால் அதிர்ச்சியில் வாகன உரிமையாளரும் சாவு

தென்மராட்சி, ஓக.14

தனது வாகனத்தில் விபத்துக்குள்ளாகி ஒருவர் உயிரிழந்ததை அடுத்து அந்த வாகனத்தின் உரிமையாளர் அதிர்ச்சியில் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை நடந்துள்ளது.

அதிகாலை 1 மணியளவில் மீசாலை ஏ–9 வீதியில் வந்த ஹைஏஸ் வாகனம் சைக்கிளில் வந்த ஒருவரை மோதிவிட்டுச் சென்றுள்ளது. அதில் காயமடைந்தவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும் அங்கு சிகிச்சை பயனளிக்காமல் சாவடைந்தார். மீசாலை கிழக்கைச் சேர்ந்த வீ.தேவநாதன் (வயது–40) என்பவரே உயிரிழந்தார்.

இது குறித்து சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்த பொலிஸார், குறித்த நபர் [illegible] சைக்கிளை மோதிய வாகனம் [illegible] மீற்றர் தூரம்வரை இழுத்துச் சென்றது என்றும் அங்கு அவரை விட்டு விட்டு வாகனச் சாரதி வாகனத்தை உரிமையாளர் வீட்டுக்குக் கொண்டு சென்றுள்ளார். வாகனத்தில் பயணித்த வாகன உரிமையாளர் அதிர்ச்சியில் அங்கு சாவடையவே வாகனத்தடன் சாரதி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

குறித்த வாகனச் சாரதியை எதிர் [illegible] நீதிவான் உத்தரவிட்டார். (ற–9)



தலைமன்னார் புனித லோறன்சியார் ஆலய 117ஆவது ஆண்டுத் திருவிழா கடந்த முதலாம் திகதி பங்கு மக்கள் முன்னிலையில் பங்குத் தந்தை நவரட்ணம் அடிகளாரினால் கொடியேற்றத்துடன் புனிதரின் நவநாள் ஆரம்பமாகி நடைபெற்றது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யேமனில் கடும் போர்

## 24 மணி நேரத்தில் 80 பேர் சாவு

ஏடன்,ஓக.19
யேமனின் அரசு ஆதரவுப் படையினருக்கும், கிளர்ச்சிப் படையினருக்கும் இடையே நடைபெற்று வரும் போரில், கடந்த 24 மணி நேரத்தில் 80 பேர் உயிரிழந்துள்ளதாக இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
இந்தச் போரின் போது சாவடைந்த கிளர்ச்சியாளர்களின் 50 உடல்கள் தாயெஸ் நகரில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. மேலும், போரில் 31 அரசு ஆதரவுப் படையினர் உயிரிழந்துள்ளனர்.
சவூதி அரேபியா தலைமையிலான கூட்டுப் படையினரின் வான்வழித் தாக்குதல்களின் உதவியுடன் தாயெஸ் நகரில் அரசு ஆதரவுப் படையினர் முன்னேற்றம் கண்டு வருகின்றனர் என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
கடந்த மார்ச் மாதத்தில் இருந்து நடந்துவரும் உள்நாட்டுப் போரில் கிட்டத்தட்ட 4 ஆயிரத்து 300 பேர் இதுவரை உயிரிழந்துள்ளதாகவும், 21 மில்லியன் மக்கள் புலம் பெயர்ந்துள்ளனர் எனவும் அங்கிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)





## ஒபாமா மீண்டும் திருமணமா?

வொஷிங்டன்,ஓக.19
அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா மீண்டும் திருமணம் செய்து கொள்ள இருப்பதால் அவருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என சமூக வலைத்தளத்தில் பதிவு செய்த பிரான்ஸ் அமைச்சர் தற்போது சர்ச்சையில் சிக்கியுள்ளார்.
உலகில் நடைமுறையில் உள்ள மொழிகளின் ஒவ்வொரு வார்த்தைக்கும் சில வேறு அர்த்தங்களும் உண்டு.
சில நேரங்களில் ஒரு வார்த்தையை தவறான இடத்தில் உபயோகித்தால் அதன் அர்த்தமே தலைகீழாக மாறி விடும் என்பதற்கு அண்மைய நிகழ்வு ஒரு சிறந்த உதாரணம்.
பிரான்ஸ் நாட்டு வாழ்க்கைச் சூழல் துறை பெண் அமைச்சரான செகோலீனே றொயல் சில தினங்களுக்கு முன்னர் தனது ரூவிற்றர் பக்கத்தில் பதிவேற்றம் ஒன்றை செய்துள்ளார்.
அதில், பாரீஸ் நகரில் திருமணம் செய்யவுள்ள ஜனாதிபதி ஒபாமாவுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்ற பரபரப்பான பதிவை வெளியிட்டுள்ளார்.
அமைச்சரைப் பின் தொடரும் நபர்கள் இதனைப் படித்து அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்துள்ளனர். ஒபாமாவுக்குத் திருமணம் நடைபெற்று 22 வருடங்கள் ஆகியுள்ள நிலையில், தற்போது மீண்டும் ஒரு திருமணமா? என்ற குழப்பம் எழுந்துள்ளது.
அமைச்சர் பதிந்த பதிவு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியதை கவனித்த அவர், சில நிமிடங்களுக்குப் பின்னர் அந்த சர்ச்சைக்குரிய பதிவை நீக்கிவிட்டு சரியான வார்த்தையைப் பயன்படுத்தி மீண்டும் ஒரு பதிவு செய்துள்ளார்.
இது குறித்து செய்தியாளர்கள் கேள்வி எழுப்பிய போது, ஆங்கிலத்தில் ஒரு வார்த்தைக்கு சில வேறு அர்த்தங்கள் இருப்பது போல பிரெஞ்ச் வார்த்தைகளுக்கும் வேறு சில அர்த்தங்களும் உள்ளன. இருப்பினும், தான் அந்த வார்த்தையைப் பயன்படுத்தி குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கக் கூடாது. இணையத்தளத்தில் அந்தப் பதிவு பரபரப்பை ஏற்படுத்தியதால் அதனை உடனடியாக நீக்கிவிட்டதாகவும் அவர் பதிலளித்துள்ளார்.(ஐ)



# குவைத் ஆலையில் பயங்கரத் தீ விபத்து

குவைத்,ஓக.19
குவைத் நகரின் மையப்பகுதியில் உள்ள அந்த நாட்டின் அரசுக்குச் சொந்தமான அல் ஐபா பெற்றோல் சுத்திகரிப்பு ஆலையில் பயங்கரத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.
இந்தத் தீ விபத்து பற்றிய தகவல் அறிந்ததும் ஏராளமான வாகனங்களில் விரைந்து சென்ற தீயணைப்பு படையினர் தீயை அணைக்கும் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.
ஆலையின் பிறபகுதிகளுக்கு தீ பரவாமல் இருக்கத் தேவையான தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அந்தச் சுத்திகரிப்பு ஆலைத் தொழிலாளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டதாகவும் குவைத் தேசிய பெற்றோலிய நிறுவனம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் சேத விபரங்கள் இன்னும் அறிவிக்கப்படவில்லை.(ஐ)

## பொலிஸ் அதிகாரிகள் சுட்டுக்கொலை

மானாகுவா, ஓக.19
மத்திய அமெரிக்க நாடுகளில் ஒன்றான நிகரகுவா நாட்டின் தென் பகுதியில் குற்றவாளிகளை ஏற்றிச் சென்ற வாகனத்தை மறித்த ஒரு குழுவினர் பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடுகளை நடத்தியுள்ளனர். அதில் 5 பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளனர். நிகரகுவா நாட்டின் தென்பகுதியிலிருந்து புந்தா கோர்டா பகுதிக்கு, குற்றுச்செயல்களில் ஈடுபட்ட சிலரைக் பொலிஸார் கைது செய்து ஒரு வாகனத்தில் ஏற்றிச் சென்று கொண்டிருந்தனர்.
அப்போது அவர்களின் வாகனத்தை துப்பாக்கி முனையில் சிலர் வழிமறித்தனர். பொலிஸார் பிடித்துச் சென்றவர்களில் சிலரை விட்டு விடும்படி அவர்கள் எச்சரித்தனர். அதற்கு அந்த வாகனத்தில் இருந்த பொலிஸ் அதிகாரிகள் 5 பேரும் மறுத்தனர். இதனால் ஆத்திரமடைந்த அவர்கள் பொலிஸாரை நோக்கி சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். இதில் சம்பவ இடத்திலேயே 5 பொலிஸ் அதிகாரிகளும் கொல்லப்பட்டுள்ளனர். (ஐ)

## பிரணாப் முகர்ஜியின் மனைவி சாவு

புதுடில்லி,ஓக.19
ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் மனைவியும், இந்தியாவின் முதல் பெண்மணியுமான சுவ்ரா முகர்ஜி சாவடைத்துள்ளார் என அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் மனைவி சுவ்ரா திடீர் உடல்நலக் குறைவால் டில்லி இராணுவ ஆராய்ச்சி மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். சுவாச பிரச்சினையால் அவதிப்பட்ட சுவ்ரா தொடர்ந்து தீவிர சிகிச்சை



பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சுவ்ரா முகர்ஜி, சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# எகிப்தில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்கள் வலுப்பு

கெய்ரோ,ஓக.19
எகிப்தின் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டங்களை வலுப்படுத்த அந்த நாட்டின் ஜனாதிபதி அப்தல் பட்டா அல் சிசி ஒப்புதல் அளித்துள்ளார்.
இஸ்லாமியவாத கிளர்ச்சிக்காரர்களின் அச்சுறுத்தலுக்குப் பதிலாகவே இதைச் செய்வதாக அவர் தெரி வித்துள்ளார். பயங்கரவாதக் குழுவை அமைப்பதாகவோ அல்லது அத்தகைய குழுவுக்குத் தலைமை தாங்குவதாகவோ யாரேனும் குற்றங் காணப்பட்டால் அவர்கள் ஆயுள் தண்டனை• அல்லது சாவுத்தண்டனையைக் கூட எதிர்நோக்கலாம்.
அந்த பயங்கரவாத குழுவைப் பின்பற்றுபவர்கள் பத்து வருடங்கள் வரையிலான சிறைத் தண்டனையை எதிர்நோக்கலாம்.
கிளர்ச்சிக்குழுத் தாக்குதல் தொடர்பிலான அரசின் தகவல்களுடன் முரண்படுகின்ற தகவல்களை வெளியிடும் செய்தியாளர்களுக்கு குறைந்தது 25 ஆயிரம் டொலர்கள் வரை அபராதம் விதிக்கப்படலாம்.
எகிப்தில் அரசுக்கு எதிரான கருத்துக்களை வெளியிடுவோர் மீது குற்றம் சுமத்தி அவர்களைக் கைது செய்யவும், அங்கு கருத்துச் சுதந்திரம் மீது ஏற்கனவே இருந்துவரும் தடைகளை மேலும் அதிகரிக்கவும் இந்தச் சட்டம் பயன்படுத்தப்படும் என்று மனித உரிமை குழுக்கள் தெரிவித்துள்ளன. சினாய் பகுதியில் கிளர்ச்சிக்காரர்களின் தாக்குதல்களில் நுற்றுக்கணக்கான பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். எகிப்தில் மிகத் தீவிரமாக செயல்பட்டுவரும் கிளர்ச்சிக்குழு, இஸ்லாமிய அரச அமைப்புக்கு தனது ஆதரவைத் தெரிவித்துள்ளது. (ஐ)

## நடுவானில் விமானங்கள் மோதல்

சான்டியாகோ,ஓக.19
அமெரிக்கா பிரேஸில் எல்லை அருகே, நடுவானில் இரண்டு சிறிய ரக விமானங்கள் மோதி விபத்துக்குள்ளானதில், விமானிகள் உட்பட, நான்கு பேர் உயிரிழந்துள்ளனர்.
அமெரிக்காவின் சான்டியாகோ நகரில் உள்ள, பிரவுன்பீல்டு விமான நிலையம் நோக்கி, இரு சிறிய விமானங்கள் சென்று கொண்டிருந்தன. சான்டியாகோ, தேசிய வன விலங்கு சரணாலயத்துக்கு மேலே விமானங்கள் பறந்து கொண்டிருந்தபோது, அவை எதிர்பாராத விதமாக மோதிக் கொண்டன. இதையடுத்து, அவை பயங்கர சத்தத்துடன் கீழே விழுந்து நொறுங் கின. தீப்பிடித்து விழுந்த வேகத்தில், விமானங்கள் வெடித்துச் சிதறின. இந்த விமான விபத்தில், விமானி கள் உட்பட, நான்கு பேர் உயிரிழந் துள்ளனர். மேகமூட்டம் காரணமாக, விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று, முதற்கட்ட தகவல்கள் தெரி விக்கின் றன. இந்த விபத்துக் குறித்து, விசாரணைக்கு உத்தர விடப்பட்டுள்ளது. (ஐ)

# சீனத் துறைமுகத்தில் மீண்டும் வெடிவிபத்து

பீஜிங்,ஓக.19
சீனாவில் உள்ள டியான்ஜின் துறைமுகத்தில் கடந்த வாரம் திடீர் வெடி விபத்து ஏற்பட்ட நிலையில் நேற்று முன்தினமும் மீண்டும் ஒரு விபத்து ஏற்பட்டுள்ளது. இதனால் துறைமுகம் முழுவதும் தீப்பற்றிக் கொண்டது.
ஏற்கனவே இடம்பெற்ற தீ விபத்தின் போது பல்லாயிரக்கணக்கான கார்கள் மற்றும் பொருள்கள் எரிந்து நாசமாகின. இந்தத் தீ விபத்தில் 21 தீயணைப்பு வீரர்கள் உட்பட 114 பேர் உயிரிழந்துள்ளனர். 85 தீயணைப்பு வீரர்கள் உட்பட 100 பேரைக் காணவில்லை. அவர்களும் உயிரிழந்திருக்க கூடும் என அஞ்சப்படுகிறது. 725 பேர் காயமடைந்துள்ளனர். அவர்களுக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அங்குள்ள சில குடோன்களில் சோடியம் சைனைடு இரசாயனம் சேமித்து வைக்கப்பட்டுள்ளது. அவற்றில் தீப்பற்றிக் கொண்டால் விஷவாயு கசிந்து பெரும் உயிரிழப்பு ஏற்படும் வாய்ப்புள்ளது. எனவே அவற்றை அப்புறப்படுத்தும் பணிகளில் மீட்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். அதற்காக விசேஷ முகமூடி அணிந்த வீரர்கள் இந்த பணிகளில் ஈடுபட்டுள்ளார்கள். மீட்புப் பணி நடந்து கொண்டிருந்த நேரத்தில் நேற்று 2 ஆவது தடவை வெடி விபத்து ஏற்பட்டுள்ளது. உடனடியாக அங்கு தீயணைப்பு வீரர்கள் விரைந்து சென்று தீ பரவாமல் கட்டுப்படுத் தினார்கள். இதனால் பெரிய பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் நடைபெற்ற வித்தியாசமான போட்டி

நியூயோர்க்,ஓக.19
அமெரிக்காவில் தாடி மற்றும் மீசை வளர்ப்பில் ஆர்வம் கொண்டவர்கள் பங்கேற்கும் போட்டிகள் மூன்றாம் வருடமாக அண்மையில்ஹொலிவூட் பகுதியில் நடத்தப்பட்டன. அதில், 12 வகையானபோட்டிகள்நடத்தப்பட்டன. பெண்களுக்கெனவும், சிறுவர்களுக்கெனவும் பிரத்தியேகப் போட்டிகளும் நடைபெற்றன.
காடுபோல அடர்ந்த தாடிகள் வகையான முதல், ஆட்டுத் தாடி வரை பல்வேறு தாடிகளும், கூர்மையான மீசை முதல் பல்வேறு வகையான மீசைகளும் கொண்ட போட்டியாளர்கள் படையெடுத்திருந்தனர். தங்களது தாடியை வித்தியாசமான வடிவங்களில் போட்டியாளர்கள் அலங்கரித்துக் கொண்டு பங்கேற்றமை, ஒருபுறம் அருவருப்பாகவும் மறுபுறம் ஆச்சரியம் அளிப்பதாகவும் இருந்தது. சில மேற்கத்திய நாடுகளில் மீசை, தாடி போன்றவை அருவருப்பாகக் கருதப்படும் நிலையில், இது போன்ற போட்டிகள் மீசை, தாடி வளர்ப் போருக்கு உற்சாகம் அளிப்பதாக வுள்ளது. (ஐ)

# பாங்கொக்கில் குண்டுவெடிப்பு

## 27 பேர் சாவு


பாங்கொக்,ஓக.19
தாய்லாந்தின் தலைநகர் பாங்கொங்கில் நேற்று நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 27 பேர் உயிரிழந்துள்ளனர்.
மத்திய பாங்கொக்கின் சில்டாம் மாவட்டத்தில் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள பகுதியில் திடீரென சக்திவாய்ந்த குண்டு ஒன்று வெடித்துள்ளது. பிரபல ஆலயம் மற்றும் வணிக வளாகம் அருகே இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. பலத்த சத்தத்துடன் குண்டு வெடித்துச் சிதறியதும் பலர் தூக்கி வீசப்பட்டு உயிரிழந் தனர். அவர்களின் உடல்கள் ஆங் காங்கே சிதறிக் கிடந்தன. மோட்டார் சைக்கிள்கள் தீப்பிடித்து எரிந் தன. அதனால் அந்தப் பகுதி புகை மண்டலமாகக் காட்சியளித்தது. குண்டுவெடிப்பில் 12 பேர் உயிரிழந்துள்ள தாகவும் 20 பேர் காயமடைந்த தா கவும் முதற்கட்ட தகவல்கள் தெரி வித்தன. பின்னர் காயமடைந்தவர் களில் பலர் சிகிச்சை பயனின்றி சாவடைந்தனர். இதனால் சாவு எண் ணிக்கை 27 ஆக அதிகரித்துள்ளது. சுற்றுலாப் பயணிகள் உள்ளிட்ட சுமார் 78 பேர் காயமடைந்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ஐ)

# சிரியப் படைகளின் தாக்குதல் ஐ.நா. கடும் கண்டனம்

## சாவு எண்ணிக்கை 100 ஆக அதிகரிப்பு

டமாஸ்கஸ், ஓக.19
சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸுக்கு அருகே அரச படைகள் நடத்திய தாக்குதலை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது என ஐ.நா. தெரிவித்துள்ளது. மேலும் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை 100 ஆக அதிகரித்துள்ளது.
கிளர்ச்சியாளர்களின் பிடியில் இருந்த தோஹா பகுதியில் அரச படைகள் தொடர்ச்சியான விமானத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளன. இந்தத் தாக்குதலில் சுமார் 100 இற்கும் மேற்பட்டவர்கள் இறந்திருக்கலாம் எனவும், 240 பேருக்கும் அதிகமானவர்கள் படுகாயம் அடைந்திருப்பதாகவும் சிரியாவில் செயற்படும் மனித உரிமைக் கண் காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.
இந்தக் கொடூரத் தாக்குதலில் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானவர்கள் பொது மக்கள் எனத் தெரியவந்துள்ளது. இது பற்றிக் கருத்து தெரிவித்துள்ள ஐ.நா. சபை பொது மக்கள் கூடும் சந்தைப் பகுதியில் குண்டு வீசுவதை எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்துள்ளது. நான்கு வருடங்களாக நடந்துவரும் உள்நாட்டுப் போரில் நடத்தப்பட்ட மிகக் கொடிய தாக்குதல் இது என மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன. (ஐ)

# லிபியாவில் கரை ஒதுங்கும் அகதிகளின் உடல்கள்



ஐரோப்பா நோக்கி அகதிகள் குழு ஒன்று பயணித்த படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது. அவர்களில் சிலரது உடல்கள் லிபிய கடற்கரையில் கரை ஒதுங்கியுள்ளன. லிபியாவின் ஜுவாரா பகுதியில் இருந்து எடுக்கப்பட்ட அந்த ஒளிப்படங்கள் பார்ப்பவர்களது மனதை உலுக்குவதாக மட்டுமன்றி அகதிகள் படும் அவஸ் தைகளையும் வெளிச்சமிட்டுக் காட்டுவதாகவுமுள்ளது.
கரை ஒதுங்கிய சில உடல்களில் வெறும் எலும்புகளே காணப்படுகின்றன., இருப்பினும் அணிந்திருந்த உடைகள் அப்படியே உள்ளன. மக்கள் தங்களது உயி ருக்கும் உடமைக்கும் பாதுகாப் பற்ற நிலைக்கு தள்ளப்படும் போது மட்டுமே புலம்பெயர ஆயத்தமாகி றார்கள், ஆனால் இது பெரிய கொடுமை என லிபியாவின் சுகாதாரத்துறைத் தலைவர் தெரிவித்துள்ளார். கடந்த சனிக்கிழமையன்று லிபியா அருகே மத்திய தரைக்கடல் பகுதியில் அதிக பயணிகளுடன் பயணித்த படகிலிருந்த 40 இற்கும் மேற்பட்ட அகதிகள் மூச்சுத்திணறலால் உயிரிழந்துள்ளனர். அந்தப் படகானது 400 இற்கும் அதிகமானவர்களை ஏற்றிச் சென்றதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இத்தாலியப் பாதுகாப்பு அதிகாரிகள் அந்தப் படகை நெருங்கும் போது அது கடலில் மூழ்க ஆரம்பித்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் தற்போது உடல்கள் கரையொதுங்கியதைக் காட்டும் படங்கள் வெளியாகியுள்ளமை, அகதிகள் கடலில் மூழ்கி உயிரிழந்து கரையொதுங்குவதை உறுதிப்படுத் தியுள்ளன. ஆபத்தான இந்தப் பயணங்களை மேற்கொள்ளும் அகதிகள் இனிமேலாவது விழிப்புடன் இருக்க வேண்டும் என கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ள னர். (ஐ)

# இந்தோனேஷிய விமான விபத்து

## 54 உடல்களும் மீட்பு

ஜாகர்தா, ஓக.19
54 உயிர்களைக் காவு கொண்;ட இந்தோனேஷிய விமான விபத் தில் சிக்கியவர்களில் அனைவரது உடல்களும் மீட்கப்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
இந்தோனேஷியாவின் ஜெயபுரா நகரில் உள்ள சென்தானி விமான நிலையத்தில் இருந்து பப்புவா மாகாணத்தில் உள்ள ஒக்சிபில் நகருக்கு கடந்த 16 ஆம் திகதி ஒரு விமானம் புறப்பட்டுச் சென்றுள்ளது. திரி கானா விமான சேவை நிறுவனத் துக்கு சொந்தமான ஏ.டி.ஆர். 42300 ரகத்தைச் சேர்ந்த அந்த விமா னத்தில் 54 பேர் பயணம் செய்த னர்.
பப்புவா பிராந்தியத்தில் அடர்ந்த வனப்பகுதிக்கு மேலே அந்த விமானம் பறந்து கொண்டிருந்த போது, அதனுடனான தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது. விமானம் திடீரென்று மாயமானது. அதைத் தொடர்ந்து, இந்தோனேஷிய தேடுதல் மற்றும் மீட்புக்குழுவினர், காணாமல் போன விமானத்தைத் தேடிக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டனர். இந்த நிலையில், இந்த விமானம் இந்தோனேஷியாவின் பப்புவாவில் ஒக்பேப் என்ற மாவட்டத்தில் உள்ள மலையில் மோதி விழுந்ததாகவும் அதன் பாகங்களைக் கண்டெடுத் துள்ளதாகவும், அந்த நாட்டின் விமானப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.
இதையடுத்து, விமானத்தின் சிதைந்த பாகங்கள் விழுந்து கிடந்த மலைப் பகுதியில் இருந்து 54 பேரினதும் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக மீட்புக்குழுவைச் சேர்ந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# ஆண்களில்லாத ஒரேயொரு கிராமம்

நைரோபி, ஓக.19
வட கென்யா நாட்டில் இருபத்தைந்து வருடங்களாக பெண்கள் மட்டுமே வாழும் ஒரு கிராமம் தனது தனித்தன்மையால் உலகின் கவனத்தை ஈர்த்துள்ளது. கென்ய நாட்டின் தலைநகரான நைரோபி நகரிலிருந்து 380 கி.மீற்றர் தொலைவில் உள்ள சம்புரு பகுதியில் குறித்த உமோஜா கிராமம் அமைந்துள்ளது.
பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள், குழந்தைத் திருமணம், கணவனால் கைவிடப்பட்ட மற்றும் பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட 15 பெண்கள் கூட்டாக இணைந்து 1990 இல் வாழத் தொடங்கிய அந்தக் கிராமம், தற்போது 47 பெண்கள் மற்றும் 200 சிறுவர்க ளுடன் ஆண்களே இல்லாத அபூர்வ கிராமமாக மாறியுள்ளது. பிரிட்டன் இராணுவத்தினரால் பாலியல் வன்முறை செய்யப்பட்ட ரெபேக்கா லோலோசோலி என்ற பெண் இந்தக் கிராமத்தின் தலைவியாகச் செயற்பட்டு வருகிறார். இந்த கிராமப் பெண்கள் நகைகள் செய்து விற்பதன் மூலமாகவும், அந்தப் பகுதியிலேயே கூடாரங்க ளால் ஆன ஒரு சிறிய சுற்றுலாத்தளத்தை ஏற்படுத்தியுள்ளதன் மூலமாகவும் அவர்கள் தங்களின் வாழ்க்கைச் செலவினங்களை எதிர்கொள்கின்றனர்.



தற்போதும், அடிமை போல நடத்தும் ஆண்களுக்கிடையே வாழும் பெண்கள் தமது வாழ்வில் எந்த மாற்றத்தையும் எதிர்பார்க்க முடியாது. ஆனால், அவர்களைப் போலன்றி தமது வாழ்க்கையைச் சுதந் திரமானதாக அமைந்திருப்பதாக இந்தப் பெண்கள் தெரிவித்துள்ளனர். இந்தக் கிராமத்துக்குள் செல்ல ஆண்களுக்குத் தடையேதும் இல்லை. எனினும், அவர்கள் இந்தப் பெண்களின் அனுமதியின்றி வெகு நாள்கள் அங்கு தங்கியிருக்க முடியாது. பெண்கள் மட்டுமே இருக்கும் கிராமம் என்பதால் அக்கம்பக்கத்து கிராமங்களில் உள்ள ஆண்கள் அவ்வப்போது அத்துமீறிச் செயல்படுவதுமுண்டு. எனினும், அனைத்துத் தடைகளையும் தைரியமாக எதிர்கொண்டு, இந்த 247 பேரும் பத்து குடும்பங்களாக ஒற்றுமையுடன் வாழ்ந்துவருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லனவெல்லாம் பெருக கந்தனே கொடியேறி வருக!

கந்த தியாகராசா

ஆறுமுகமான பொருளுக்கு இன்று கொடியேற்றத் திருவிழா. ஏறு மயிலேறி, கூறுமடியார் வினை தீர்க்கும் வேலவனுக்கு இன்று மஹோற்சவப் பெருந்திருவிழா ஆரம்பம். இந்திரவிழாவை நிகர்க்கும் நல்லைத் திருவிழா பக்தியோடு இணைந்த நற்பெருவிழா. ஈழம் வாழ் இந்துப் பெருமக்கள் மட்டுமல்ல புலம் பெயர்ந்து வாழும் சைவ அபிமானிகள் முருகப்பெருமானை நிறைவுறுத்தி புனிதம் பேணி விரதம் அனுஷ்டித்து வழிபடுவர். நல்லைத் திருத்தலத்தை அண்டிய பகுதிகள் தூய்மையாய் காட்சி தரும். வீதிகளில் நிழல்தரும் பந்தல்களும், தாகம் தணிக்கும் தண்ணீர் பந்தல்களும் நிறைந்திருக்கும். எங்கும் தூய்மை, எங்கும் பக்தி, கோட்டையும் கொற்றமும் கொடியும் பறந்த நல்லை மண்ணில் கோயில் கொண்ட பெருந்தகை தந்த பெருமான் புகழை –

"ஏற்போர் தாம் வந்திச்சையின்
மகிழ்வோடு வாய்ப்பாய் வாழும்
பொற்பரை
நெடுமதில் யாழ்ப்பாணாயன் பட்
டின மருவிய பெருமானே"

என முருகன் புகழ்பாடிப் போற்ற அருணகிரியார் திருப்புகழும், எந்த இடர் வந்தாலும் நல்லூரானே தஞ்சம் என தவத்திரு யோகர் சுவாமிகள் "பஞ்சம் படை வந்தாலும், பாரெல்லாம் வெந்தாலும், அஞ்சுவமோ நாங்களடி கிளியே, ஆறுமுகன் தஞ்சமடி" என வைராக்கிய பக்தியில் திளைத்து நாமார்க்கும் குடியல்லோம் என்ற அப்பர் வாக்கையும் மெய்ப்பித்து பாடிப் பணிந்தார். மேலான திருவருள் பெருக்கும் கந்தக்கடவுளை "கோழிக் கொடியை அவன் வேலை, மயிலை குறித்த வரை ஊழிக் கனலும் அணுகாது" என்றார் சிதம்பரசுவாமிகள். அருள்வீச்சும் பக்தர் ஈர்ப்புச் சக்தியும் கொண்ட கோலமயில் வாகனனின் கோயில் அழகோ அழகு. கொள்ளை அழகு. எல்லாரும் பணிந்தும் புகழ்ந்தும் போற்றும் வேற்படை வேலவன் உறை நல்லைத் திருத்தலம் வனப்பை எண்ணுவார். காண்பார் வியந்தோதுவர். கவினுடை திருக்கோயில் கொண்டதோ ஓர் அழகு. நெட்ட நெடுங் கோபுரங்கள் அழகு. நெடிதுயர் மதிற்சுவர் அழகு, அருளோசையெழுப்பும் ஐந்து மணிக் கோபுரங்கள் அழகு, நீண்ட நீர்ச்சுனையழகு, வண்டு பண் செய்யும் நந்தவனம் அழகு, போதம் நிறை பெருவீதி அழகு, கருவறையுறை தங்கவேல் அழகு, அருளாட்சி செய்யும் ஆறுமுகன் அழகு, ஞானப் பழனியாண்டவர் அழகு, பரிவார மூர்த்திகள் அழகு, தெய்வங்களுக்குப் புனையும் அலங்காரம் அழகு, நிறைவேற்றப்படும் நித்திய நைமித்திய வழிபாடு அழகு, சுவாமி எழுந்தருளல் அழகு, திருவீதிப் பவனி அழகு, ஒரு ரூபா பணத்துக்கு ஒப்புயர்வில்லா அருள்பொழியும் ஆனந்தக் கந்தனின் அதிசயம் அழகு, சைவ நீதி வளர்த்து தமிழோடு இசை வளர்த்து பண்பொழுக்கத்தை வளர்த்த ஆன்மிகத்தை ஊட்டி நிற்கும் தலதெய்வமாம் குமரக் கடவுளின் பேரழகை "கைபுனைந்து இயற் றாக் கவின் பெருவனப்பு" என்பார் நக்கீரர்.



பக்தி நெறி பொதுவானது. தொண்டர் குலமே தொழு தரு குலம் என்கிறது பெரிய புராணம். இறை வணக்கத்துக்கு சாதி, குலம், பிறப்பு, செய் தொழில், செல்வம், பார் வேறுபாடு எவையும் அணைபோட முடியாது. இதனைக் கந்தப் பெருமான் பல இடங்களில் காட்சி கொடுத்து காட்டி வைத்த பெருமைக்குரியவர், ஏழைப் பங்காளன், எவருக்கும் அன்புத் தெய்வம். குருவருளும் திருவருளும் கொண்ட மறைஞானப் பிள்ளையான முருகன் அறிவை, தமிழை வளர்ப்பவன் என்பதை நல்லூர்க் கந்தன் திருப்புகழில் "ஏத்தா நாளும் தர்ப்பண செபமொடு நீத்தார் ஞானம் பற்றிய குருபரா யாப் பாரா யும் சொற்றமிழருடருமுருகோனோ" என அருணகிரி சுவாமிகள் நல்லைக் குமரன் திருவருட் திறனை வியந்தோதி வைத்தார். சித்தர்கள் தடம் பதித்த புண்ணிய திருத்தலம் நல்லைத் திருப்பதி. "கண் படும் இடம் எல்லாம் சிவலிங்கம் தெரிகின்றது" என திரு வீதியின் சிறப்பை யோகர் சுவாமிகளின் அருள்வாக்கு வாழ்க்கையில் இரகசியத்தை அறிந்து தெரிந்தவர்கள் சித்தர்கள். அதற்கொப்ப நல்லூரான் திருக்கருணையால் ஞானம் கைவரப் பெற்ற யோகர் சுவாமிகள் அதிசயம் மெத்தவுள்ள கந்தக் கடவுள் பெருமையை "எந்த நாளும் நல்லூரை வலம் வந்து வணங்குதல் இடரெல்லாம் போமே" என்றவர் மருவும் அடியார் மனதில் விளையாடும் மயில்வாகனனைப் பணிந்தால் மக்கள் பிணிகள் மட்டுமல்ல நாட்டைப் பீடித்தலைக்கும் பிணிகளும் நில்லாதோடும் என்பதை நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு அதனாலே நாட்டில் உள்ள பிணிகள் ஓடும் என அறிவுறுத்தியுள்ளார். நல்லூர்க் கந்தனை பக்தர்கள், சித்தர்கள், அருளாளர்கள் எனப் பலரும் வழிபட்டனர். நல்ல வாழ்வும் பெற்றனர். மக்களின் வைராக்கியமான பக்தி, அர்ப்பணிப்பு, பணிவு, அடக்கம், நேர்த்திகள், ஆராதனைகள் வழிபாடுகள் மிக மிக மேலானவை. இந்த அரிய தெய்வீகம் நிறை பெருமானுக்கு இன்று கொடியேற்ற விழா. ஆருயிர் முழுதும் மேவி அனைத்தையும் இயற்றி நிற்கும் பூரண முதல்வன் ஆற்றும் பஞ்ச கிருத்தியங்களில் படைத்தல் தொழிலைச் சுட்டிநிற்பது. இத்தகையதே நல்விழாவுக்கு கொடிச்சீலை வழங்கும் புனித கைங்கரியத்தை தலைமுறை தலைமுறையாக தொன்று தொட்டு செய்துவரும் முருகன் அபிமானிகள் பாராட்டுக்குரியவர்களே. கொடியேற்றத்துக்கு முதல்நாள் சட்டநாதர் வீதியில் உள்ள முருகன் ஆலயத்தில் இடம்பெறும் சிறப்பான பூசை நிறைவேற்றப்பட்டபின்னர் தேரில் வைத்து பக்தர் புடைசூழ மங்கல வாத்தியம் முழங்க பருத்தித்துறை வீதியூடாக அந்திசாயும் பொன் மாலைப் பொழுதில் எடுத்து வரப்பட்டு திருக்கோயிலை அடைந்து பயபக்தியுடன் பௌவியமாக பிரதான சிவாச்சாரியாரிடம் கையளிக்கப்படும். இத்தகையதோர் தொண்டை காலம் காலமாய் செய்யும் குலத் தோன்றல்கள் பாக்கியவான்களே.

# தொல்லை வினை தீர்க்கும் நல்லைக் கந்தன்



நயினை நா.க.குமாரசூரியர்

சிறப்புக்கள் பல பெற்ற முருகப் பெருமான் ஈழமணித் திருநாட்டின் பல்வேறு இடங்களில் கோயில் கொண்டெழுந்தருளி அருள்மழை பொழிந்து வருகின்றார். முருகப்பெருமான் ஆலயங்களுள் முதன்மை பெற்றுத் திகழும் நல்லைக் கந்தன் ஆலயம் அமைந்திருக்கும் நல்லையம்பதி வரலாற்றுச் சிறப்பும், ஆன்மிகச் சிறப்பும் உடையது. நல்லையம்பதி என்னும் அழகிய திருப்பதியிலே அருட்கோல நாயகனாக வீற்றிருந்து அகிலமெல்லாம் அருள் சுரந்து கொண்டிருப்பவர் நல்லைக் கந்தன். அலங்காரக்கந்தன் என அனைவராலும் அழைக்கப்படும் அழகுக்கோலம் நல்லூர்க் கந்தனின் சிறப்பாகும். முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கின்ற முருகப் பெருமான் அருட்சக்திகளான தெய்வயானையம்மையும், வள்ளியம்மையும் அருகே வீற்றிருக்க சண்முகப் பெருமானாக வீற்றிருந்து அருளாட்சி புரிகின்றார். அழகன் முருகன் அலங்காரக் கந்தனாக வீற்றிருக்கும் அற்புதத் திருத்தலம் நல்லூர். முருகன் என்றால் அழகு என்று பொருளாகும். முருகப்பெருமான் என்றும் இளமையுடன் திகழ்வதால் குமரன் என்றும், அழகுடன் திகழ்வதால் கந்தன் என்றும் அழைக்கப்படுகின்றான். அழகன் முருகன் நல்லையம்பதியில் வீற்றிருந்து எல்லோரையும் வாழவைக்கின்றான். உலகமெல்லாம் பரந்து வாழும் சைவநன் மக்களெல்லாம் கரம் குவித்து வரம் வேண்டி நிற்கும் அற்புதமான தெய்வம் நல்லூர்க் கந்தப் பெருமானாகும். சங்கபோதி புவனேகபாகுவால் கட்டப்பட்ட நல்லூர்க் கந்தசுவாமி கோயில் யாழ்ப்பாணத்தில் ஓர் அருள்மிக்க அற்புத ஆலயமாகக் காட்சியளிக்கின்றது. கருணைக் கடலாக வீற்றிருந்து அருள்மழை பொழியும் நல்லூர்க் கந்தனை வழிபடும் அடியார்களுடைய துன்ப துயரங்கள், இன்னல்கள் எல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல விலகுகின்றது என்பது அடியார்களுடைய நம்பிக்கையாகும். உதய சூரியனின் வெண்பொற்கதிர்கள் முருகப் பெருமானின் அழகிய கோபுரங்களின் மீது படர்ந்து பளிச் என ஒளிவீச, மணிக் கோபுரத்தின் மணி ஓசை ஆலயத்தின் நாலா பக்கங்களிலும் ஒலிக்க அடியார்களைத் தன்வசப்படுத்தி அருளாட்சி செய்கின்றார் கந்தப் பெருமான்.

முருகா என்ற அருட்கோபுரம் பல்லாயிரக் கணக்கான அடியார்களை வரவேற்கின்றது. ஆறுமுகப்பெருமான் அடியவர்கள் வருந்தியழைக்கும் போதெல்லாம் வேலோடும், மயிலோடும் தோன்றி அருள்புரிவான். சுற்றி நில்லாதே பகையே துள்ளி வருகுது வேல என்ற கருத்துக்கு இன்றும் தனிப்பெரும் தெய்வமாக நிற்கின்றான் முருகப்பெருமான். நல்லூரில் இருந்து ஒலிக்கும் மணியோசை இந்து மக்கள் எல்லோருக்கும் குறிப்பாக யாழ்.குடாநாட்டு மக்கள் அனைவருக்கும் எந்தநேரமும் இறைசிந்தனையைத் தோற்றுவிக்கின்றது. நல்லூர்க் கந்தனுடைய மன்மத வருட மஹோற்சவம் வெகுசிறப்பாக இன்று புதன் கிழமை கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகின்றது. ஆடி பிறந்து விட்டால் அகிலமெல்லாம் முருகனின் பேரொளி வீசத் தொடங்கிவிடும். கொடியேற்றம், மஞ்சம், கார்த்திகைத்திருவிழா, தங்கரதத் திருவிழா, கைலாசவாகனத் திருவிழா, சப்பறத் திருவிழா, மாம்பழத்திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா, பூங்காவனம் போன்ற உற்சவங்கள் சிறப்பானவை. இந்த உற்சவங்கள் அடியார்களின் மனதைப் பரவசப்படுத்தி முருகப்பெருமானின் சிறப்புக்களை அடியார்கள் உணர்ந்து கொள்ளக்கூடியதாக அமைகின்றன. திருவிழா நாள்கள் தோறும் விடியற் காலையிலிருந்தே நான்கு திசைகளிலிருந்தும் பக்தர்கள் நல்லூர்க் கந்தன் ஆலயத்தை நோக்கி வந்து சேருவார்கள். அடியார்கள் பலர் நேர்த்திக் கடன்களைத் தீர்க்கும் பொருட்டு, விடியற் காலையிலேயே வெளிவீதி எங்ஙணும் அங்கப் பிரதட்சணம் செய்து முருகனை வழிபடுவார்கள். நல்லை நகர் வீதிகள் எல்லாம் விழாக்கோலம் பூண்டு புனித நகராகக் காட்சியளிக்கும்.

அடியவர்களுக்கெல்லாம் வேண்டியவற்றை வேண்டியவாறு அள்ளிக்கொடுக்கும் வேலவனின் மஹோற்சவத்தைக் காண இலங்கையின் சகல இடங்களிலிமிருந்தும் மட்டுமல்ல, வெளிநாடுகளில் இருந்தும் அடியார்கள் பெருமளவில் வருகை தருகின்றார்கள்.

*நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்,*
*நல்ல மனத்தோடு நாம் பணிந்தால் நல்ல மயில்,*
*ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில் முருகன்*
*தேறிவிடும் சிந்தை தெளி*

அலைகடல் எனத் திரளும் மக்களது துயர் போக்கிட நல்லூர்க் கந்தனைப் பிரார்த்திப் போமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்த நாள் ஞாபகம், பழையதை நினைவு கூருவோம்

சுமார் 60 வருடங்களுக்கு முன் இலங்கை வானொலியில் புகழ்பெற்ற அறிவிப்பாளர்கள் பலர் கடமையாற்றினர். அவர்களில் மயில்வாகனம் முதல் இடத்தை வகிக்கித்தார். அவரது குரல் அவருக்கு இறைவன் கொடுத்த ஒரு வரம். அவரது வாசிக்கும் பாணியே ஒரு தனிப்பாணியாகும். அவர் இயற்கையான பாணியிலே வாசிப்பவராவார். அதாவது செயற்கையான பாணியிலோ அல்லது குரலை மாற்றியோ வாசிப்பவரல்லர். சாதாரணமாக, Simple ஆக வாசிப்பவர். அவரது வாசித்தலில் ஆற்றல், திறமை போன்றவை அமைந்திருந்தன. எல்லோரையும் கவரத்தக்க விதமாக வாசித்து வந்தார். மயில்வாகனம் போல் ஓர் அறிவிப்பாளர் இதுவரை பிறந்ததில்லை என நான் உறுதியாக அதுவும் ஆணித்தரமாகக் கூறுகின்றேன். திருமதி செந்தில்மணி மயில்வாகனமும் ஓர் அறிவிப்பாளராவார். அவரும் ஒரு சிறந்த அறிவிப்பாளர் மட்டுமன்றி நாடகங்களிலும் விளம்பரங்களிலும் பங்குபற்றினார். மயில்வாகனம் வர்த்தக சேவையில் விளம்பரங்களிலும் ஈடுபட்டிருந்தார். "மான்மார்க்" குடைகளுக்கு இருவரும் விளம்பரம் செய்தார்கள் என நினைக்கின்றேன். Colgate Polmolive(கொல்கேட் பாமலிவ்) இசைக்களஞ்சிய நிகழ்ச்சியை மயில்வாகனம் வர்த்தக சேவையில் நடத்தியதாக ஞாபகம் உண்டு. மற்றும் Eveready batteryக்கும் அவர் விளம்பரம் செய்ததாக ஞாபகம் உண்டு.

இவர்கள் இருவருக்குப்பின் பரராஜசிங்கம், நடராஜா, விமல் சொக்கநாதன், நடராஜசிவம், ராஜகுரு சேனாதிபதி கனகரத்தினம் போன்றோர் அறிவிப்பாளர்களாகக் கடமை புரிந்தனர்.

திருமதி ராஜேஸ்வரியும் ஒரு சிறந்த அறிவிப்பாளராவார். சில சமயங்களில் அவர் செய்திகளை வாசிப்பார். நடராஜாவும் செய்திகளை வாசிப்பது உண்டு. அவரும் நன்றாக அறுத்து உறுத்து செய்திகளை வாசிப்பதுண்டு. திரு கே.எஸ்.ராஜா ஒரு (Express annowncer) விரைவு அறிவிப்பாளர். அவரது பாணி ஒரு தனிப்பாணி. அவர் "நிறம் மாறாத பூக்கள்" படத்துக்கு ஒரு Style ஆக விளம்பரம் செய்தார். அவரும் திடீரென மறைந்து போனார். திருமதி ராஜேஸ்வரி ஷண்முகம் எமது யாழ்ப்பாணப் பாணியிலேயே அறிவிப்புச் செய்தார். ஜனாப்.B.H. அப்துல் ஹமீட்டின் குரலை நாம் இன்னமும் பிரதி ஞாயிற்றுக் கிழமைகளில் Raj T.Vயில் மு.ப 11மணிக்கு "ராஜகீதம்" நிகழ்ச்சியில் கேட்கக் கூடியதாய் இருக்கிறது. அவரும் அறிவிப்புத்துறையில் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துள்ளார். அவர் யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்தபடி யால் எங்களைப்போல் யாழ்ப்பாணத் தமிழில் அழகாகக் கதைப்பார். அன்றைய அறிவிப்பாளர்களை நினைவு கூருவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். நேத்ரா T.Vக்கு ஒரு வேண்டுகோள். அதாவது அன்றைய அறிவிப்பாளர்களை நினைவு கூரும் நிகழ்ச்சிகளை நடத்துமாறு நேத்ரா T.Vயை வேண்டுகிறேன். "ஒலிச்சித்திரம்","இசையும் கதையும்" மற்றும் நாடகங்கள் ஒலிபரப்புச் சேவையை அலங்கரித்தன.

ஆனால் இவற்றை இன்று காணவில்லை. பழையன கழிதலும் புதியவை புகுதலும் வேண்டும் தான். ஆனால் அதற்காக பழையனவற்றை முற்றாக ஒதுக்கிவைத்தல் நியாயமானதல்ல.

எஸ்.அரியரட்ணம், கோப்பாய்.


# இனியாவது உணர்ந்து கொள்வார்களா?




நடந்து முடிந்த பொதுத்தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்தில் 60 சதவீதமான வாக்குகள் மட்டுமே அளிக்கப்பட்டமை வேதனை தரும் விடயமாகும். எமது ஜனநாயகக் கடமைகளில் முக்கியமானது தேர்தல்களில் வாக்களிப்பதாகும். ஆனால், நாம் இதை உதாசீனம் செய்து வருகின்றோம். இதன் காரணமாக எமக்கு வேண்டாதவர்கள் நாடாளுமன்றத்தினுள் நுழைந்து வருகின்றனர். தேர்தல் தினத்தன்று எமது மக்கள் தேர்தலைப் பற்றிய அக்கறையின்றி தமது கருமங்களைப் பார்த்துக் கொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. இந்த அலட்சியப்போக்கு எமக்குப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை நாம் இனியாவது உணர்ந்து கொள்ள வேண்டும்.

*– மா.மகேசன்*

## கேலிச் சித்திரம்




நன்றி: லங்காதீப

# சாணக்கியத்துடன் செயற்படுவோம்

இலங்கையின் வரலாற்றில் மிக முக்கியமான நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் வழங்கிய தீர்ப்புத் தொடர்பில் பல்வேறு வியாக்கியானங்கள் தற்போது முன்வைக் கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இந்த நாட்டின் பாரம்பரியமிக்க கட்சிகளுக்குள்ள வாக்கு வங்கிகள் என்பது அடிப்படையில் பெரும் மாற்றங்களின்றி தக்கவைக்கப் பட்டுள்ளதை ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பெற்றுள்ள ஒட்டுமொத்த வாக்குகளும், அவற்றின் ஆசனங்களும் கோடிட்டுக் காட்டுகின்றன.

இருந்தபோதிலும் இலங்கையிலுள்ள அதிகமான மக்கள் நாட்டில் நல்லாட்சியை முன்னெடுப்பதற்கும், நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதற்கும், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்குமே வாக்களித்துள்ளனர் என்பது மிகவும் நம்பிக்கை தருகின்ற செய்தியாக அமைந்திருக்கின்றது.

ஜனவரி 8இல் வெற்றிகொள்ளப்பட்ட ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கை மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டிருக் கின்றது. இலங்கையர்களில் அதிகமானவர்கள் இனவாதிகள் அல்லர் என்ற செய்தி தெளிவாக இந்தத் தேர்தல் பெறுபேறுகள் மூலமாக உணர்த்தப்பட்டிருக் கின்றது. இலங்கையில் கடந்த நான்கு தசாப்த காலத்தில் இடம்பெற்ற மிக அமைதியான தேர்தல் எனப் பலராலும் பெருமையுடன் பேசப்பட்ட இந்தத் தேர்தலில் அநாகரிகமான முறையில் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதிக்கத்துக்குட்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தரப்பினர் இனவாதத்தை உச்சளவில் பிரயோகித்தபோதும் ஜனவரியில் போன்று அதிகமான மக்கள் அதனைத் தமது முற்போக்குச் சிந்தனையால் முறியடித்து நம்பிக்கை தரும் எதிர்காலத்தை வேண்டி வாக்களித்துள்ளனர்.

இலங்கையில் கொடிய இனவாதத்தின் நவீன அடையாளமாகப் பார்க்கப்பட்ட பொதுபலசேனா அமைப்பு தொடர்பில் மக்கள் அளித்துள்ள தீர்ப்பு எதிலும் ஒரு கட்டத்துக்கு மேல் சென்றால் அது நிராகரிக்கப்படும், அது இலகுவில் மக்கள் உணர்வுகளைத் தூண்டிவிடக்கூடிய இனவாதமே என்றாலும் வரையறை தாண்டினால் அதனை மக்கள் நிராகரிப்பர் என்ற செய்தியைத் தெளிவாக எடுத்துணர்த்தியுள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நான்கு மில்லியனுக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்ற முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அடைந்துள்ள தோல்வியானது தமது துறையில் எத்தகைய உச்சங்களைத் தொட்டவராக இருப்பினும், அரசியல் என்று வரும்போது இலங்கையில் பாரம்பரியமாக வளர்த்தெடுக் கப்பட்ட ஒரு கட்சியில் நிற்காவிடின் அவர்கள் தூக்கிவீசப்படுவர் என்று பொருள் கொள்ளச் சொல்கின்றது.

இந்தத் தேர்தலில் தென்பகுதியில் ஒரு மாற்றுச்சக்தியாக பார்க்கப்பட்ட ஜே.வி.பியின் வாக்குவங்கியில் ஏற்பட்டுள்ள சரிவானது மக்களுக்குப் பிரச்சினைகளைப் புரியவைப்பவர்களை விடவும் அதற்குத் தீர்வுகளைப் பெற்றுத்தரும் பிரதிநிதிகளைத்தான் மக்கள் விரும்பு கின்றனர் என்ற செய்தியை வழங்கிநிற்கின்றது.

தமிழர் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண்பது, பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவது, நல்லிணக்கத்தை நிலைநாட்டுவது தொடர்பில் யதார்த்தபூர்வமான முறையில் முன்னகர்த்தக்கூடிய ஆற்றலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே கொண்டிருக்கின்றது என்பதை வடக்கு, கிழக்கிலுள்ள மக்கள் வழங்கியுள்ள அமோக ஆதரவு புலப்படுத்துகின்றது.

கடந்த காலங்களில் பிளவுகளால் தமிழர் தரப்பு அடைந்த பெரிய பின்னடைவுகள் மக்கள் மனங்களில் ஆழமாகப் பதிந்திருப்பதும் தமிழ்க் கூட்டமைப்பை ஒற்றுமையுடன் கட்டிக்காக்கவேண்டும் என்ற தேவைப் பாட்டை வாக்குகளூடாக வெளிப்படுத்திக் காண்பித்துள்ளது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஓர் ஆசனத்தைக்கூடப் பெறமுடியாமல் போனமை நடப்பு அரசியல் யதார்த்தத் தைப் புரிந்து கொள்ளாமல் நடந்துகொண்டதன் விளைவு என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றது. எத்தகைய உயர்வான இலட்சிய தாகங்களைக் கொண்டிருப்பினும் அவை மக்களின் நம்பிக்கையைப் பெறத்தக்க யதார்த்த அணுகு முறைகளைக் கெர்ண்டதாக அமைந்திடல் வேண்டும் என்ற படிப் பினையை 2009 மே மாதத்தின் பின்னர் மக்கள் தெளிவாக விளங்கிக்கொண்டி ருப்பதைத் தேர்தல் பெறுபேறுகள் உணர்த் தி நிற்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணிக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கும் அறுதிப்பெரும்பான்மை கிடைக்காமையானது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியத்துவத்தை அதிகரிக்க வழிகோலியிருக்கின்றது. தமிழர் பிரச்சினையின் அடிப்படையான விடயங்களில் ஆணித்தரமாக நிற்கின்ற அதேவேளை, நல்லாட்சியை நோக்கி நகர விரும்பும் பெரும்பாலான இலங்கையர்களின் அபிலாஷைகளையும் உள்வாங்கிக்கொண்டு கௌரவத்துடன் கூடிய தீர்வைக் காண்பதற்கான சந்தர்ப்பமாக தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையை சாணக்கியத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பயன்படுத்திக் கொள்வது அவசியமா கும்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எல்லோரும் இந்நாட்டு மன்னர்களே; அதனை மனதிருத்திய சேவை தேவை

நேற்று முன்தினம் நடைபெற்ற நாடாளுமன்றத்துக்கான தேர்தல் ஒரு சாதனையைப் படைத்துள்ளது என்று சிலாகிக்கப்படுகிறது.

கடந்த காலத்தில் நடைபெற்ற பொதுத் தேர்தல்களுடன் ஒப்பிடும்போது, இப்போதைய தேர்தல், நாட்டில் நீதியின் இறையாண்மையைப் பாதுகாக்கும் வகை சார்ந்திருக்கிறது.

அதேவேளை, புதிய தேர்தல் சட்டங்களையும், புதிய தேர்தல் முறைமையினையும் கொண்ட மாற்றம் ஒன்றின் தேவையையும் உணர்த்துகிறது.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் அமைப்பின் (கபே) பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் மேற்கண்ட கருத்தைத் தொட்டுக் காட்டிஉள்ளார்.

இத்தகைய ஒரு மாற்றம் முகிழ்த்து எழுந்ததற்கான காரண காரியங்களையும் அவர் விரித்து விளம்பி உள்ளார்.

நாட்டின் அரசமைப்புக்கான பத்தொன்பதாவது திருத்தம் மூன்று மாதங்களுக்கு முன்னர் நிறைவேற்றப்பட்டதன் பின்னரே, அதன் விளைவாகவே நாட்டின் நீதி, இறையாண்மையை பாதுகாக்கும் வகைகளில் தேர்தல் நடைபெற வழி பிறந்திருக்கிறது என்பதையும் அவர் விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் காட்டி உள்ளார்.

தேர்தல் காலத்தில் சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதற்கு, அவர் (அதி உத்தமர்) முழு ஆதரவையும் வழங்கியதாகவும், அத்தோடு எந்த வகை சார்ந்த அரசியல் ரீதியான தலையீடுகள் எதனையும் செய்யவில்லை என்றும் "கபே" அமைப்பின் பணிப்பாளர் சிலாகித்திருப்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

எனினும், மன்னார் மாவட்டத்தில் வேட்பாளர் ஒருவர் சட்டத்தை மீறி வாக்காளர்களுக்கு லஞ்சமாகப் பணம் வழங் கியதாகவும் கீர்த்தி தென்னக்கோன் புட்டு வைத்தார்.

கீர்த்தி தென்னக்கோன் தொட்டுக் காட்டி உள்ள சில ஆக்கபூர்வமான கருத்துக்களை புதிய அரசு மனதில் கொண்டு துரிதமாக செயற்படுத்த முன்வரவேண்டும்.

- நாட்டுக்குப் புதிய தேர்தல் நடைமுறை ஒன்று தேவை; அவசியம்.
- விருப்பு வாக்கு முறை நீக்கப்பட வேண்டும். அதன் ஊடாகவே போட்டித் தன்மையை ஒழிக்க இயலும், என்பன அவற்றில் மிக முக்கியமானவை ஆகும்.


தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள், அரசியல் கட்சிகள், மக்களின் தீர்ப்பு என்னவாக இருக்கும் என்று தேர்தல் முடிவு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் வேளைவரை காத்திருந்திருப்பர்.

தேர்தல் முடிவுகள் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னர், இப்போது -- இன்று -- அந்த ஏக்கமனநிலை கரைந்து போயிருக்கும். மக்களின் பொன்னான தீர்ப்பு இப்போது எல்லோருக்கும் வெளிச்சமாகத் தெரிகிறது; ஒளிர்கிறது.

தேர்தல் களத்தில் இறங்கி நின்ற வேட்பாளர்களுக்கு, அவரவர் ஆற்றிய மக்கள் நலன்நாடிய சேவைகள் நிச்சயம் கைகொடுத்திருக்கும். அவையே நேற்றைய வெற்றி தோல்வியை நிர்ணயித்திருக்கும் என்பதைப் போட்டியில் குதித்தவர்கள் உய்த்து உணர வேண்டும்.

இதன் பின்னர், கட்சிக்கு கட்சி, வேட்பாளருக்கு வேட்பாளர், அவர்களை ஆதரித்து வாக்களித்தவர்கள், அவ்வாறு அன்றித் தூர நின்றவர்கள் எல்லோரும் எமது மக்களே என்ற பொதுநோக்கு அவசியம்.

இறுமாப்பு நெஞ்சம், வெற்றி பெற்றுப் பதவி ஏற்றவர்களுக்கு ஆகாது. எல்லோரும் இந்நாட்டு மன்னர்களே என்ற நன்னோக்கும் நற்செயல்களுமே இன்றைய முதல் தேவை. அதுவே மக்கள் சேவையாகும்; அதற்கான உந்துதலுமாகும்.



# கடல்சார் ஆதிக்கப் போட்டியில் ஊசலாடும் அரசு

**வெள்ளைக்காரரால் இராணுவத்தைப் பலப்படுத்துவதற்காக கையகப்படுத்தப்பட்ட சிறிலங்காவுக்குச் சொந்தமான நிலங்கள் தற்போது வெளிநாட்டுக்காரர்களால் ஒரு சில இலங்கையர்களுக்கு கப்பம் செலுத்தி உடைமையாக் கப்பட்டுள்ளன.**

இந்திய மாக்கடலில் தனது செல்வாக்கைச் செலுத்துவதற்கான வாய்ப்பை வழங்குவதா அல்லது சுயாதீன வெளியுறவுக் கோட்பாடு மற்றும் திறந்த பொருளாதாரம் ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் சிறிலங்கா தனது தலைவிதியைத் தானே தீர்மானிப்பதா என்ற இரு வேறு தெரிவுகளை சிறிலங்காவின் வாக்காளர்கள் தீர்மானிக்க வேண்டிய நிலையிலிருந்தனர்.

சிறிலங்காவுக்கு கேந்திர முக்கியத்துவத்தை வழங்குகின்ற இந்திய மாக்கடலின் ஊடாக உலகின் பெரும்பாலான கப்பல் போக்குவரத்துக்கள் இடம்பெறுகின்றன. அத்துடன் 70 சதவீத பெற்றோலிய வளங்கள் கொண்டு செல்லப்படுகின்ற ஒரு பூகோள மையமாகவும் இந்திய மாக்கடல் விளங்குகிறது.

இந்த நாட்டின் மூலோபாய முக்கியத்துவமானது சீனாவிடம் மட்டும் இழக்கப்படவில்லை. இலங்கைத் தீவில் இந்தியா மற்றும் அமெரிக்கா போன்றனவும் செல்வாக்குச் செலுத்த வேண்டும் எனப் போட்டியிடுகின்றன. இந்நிலையில் சீனா இவற்றை முறியடித்து தனது இருப்பை இந்திய மாக்கடலில் பலப்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனக்கு வேண்டியவர் களுக்கு மட்டும் சலுகைகளை வழங்கியிருந்தார். இவரது காலத்தில் ஊழல் மோசடிகள்நிறைந்திருந்தன. 26 ஆண்டுகளாக சிறிலங்காவில் இடம்பெற்று வந்த போர் 2009 இல் ராஜபக்ஷவால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட நிலையில் நாட்டில்வாழும் சிங்கள பெரும்பான்மை மக்கள் மத்தியில் ராஜபக்ஷ ஒரு போர்க் கதாநாயகனாக விளங்குகிறார்.

ஆனாலும் போரின் இறுதியில் பல்வேறு போர் மீறல்கள் இடம்பெற்றதாக ராஜபக்ஷ மீது குற்றம் சுமத்தப்படுகிறது. குறிப்பாக இறுதிக்கட்டப் போரின் போது 40,000 பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

மஹிந்த ராஜபக்ஷ சிறிலங்காவின் அதிபராக இருந்த வேளையில், இந்தியாவுடனான உறவு முறிவடைந்திருந்தது. ஏனெனில் சிறுபான்மைத் தமிழ் மக்களுடன் ராஜபக்ஷவின் அரசு மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்தத் தவறியமையே இந்த முறிவுக்குக் காரணமாகும்.

ஆனால் ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் சீனாவுடனான உறவு கணிசமானளவு நெருக்கமடைந்திருந்தது. சிறிலங்காவில் சீன நிறுவனங்கள் பல்வேறு கட்டுமான ஒப்பந்தங்களை மேற்கொண்டு அவற்றை நடைமுறைப்படுத்தின.

இதன்மூலம் ஆசியா தொடக்கம் ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு வரை இணைப்பை ஏற்படுத்துவதற்கான சீனாவின் பட்டுப்பாதைத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்கான மிக முக்கிய மையமாக சிறிலங்காவைப் பயன் படுத்துவதில் சீனா வெற்றி கண்டது.

சீனாவின் பட்டுப்பாதைத் திட்டம் என்பது வெறும் வர்த்தக முயற்சியல்ல. இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் சீனாவின் கடற்படையினர் எரிபொருள்களை நிரப்புவதற்கும், பதிலீடுகள் செய்வதற்கும், மாலுமிகள் ஓய்வெடுப்பதற்கும் பராமரிப்பை மேற்கொள்வதற்குமான ஒரு தளத்தை சீனாவின் பட்டுப் பாதைத் திட்டம் வழங்குகிறது.

சீனாவானது பொருளாதார மற்றும் வர்த்தக சார் நலனை மட்டும் அடிப்படையாகக் கொண்டல்லாது இராணுவ நலன்களை அடைந்து கொள்வதற்காகவே இந்திய மாக்கடலைப் பயன்படுத்துகிறது என்பது கடந்த ஆண்டின் இறுதியில் சிறிலங்காவின் கொழும்புத்துறைமுகத்தில் சீனக் கடற்படைக்குச் சொந்தமான நீர்மூழ்கிக் கப்பல்கள் தரித்து நின்றதன் மூலம் உறுதிப்படுத்தப் படுகிறது.

இவ்வாறான செயற்பாடுகள் சிறிலங்காவானது இந்தியாவின் கியூபா என்கின்ற நிலைக்கு மாற வழி வகுத்தது.

சிறிலங்காவின் அதிபர் மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரும் சீனாவுடன் சிறிலங்கா கொண்டுள்ள நெருக்கமான உறவால் இந்தியாவுடனான உறவு விரிசலடைந்துள்ளது என்கின்ற உண்மையை அடையாளங் கண்டுகொண்டனர்.

ராஜபக்ஷவால் சீனாவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் சிறிலங்கா கடன்படு நிலைக்குச் செல்வதற்கு மிகமுக்கிய காரணமாக உள்ளதாக, ராஜபக்ஷவின் அரசில் சுகாதார அமைச்சராகச் செயற்பட்டுப் பின்னர் ராஜபக் ஷவுக்கு எதிராக அதிபர் வேட்பாள ராகப் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேன சிறிலங்கா அதிபர் தேர் தல் பரப்புரையின்போது தெரிவித்திருந்தார்.

இதேபோன்று, வெள்ளைக்காரரால் இராணுவத்தைப் பலப்படுத்துவதற்காக கையகப்படுத்தப்பட்ட சிறிலங்காவுக்குச் சொந்தமான நிலங்கள் தற்போது வெளிநாட்டுக்காரர்களால் ஒரு சில இலங்கையர் களுக்கு கப்பம் செலுத்தி உடைமையாக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையானது மேலும் ஆறு ஆண்டுகள் தொடர்ந்தால் எமது நாடு கொலனித்துவ நாடாக மாறும் அபாயம் உள்ளது. அவ்வாறு மாறினால் நாங்கள் அடிமைகளாகி விடுவோம் என சிறிசேன தனது தேர்தல் பரப்புரையின் போது எச்சரிக்கை விடுத்திருந்தார்.

சிறிசேனவின் தேர்தல் அறிக்கையில் சீனா எனச் சுட்டிக் காட்டப்படா விட்டாலும் கூட, இது சீனாவைக் குறிக்கின்றது என்பது தெளிவாகும்.

சிறிசேன ஆட்சிக்கு வந்ததன் பின்னர் 1.4 பில்லியன் டொலர் பெறுமதியான சீனத் திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. இந்தத்திட்டமானது சூழல் சட்டத்தை மீறுவதாகவும் இதில்மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகவும் கூறப்பட்டது. இதுதொடர் பில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என கட்டளையிடப் பட்டது.

நாடாளுமன்றில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியானது பெரும்பான்மையை வென்றால், ராஜபக்ஷ சிறிலங்காவின் புதிய அரசுக்குத் தலைமை தாங்குவார் என எதிர்வுகூற முடியாது. இது தொடர்பில் சிறிசேனவே தீர்மானம் இயற்ற வேண்டும்.

இந்த நிலையில் சிறிசேன, மஹிந்த ராஜபக்ஷவுக்குப் பிரதமர் பத வியை வழங்குவாரா என்பது கேள்விக் குறியாகும். அத்துடன் மஹிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றின் பெரும்பான்மை ஆதரவைப் பெற்றுக் கொள்வாரா என்கின்ற கேள்வியும் எழுகிறது.

ஆனால் ராஜபக்ஷ பிரதமரானால் சிறிலங்காவின் தேசியக் கோட்பாடு மீது இவர் மிகவும் ஆதிக்கம் செலுத்துவார் என்பது நிச்சய மாகும். சிறிலங்காவின் புதிய அரசு சீனாவை குற்றவாளி போன்று செயற்படுத்துகிறது என மஹிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ள நிலையில், இவர் மீண்டும் சிறிலங்காவின் ஆட்சியைக் கைப்பற்றுவாரானால் இதனை சீனா மகிழ் வுடன் கொண்டாடும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

இதன் விளைவுகள் சீனாவின் இந்திய மாக்கடல் மூலோபாயத்தில் சிறிலங்கா மிக முக்கிய சக்தியாகப் பயன்படுத்தப்படும் என்பதை உறுதிப்படுத்த உதவும்.

அதாவது இந்திய மாக்கடலில் தனது செல்வாக்கைச் செலுத்துவதற்கான வாய்ப்பை வழங்குவதா அல்லது சுயாதீன வெளியுறவுக் கோட்பாடு மற்றும் திறந்த பொருளாதாரம் ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் சிறிலங்கா தனது சொந்த தலைவிதியைத் தானே தீர்மானிப்பதா என்கின்ற இரு வேறு தெரிவுகளை சிறிலங்காவின் வாக்காளர்கள் தீர்மானிக்க வேண்டிய நிலையில் இருந்தனர்.

இதில் இறுதியான தெரிவையே மக்கள் தெரிவு செய்வார்கள் என ஒருசாரார் நம்பினார்கள். சீனா, இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய மூன்று வெவ்வேறு சக்தி மிக்க நாடுகளின் மத்தியில் தமது கடல்சார் செல்வாக்கை நிலைப்படுத்துவதற்கான இவர்களது போட்டி யில் சிறிலங்கா ஒரு ஊசலாடும் அரசாக உள்ளமை இங்கு சுட்டிக் காட்டத் தக்கதே. (நன்றி: புதினப்பலகை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டே ரைம்ஸ் கட்டுரையில் இருந்து
ரெங்கன்

# தேர்தலையொட்டி ஜனாதிபதி மேற்கொண்ட சில நகர்வுகள்

கடந்த வாரம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கடும் தொனியிலான கடிதம் ஒன்றில் தேர்தலில் வெற்றி பெற்றாலும் மஹிந்த ராஜபக் ஷவை தாம் பிரதமராக நியமிக்கப் போவதில்லை என்று அறிவித்திருந்த அதேசமயம் கடந்த வாரம் வெள்ளிக்கிழமையன்று இன்னுமொரு அதிர்ச்சி நகர்வை மேற்கொண்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேமஜயந்த மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் அனுர பிரிய தர்சன யாப்பா ஆகியவர்களுக்கு அந்தப் பதவிகளில் இருந்து அவர்கள் நீக்கப்படுவதான கடிதங்களை அனுப்பி வைத்தார். அந்தப் பதவிகளுக்கு முறையே பேராசிரியர் விஸ்வவர்ணபால மற்றும் துமிந்த திசாநாயக்க ஆகியவர்களைத் தற்காலிகமாக நியமனம் செய்திருந்தார். அதேசமயம் இந்த இருவரும் கொழும்பு மாவட்ட நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்து சுசில் பிரேமஜயந்தவும் அனுர பிரியதர்சன யாப்பாவும் அந்தக் கட்சிகளின் பொதுச் செயலாளர்களாக செயற்படாதபடி இடைக்கால தடை உத்தரவுகளையும் பெற்றுக் கொண்டுவிட்டனர். சிறிசேன இவ்விரு செயலாளர் களையும் பதவி நீக்கம் செய்தமையானது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிபெறும் பட்சத்தில் தேசிய பட்டியலில் ராஜபக்ஷ புதிய பெயர்களைச் சேர்த்து விட எடுக்கக்கூடிய எத்தனம் எதனையும் முறியடிக்கும் நோக்கம் கொண்டது என விசயம் அறிந்தவர்கள் கூறுகிறார்கள். ஏற்கனவே தேர்தல் திணைக்களத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பெயர்களுக்கு மாற்றீடாக இவை அமையக்கூடியதாக இருக்கும் என்பதாகவும் கருதப்பட்டது. சிறிசேன அவ்வாறான ஒரு செயற்பாட்டில் தமக்கு விருப்பமானவர்களை பட்டியலில் சேர்க்க முற்படுகிறார் என்றே ராஜபக்ஷவுக்கு விசுவாசமானவர்கள் கூறுகிறார்கள்.





ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடகக் குழுத் தலைவர் டிலான் பெரேரா கூறுகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அமைப்பு விதிகளின்படி ஓர் நீக்கலாம். ஆனால் கட்சி நிர்வாக அதிகாரி ஒருவரை அவர் நியமிக்க முடியாது. அவ்வாறானவர் மத்திய குழுவினாலேயே தெரிவுசெய்யப்பட வேண்டும். அதே சமயம் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரை பதவிநீக்கம்செய்வதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருக்கும் அவருடைய இடத்துக்கு வேறொருவரை நியமிப்பதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை என்று கூறினார்.

ஜனதா விமுக்தி பெரமுன ஜனாதிபதியின் கடிதம் தொடர்பாக கருத்து வெளியிடுகையில் இது கலப்பு அரசு ஒன்றுக்கு வழிவகுக்கப்போகிறது என்று தெரிவித்துள்ளது. பிரதமமந்திரியாக வரவேண்டும் என்ற மஹிந்த ராஜபக் ஷவின் கனவு நொறுக்கப்பட்டுவிட்டது. அவருடைய தரப்பினர் ஓரம் கட்டப்படுவார்கள். அதேசமயம் ஏனையவர்கள் ஒன்று திரள்வார்கள். அதனால் ஒரு வலுவான எதிர்க்கட்சி உருவாவதை அது கட்டாயமாக்கும். அதன்மூலமே ஆட்சியை முறையாகச் செயற்படுத்த முடியும் என்று ஜே.வி.பியின் தலைவர் அனுர குமாரதிசாநாயக்கதெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி சிறிசேன முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எழுதியிருந்த கடிதத்தின் சில முக்கிய அம்சங்கள் வருமாறு.

நாம் கடந்த ஏழு மாத காலத்தில் சந்தித்துக்கொண்ட மூன்று தடவைகளிலும் தேர்தலில் போட்டியிட மனுப்பத்திரத்தில் நீங்கள் கைச்சாத்திட மூன்று நாள்கள் இருக்கையில் பரிமாறிக் கொண்ட தொலைபேசி உரையாடல்களின் போதும் கட்சியை வெற்றியை நோக்கி அழைத்துச் செல்ல நான் தயாராய் இருப்பதால் உங்களைத் தேர்தலில் போட்டியிட வேண்டாம் என்று கேட்டுக்கொண்டேன். ஆனால் வேட்புமனுவில் நீங்கள் கையெழுத்திட்டதால் அந்த நம்பிக்கை தவிடுபொடியாகிவிட்டது.

தேர்தலில் போட்டியிட நீங்கள் தீர்மானிக்காதிருந்திருந்தால் ஜனாதிபதித் தேர்தலில் எனக்கு சார்பாக வாக்களித்திருந்த நாட்டின் இளைஞர்களை, தொழில் அதிபர்களை மத்திய தர மக்களை சிவில் சமூகத்தினரை அரசியல் கட்சிகளை, தமிழர்களை மற்றும் முஸ்லிம்களை தலைமை வகித்து முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லும் தகுதி எனக் கிருந்தது.

தேர்தலில் போட்டியிட வேண்டாம் என்று கூறி உங்களை அரசியலில் இருந்து அப்புறப்படுத்தும் நோக்கம் எனக்கிருக்கவில்லை. அரசமைப்பில் சில திருத்தங்களைச் செய்வது எனது நோக்கமாக இருந்தது. அதன் மூலம் நீங்கள் அரசியலில் ஒரு கௌரவமான பதவியில் தொடர்ந்து இருந்திருக்கலாம். உங்கள் குடும்பத்தில் பலர் அதற்குச் சம்மதிப்பவர்களாய் இருந்துள்ளார்கள் என்பதையும் நான் அறிவேன். ஆனால் நீங்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் இணைந்துள்ள சில சிறு கட்சிகளின் மற்றும் குழுக்களின் கைதியாக இருப்பதால் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மீது எதுவித பாசமும் இல்லாத நிலையில் இவை அனைத்தையும் நிராகரித்து விட்டீர்கள். இந்தக் குழுக்கள் உங்களின் அரசியல் பலத்தில் நாடாளுமன்றத்துக்குள் நுழைவதை மட்டுமே நோக்கமாகக் கொண்டவர்கள். இதன் விளைவால் எமது சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் விருப்புவாக்குகளை இழக்கும் நிலைக்குள்ளாகியிருப்பது கவலை தருவதாகும்.

### இனவாதத்தின் எதிரொலி

சிங்கள பௌத்தர்களை மட்டுமே கட்சி பிரதிநிதித்துவப்படுத்துவதாக நீங்கள் அடையாளப்படுத்தி வளர்த்த தீவிரவாதம்தான் ஜனவரி 8இல் உங்கள் தோல்விக்குக்காரணமாயிற்று என்பதை நீங்கள் கவனிக்கவில்லையா? ஒரு பெரிய கட்சிக்கு இது நிகழ்ந்திருக்கக்கூடாது. நாங்கள் எந்த ஒரு குறித்த இனத்தையோ சமயத்தையோ பிரதிநிதித்துவம் செய்கிறவர்கள் அல்ல என்பதைக் காட்டும் பொறுப்பு எனக்கு இப்போது ஏற்பட்டுள்ளது. ஆனால் நீங்கள் விருப்பு வாக்குகளைப் பெறுவதற்கான நபர்களால் சூழப்பட்டிருக்கிறீர்கள் என்பதை அறியாமலா இருக்கிறீர்கள்.

> சிங்கள பௌத்தர்களை மட்டுமே கட்சி பிரதிநிதித்துவப்படுத்துவதாக நீங்கள் அடையாளப்படுத்தி வளர்த்த தீவிரவாதம்தான் ஜனவரி 8இல் உங்கள் தோல்விக்கு காரணமாயிற்று என்பதை நீங்கள் கவனிக்கவில்லையா? ஒரு பெரிய கட்சிக்கு இது நிகழ்ந்திருக்கக்கூடாது.

அவர்கள் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் அல்ல. அவர்கள் கட்சியையோ உறுப்பினர்களையோ கட்டுப்படுத்த அனுமதிக்கலாகாது. நீங்கள் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் பெரும்பான்மைச் சமூகம் என்றோ சிறுபான்மைச் சமூகம் என்றோ எதுவும் இல்லையென்று அடிக்கடி கூறி வந்திருக்கிறீர்கள். உங்களின் அரசியல் செல்வாக்கை வைத்து வாக்குகளைப் பெற்றுக் கொள்ள விரும்பி உங்களின் புகழ் பாடும் பலர் இரகசியமாக எனக்குத் தொலைபேசியில் தொடர்புகொண்டு அல்லது இரகசிய தகவல்கள் மூலம் தேர்தலுக்குப் பின்னர் என்னுடன் சேர்ந்து அரசியல் செய்ய விரும்புவதாக தெரிவித்து வருகிறார்கள். அவர்கள் பதவிகளைத்தான் விரும்புகிறார்கள்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்காகவும் நாட்டின் நன்மைக்காகவும் பிரதமர் பதவிக்கு நான் குறிப்பிடும் பின்வருபவர்களில் ஒருவருக்கு பிரதமர் பதவியை வழங்குவதற்கு விட்டுக்கொடுப்பையும் ஒத்துழைப்பையும் அவர்களுக்கான உங்கள் ஆசிர்வாதத்தையும் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் நிமல் சிறிபாலடி சில்வா, ஜோன் செனவிரட்ண, நாமல் ராஜபக் ஷ, அதாவுட செனவிரட்ண, ஏ.எச்.எம். பௌசி, சுசில் பிரேம ஜயந்த மற்றும் அனுரபிரியதர்ஷன யாப்ப ஆகியவர்கள். ஜனவரி 8ஆம் திகதி தோல்வி கண்டதன் பின்னர் நீங்கள் கோயில்களுக்கு ஆசி பெறுவதற்காக போய்க் கொண்டிருப்பதையறிய மகிழ்ச்சியாக இருந்தது. கோயில்களுக்குச் சென்றதன் மூலம் நீங்கள் ஆத்மீகத்தையும் நல்ல எண்ணங்களையும் பெற்றுக் கொண்டீர்களா என்பதில் எனக்கு சந்தேகமாக இருக்கிறது. ஆனால் 2010 ஜனவரி 26 முதல் 2014 நவம்பர் 21 வரை நீங்கள் எவ்வாறு நடந்து கொண்டீர்கள் என்பதை நான் அறிவேன். தனிப்பட்ட முறையிலான எமது கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்புக்களிலும் உரையாடல் களிலும் நீங்கள் வெறுப்புடன் பேசியுள்ளீர்கள், தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெறுவதற்காக இனவாதத்தைப் பரப்பும் வகையில் பேசுவதையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் பிரிவுகளை ஏற்படுத்தும் வகையிலும் பேசுவதையும் நிறுத்தும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

### சர்வதேச நெருக்கடி தீர்வுக்குழு

சர்வதேச நெருக்கடிகளுக்குத் தீர்வு காணும் குழு என்ற அமைப்பு பொதுத்தேர்தலுக்கு முன்னர் விடுத்த ஓர் அறிக்கையில், ஐ.தே.க. தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தப் போகிறதென்றும் த.தே. கூட்டமைப்பின் பிரிவினையை ஆதரிக்கிறதென்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பரப்புரைகளை செய்து கொண்டிருக்கும் அதே நேரம் ராஜபக்ஷ தரப்பினரின் சிங்கள தேசியம் குறித்த பரிசோதனையாகவும் நாட்டில் இடம்பெற்றுள்ள ஊழல்கள் அதிகார துஷ்பிரயோகங்கள் குறித்த மக்களின் சிந்தனை எந்த அளவு ஆழமாக செயற் பட்டிருக்கிறது என்பதைக் காட்டுவதாகவும் இந்தத் தேர்தல் அமைவதாய் இருக்கும் என்று தெரிவித் துள்ளது. அவ்வமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் காணப்படும் பல முக்கியமான விடயங்களில் பின் வரும் கருத்தும் அடங்கும்.

செப்ரெம்பரில் கூடவிருக்கும் மனித உரிமை சபையின் கூட்டத்துக்கு முன்னர் மனிதஉரிமை ஆணையாளரின் காரியாலயம் வெகுகாலமாக எதிர்பார்க்கப்பட்ட போர்க் குற்றம் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்க இருக்கிறது. அந்தக் கூட்டத்தொடரின் போது இலங்கையின் புதிய அரசானது இங்கு நடைபெற்றுள்ள பாரதூரமான மனித உரிமை மீறல்களை எவ்வாறு எதிர்கொள்ளப்போகின்றது. அதற்காக எவ்வாறான சட்டச் சீரமைப்புக்களை செய்யப்போகின்றது என்பவைகளை உறுதிபட தெரிவித்ததாக வேண்டியிருக்கும். சாட்சிகளுக்குப் போதுமான அளவு பாதுகாப்பு, சர்வதேசத்தின் பங்களிப்பு மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் உயிர் தப்பியவர்கள் மற்றும் சமூக அமைப்புக்களுடன் கலந்துரையாடல்கள் போன்றவற்றுக்கான வழிமுறைகளுடன் எவ்வாறு விசாரணைகள் இடம்பெறும் என்பதை உறுதியுடன் வெளிப்படுத்த வேண்டியிருக்கும். நீதியை நிலை நிறுத்துவதற்கான அதன் நீண்டகால த் திட்டம் தேவை ஏற்படின் உண்மையைக் கண்டறியும் ஆணையம் போன்றவற்றில் அதன் கடப்பாடுகளை வெளிப்படுத்த வேண்டியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் நிறையைக் குறைக்க வழிகள்

உலகில் ஒருவருக்கு ஏற்படும் பிரச்சினைகளிலேயே மிகவும் தொல்லை தரும் பிரச்சினை என்றால் அது உடல் பருமன்தான். உடல் நிறை அதிகம் இருந்தால், எந்த ஒரு வேலையையும் சரியாகவும், நிம்மதியாகவும் செய்ய முடியாது.

எதைச் செய்தாலும் சிறிது நேரத்திலேயே மூச்சு வாங்கி, உடல் சோர்ந்துவிடும். எனவே பலர் இந்த உடல் நிறையைச் சீக்கிரம் குறைக்க வேண்டுமென்று, தினமும் ஜிம்முக்குச் செல்கின்றனர். அதுமட்டுமின்றி, தற்போது உடல் நிறையைக் குறைக்க பல்வேறு வழிகள் உள்ளன. அவற்றில் ஒன்று தான் பழரசங்கள் மூலம் நிறையைக் குறைப்பது. பழரசங் களைக் குடித்தால், அடிக்கடி பசி ஏற்படுவதைக் குறைத்து, நீண்ட நேரம் வயிற்றை நிறைத்து வைத்திருக்கும். இதனால் கண்ட கண்ட உணவுப் பொருள்களைச் சாப்பிடமாட்டோம். இதனால் நிச்சயம் விரைவில் உடல் நிறையில் நல்ல மாற்றத்தைக் காண முடியும். அதிலும் ஒரு வாரத்தில் உடல் நிறையில் ஒரு குறிப்பிட்ட அளவில் மாற்றத்தைக் காணலாம். சரி, இப்போது உடல் எடையை குறைக்க உதவும் பழரசங்கள் சிலவற்றைப் பார்ப்போமா!

**அன்னாசிப் பழரசம்**

அன்னாசியை மட்டும் அரைத்தால், அது கெட்டியான பழரசம் போன்று இருக்கும். ஆகவே அதில் சிறிது தண்ணீர் சேர்த்துக் கலந்து, பசியாக இருக்கும் நேரத்தில் குடித்தால், பசி உடனே அடங்கும்.

**தக்காளிப் பழரசம்**

ஏழே நாள்களில் நிறையில் நல்ல மாற்றம் வேண்டுமெனில், 3 தக்காளியை வேகவைத்து, அதனை அரைத்து, அதில் சீனி சேர்த்து, தினமும் மூன்று வேளை குடித்து வர வேண்டும்.

**எலுமிச்சம் பழரசம்**

பொதுவாக எலுமிச்சை உடல் நிறை குறைப்பில் முக்கிய பங்கை வகிக்கிறது. அதிலும் ஏழே நாள்களில் நிறையில் மாற்றம் தெரிய, எலுமிச்சம் பழரசத்தில் 1 சிட்டிகை உப்பு மற்றும் தேன் சேர்த்து, தினமும் காலையில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால், உடலில் தங்கியுள்ள தேவையற்ற கொழுப்புக்கள் கரைந்துவிடும்.

**திராட்சைப் பழரசம்**

இதில் விற்றமின்கள் மற்றும் நல்ல கொழுப்புக்கள் இருப்பதால், அதனைக் கொண்டு பழரசம் போட்டுக் குடித்து வந்தால், உடல் நிறை குறைவதோடு, சருமமும் நன்கு பொலிவோடு இருக்கும்.

**கொய்யாப் பழரசம்**

கொய்யாவில் விற்றமின் சி அதிகம் உள்ளதால், அதனை பழரசம் போட்டு வாரத்துக்கு இரண்டு நாள்கள் வெறும் வயிற்றில் குடித்து வந்தால், அது உடலில் உள்ள கொழுப்புக்களைக் கரைத்துவிடும்.

## மனிதர்கள் எல்லோரும் சமமானவர்களே

சொல், செயல், சிந்தனைகளில் ஒன்றாக விளங்கும் ஒரு சிலரால் உலகையே ஆட்டி வைக்க முடியும். இந்த உண்மையை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள். நீங்கள் உண்மையிலேயே எனது குழந்தைகளானால், எதற்குமே அஞ்சி நின்றுவிட மாட்டீர்கள். நீங்கள் சிங்கக்குட்டிகளைப் போலத் திகழ்வீர்கள்.

### விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள், அறியாமை மிக்கவர்கள், ஏழைகள், கல்வியறிவு அற்றவர்கள், தொழிலாளர்கள் ஆகிய அனைவரும் உன்னுடன் குருதித் தொடர்புடைய நெருக்கமான உறவினர்களே, உனது உடன்பிறந்த சகோதரர்களே என்பதை மறந்துவிடாதே.

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 800 | 700 | 500 | 600 |
| நண்டு | 300 | 400 | 400 | 350 | 150 | 400 |
| கணவாய் | 650 | 600 | 700 | 600 | 600 | – |
| பாரை | 650 | 700 | 600 | 450 | 500 | 400 |
| சுறா | 600 | 600 | 500 | 600 | 600 | – |
| சீலா | 250 | 500 | 400 | 450 | 450 | 350 |
| விளை | 600 | 450 | 450 | 500 | 450 | 350 |
| முரல் | 300 | 400 | 300 | 300 | 150 | 300 |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | – | – |
| கிழாக்கன் | 500 | 800 | 700 | 500 | 400 | – |
| ஒரா | 400 | 350 | 300 | 450 | 300 | – |
| திரளி | 250 | 300 | 200 | 300 | 100 | – |
| நகரை | 200 | 300 | 300 | 300 | 100 | 300 |
| சூடை | 150 | 200 | 130 | 120 | 150 | 70 |
| ஒட்டி | 200 | 250 | 300 | 300 | – | 200 |
| திருக்கை | 150 | 350 | 200 | 250 | 200 | 130 |
| பாலை | 400 | 350 | 400 | 400 | – | 300 |
| வாழை | 100 | 200 | – | 300 | – | – |
| கொய் | 100 | 200 | 150 | 100 | 50 | – |
| மதனம் | 150 | 250 | 200 | 280 | 300 | – |

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | – | 40 | 60 | 80 | 60 | 60 | 35 |
| கத்தரி | 80 | 100 | 80 | 80 | 100–120 | 60 | 80 | 40 |
| கரட் | 140 | 120 | 100 | 100 | 100–180 | 160 | 140 | 140 |
| மரவள்ளி | 70 | 50 | 60 | 40 | 60 | 40 | 60 | 45 |
| பயிற்றை | 100 | 80 | 60 | 100 | 60 | 40 | 140 | 100 |
| பாகல் | 160 | 100 | 100 | 100 | 80 | 120 | 120 | 100 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | 100 | 120 | 80 | 80 | 120 | 70 |
| பெ.வெங்காயம் | 120 | 100 | 120 | 100 | 90 | 120 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 80 | 100 | 100 | 60 | 80 | 80 | 80 | 70 |
| பூசணி | 40 | 30 | 50 | 40 | 30–35 | 40 | 60 | 40 |
| தக்காளி | 100 | 200 | 100 | 80 | 80 | 120 | 100 | 70 |
| வாழைக்காய் | 60 | 60 | 50 | 50 | 40 | 40 | 60 | 30 |
| கீரை | 30 | 30 | 30 | 20 | 20 | 30 | 35 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 20 | 40 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 250 | 150 | 250 | 150 | 160 | 400 | 120 | 150 |
| புடோல் | 50 | 40 | 50 | 40 | 60 | 40 | 80 | 50 |
| கோவா | 100 | 100 | 80 | 80 | 60 | 80 | 100 | 70 |
| வெண்டி | 60 | 20 | 50 | 40 | 80 | 80 | 80 | 25 |
| போஞ்சி | 160 | 160 | 180 | 180 | 140 | 160 | 180 | 120 |
| லீக்ஸ் | 100 | 100 | 160 | 80 | 80–100 | 80 | 120 | 80 |
| தேங்காய் | 50 | 45 | 50 | 50–60 | 60 | 40–60 | 50 | 35 |
| உருளைக்கிழங்கு | 90 | 80 | 100 | 90 | 80–90 | 90 | 100 | 100 |
| தேசிக்காய் | 80 | 60 | 80 | 50 | 60 | 60 | 150 | 100 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 160 | 100 | 140 | 120 | 160 | 160 | 160 | 80 |
| இராசவள்ளி | 120 | 100 | 160 | 180 | 140 | 120 | 180 | 80 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 60 | 30 | 100 | 90 | 120 | 100 |

**நாளை**

**ஆவணி-03**

**வியாழக்கிழமை**

**20.08.2015**

திதி: பஞ்சமி காலை

நட்சத்திரம்: சித்திரை பி.ப. 02.45 வரை

சுபநேரம்: 07.35–09.05 வரை

இராகுகாலம்: 01.35–03.05 வரை

ஷஷ்டி விரதம்

## சுடோக்கு எண் விளையாட்டு

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 8 | 3 | 6 | 5 | 1 | 9 | 4 | 7 |
| 1 | 7 | 4 | 8 | 3 | 9 | 5 | 2 | 6 |
| 9 | 5 | 6 | 2 | 4 | 7 | 3 | 8 | 1 |
| 7 | 4 | 5 | 1 | 2 | 8 | 6 | 3 | 9 |
| 3 | 1 | 8 | 4 | 9 | 6 | 7 | 5 | 2 |
| 6 | 2 | 9 | 5 | 7 | 3 | 4 | 1 | 8 |
| 8 | 6 | 7 | 3 | 1 | 5 | 2 | 9 | 4 |
| 5 | 9 | 2 | 7 | 8 | 4 | 1 | 6 | 3 |
| 4 | 3 | 1 | 9 | 6 | 2 | 8 | 7 | 5 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 9 | | 5 | 4 | | 2 |
| 4 | | | | | | | 5 | |
| | 5 | | 4 | | | 8 | | 1 |
| 1 | 7 | | | 2 | | | | |
| | 3 | | 7 | 5 | | | 6 | |
| | | | | 3 | | | 4 | 7 |
| 5 | | 2 | | | 7 | | 9 | |
| | 9 | | | | | | | 5 |
| 6 | | | 5 | 9 | 8 | | | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங் கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க் கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கில எழுத்துக்களின் பெயர்ப் பலன்கள்





**கடவுள் பற்று மிக்கவர்களாக - K எழுத்துக் காரர்கள்**

அன்பும், பணிவும் கனிவான பார்வையும், எளிமையும், எவரையும் மதிக்கும் தன்மையும், இறை பற்றும் இன்முகமும், எவரையும் கவர்ந்திழுக்கும் பார்வையும் கொண்ட இவ்வெழுத்தில் சூரியனின் கதிர்கள் ஓரளவு உட்கிரகிப்பதால், மனித நேயம் மிகுந்தவர்களாகவும் மாயசக்தி, மனோவசியம், கற்பனை வளம், கதை, கட்டுரை படைக்கும் ஆற்றல் மிக்கவர்களாகவும் இருப்பர். பிறரின் பாராட்டுதலும் கிடைத்துக்கொண்டே இருக்கும். மனதை ஒருமுகப்படுத்துவது என்பது இயலாத காரியம் என்று நினைத்து, அந்த நினைப்பையே ஒருமுகப்படுத்திவிடுவர். இவர்களின் பயந்த சுபாவமே இவர்களுக்குப் பலமாகும். பல இடங்களில், முகத்தைப் பார்த்தாலே பாவமாக உள்ளது, அவருக்கு என்ன வேண்டும் கேள் எனப் பல பிரபலங்கள், இவர்களின் வேலையை உடனே முடித்துக் கொடுப்பர். இவர்கள் எவரையும் நம்புவதில்லை. தன்னுள் உள்ள ஆற்றலை அடிக்கடி மறந்துவிடுவர். ஒன்று மற்றும் எட்டாம் எண்ணினர் மட்டும்தான் இவர்களை வலுவேற்றக்கூடியவர்கள். ஏழாம் எண்ணினரைத் தேர்ந்தெடுத்தல் நலமாகும். எந்தச் செயலையும் மிகைப்படுத்திப் பேசுவது இவர்களால் மட்டும்தான் முடியும். பிறருக்குப் போதிப்பதில் புத்தனாவர். அடுத்தவர் ஆலோசனையை இவர்கள் விரும்புவது இல்லை. உடல் உழைப்பை விரும்பாத இவர்களுக்குக் கிடைக்கும் பணிகளும் எளிதாக அமைந்துவிடும். வரவேற்பாளர், ஆசிரியர், திரைப்படக்கதை எழுத்தாளர், ஆன்மிகப் போதனையாளர் போன்ற பணிகளில் இருப்பர்.

ஞானத்தையும், கல்வியையும், அண்டங்களைப் பற்றியும் பேசுவர். பலமுறை யோசித்தாலும் செயற்பட வேண்டிய நேரத்தில் பின்வாங்கிவிடுவது இவர்களின் மனோபாவம். இவர்களின் சாந்தமான முகம் பெண்களுக்கு மிகப் பிடிக்கும். இவர்களாகக் காதலிக்க மாட்டார்கள். ஆனால், இவர்களைக் காதலிக்க பெண்கள் கூட்டமே வரும். காரணம், இவர்களின் அப்பாவியான முகத்தோற்றம் தான். ஏதேனும் ஒரு கலையில் ஆர்வமுள்ள இவர்கள், உடையணிவதில் மிகுந்த கவனம் செலுத்துவர். சூழ்நிலைக்கேற்றவாறு தமது செயற்பாட்டை மாற்றிக்கொள்வதில் வல்லவர்கள். சாதாரண விடயங்களைப் பூதாகாரப்படுத்துவதில் சூரர்கள். குடும்பத்துக்குள்ளும் எதையாவது இப்படிக் குழப்பிக்கொள்வர். தோல்விகளைக் கண்டு துவண்டுபோவர். இருப்பினும் தோல்விகள் ஏற்படாவண்ணம் செயல்களை வடிவமைக்க ஒன்றாம் ஏழாம் எண்ணினரை அருகில் வைத்துக் கொள்வது நலம்.

அம்மனின் அனுக்கிரகம் பெற்ற இவர்களுக்குப் பெண்களால் பேருதவி கிடைக்கும். பிறரது உள்மனதை அறிந்து, அதற்கேற்பச் செயற்படுவது இவர்களின் தனிச்சிறப்பாகும். தெய்வீகம், ஞானம், தத்துவம் என்பனவற்றில் அதிக ஈடுபாடு உண்டு. வயிற்று உபாதை, நீர்சம்பந்தமான வியாதிகள் இவர்களுக்கு அடிக்கடி தோன்றும். இவற்றைப் போக்குவதற்கு உணவுக் கட்டுப்பாடு அவசியம். வானம் கறுத்தால் போதும். தடிமன் பிடித்துக்கொள்ளும். சித்த, ஹோமியோ மருத்துவம் இவர்களுக்கு அருமருந்தாகும். எழுதுகருவிகள், விவசாயம், பெண்களைக் கவரும் தொழில், தண்ணீர் சம்பந்தமானவை, கடல்வழி வியாபாரம், நகைக்கடை, புடவை, நறுமணப் பொருள், பல்பொருள் அங்காடி, மருந்துக் கடை, திரைப்படம், சோதிடம், சாஸ்திரம், எண்சாத்திரம் போன்றவை இவர்களுக்கு ஒப்பான தொழில்களாகும். வம்புச் சண்டைக்குப் போகாத இவர்கள், வந்த சண்டையையும் விட்டுவிடுவர். வசீகரத் தோற்றமுடைய இவர்கள், பெண்களிடம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். எந்தப் பழக்கத்துக்கும் அடிமையாவதைத் தவிர்க்கவேண்டும். இந்த மனித நேயப் பிரியர்கள், சோம்பலை எதிர்த்து, சுறுசுறுப்பை வரவழைத்து, தம்மால் எதையும் சாதிக்க முடியும் என்ற தன்னம்பிக்கையை வளர்த்துக்கொண்டால் நிச்சயம் வாழ்வில் உயர்வு உண்டு.



# நீங்கள் வேலைக்குச் செல்லும் பெண்ணா?

வீட்டையும் பார்த்துக் கொண்டு, வேலைக்கும் சென்று வரும் இயந்திர கதியான வாழ்க்கை முறை காரணமாக, பெண்களால் உடற்பயிற்சி மற்றும் ஆரோக்கிய முயற்சிகள் போன்றவற்றில் சரிவர ஈடுபட முடிவதில்லை. அதற்கு காரணம் எதுவாக இருந்தாலும், புலம்பிக் கொண்டே இருப்பதில் ஒரு பயனும் இருக்கப் போவதில்லை.

இவர்கள் தங்களது வேலை, வீட்டுப் பொறுப்பு போன்றவற்றோடு தங்களது சொந்த ஆரோக்கியத்துக்கும் சற்றும் கூடுதல் கவனம் மற்றும் அக்கறை எடுத்துக் கொண்டால் ஒழிய நிலைமை மாறப் போவதில்லை. வேலைக்குப் போகும் பெண்கள் பின்பற்ற வேண்டிய சில ஆரோக்கியக் குறிப்புகளைப் பார்க்கலாம்..

செல்போன் உரையாடல்களை நடந்தபடியே தொடருங்கள். உடலை நீண்ட நேரம் ஒரே நிலையில் வைத்திராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

உங்களுக்கு பொருந்தக்கூடிய சில உடற்பயிற்சிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். உதாரணமாக, வாரத்துக்கு இரண்டு முறை 20 நிமிடங்களுக்கு தசை வலுவூட்டும் பயிற்சிகள் சிலவற்றைச் செய்வது நல்லது அல்லது இடைவேளைப் பயிற்சியாக நடைப் பயிற்சி அல்லது மெது ஓட்டம் போன்றவற்றை மேற்கொள்ளலாம். இவை உடல் ஆரோக்கியத்துக்கும், உடற்கட்டுக்கும் புதுப்பொலிவை அளிக்கும்.

வேலைக்கு போகும் பெண்களின் ஆரோக்கியத்தை பேணுவதில் உணவுமுறை மற்றும் உடற்பயிற்சி ஆகிய இரண்டும் முக்கிய பங்கு வகிக்கின்றன. காலை உணவில் புதிய பழவகைகளைச் சேர்த்துக் கொள்வது சிறந்தது. இதனால் பழங்களில் உள்ள குளுக்கோஸ் உடலின் இனிப்பு வேட்கையைப் பூர்த்தி செய்துவிடும். முடிந்த வரை காலை உணவைத் தவிர்க்கக் கூடாது.



உடல் ஆரோக்கியத்துக்கும், சீரான இயக்கத்துக்கும் நீர் அத்தியாவசியமாகத் தேவைப்படுகிறது. எனவே அன்றாடம் குறிப்பிட்ட இடைவேளைகளில் நீர் அருந்தும் வழக்கத்தைக் கடைப்பிடிப்பது அவசியம். இது உடலில் நீர்ச்சத்து குறைந்து போவதைத் தடுக்கும். மேலும் தினமும் 3 லீற்றர் தண்ணீர் குடிக்க வேண்டியது முக்கியம். இதனால் உடலில் உள்ள தேவையில்லாத கழிவுகள் வெளியேறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மாப்பொருள் கொண்டு தயாரிக்கப்படும் பிஸ்கட், இனிப்பு ரொட்டிகள் போன்றவற்றையும், தேன் மற்றும் சாக்லெட்டுகள் போன்றவற்றையும், அதிக அரிசி உணவையும் தவிர்த்திடுங்கள். இவை இரத்த சர்க்கரை அளவை திடீரென்று அதிகரிக்கும் தன்மை கொண்டவை என்பதோடு, இன்சுலின் சுரப்பை தூண்டிவிட்டு, உடலில் கொழுப்பையும் சேர்த்துவிடக்கூடும்.

பெண்களைப் பொறுத்தவரையில் ஒரு மணிநேர உடற்பயிற்சி செய்முறைகள் போதுமானது. எனவே அதிக நேரம் ஜிம்மில் உடற்பயிற்சிகளில் ஈடுபடுவது களைப்பையும், சோர்வையும் ஏற்படுத்திவிடும்.



# வர்ணம் தீட்டலாம் வாங்க





# மணம் வீசுது!

மகிழ நாட்டை அரசர் ஒருவர் ஆண்டு வந்தார். அவர் எவருடைய அறிவுரையையும் கேட்காமல் விருப்பம்போல ஆட்சி செய்து வந்தார். இதனால் மக்கள் துன்பம் அடைந்தனர். நாட்டில் குழப்பம் நிலவியது. அரசரை எப்படி நல்வழிப்படுத்துவது என்று அமைச்சர்கள் கலந்து பேசினர். அவர்களில் ஒருவர், நாம் அறிஞர் நம்பியிடம் செல்வோம். அவர் இதற்கு நல்வழி காட்டுவார் என்றார். அதன் படியே அவர்கள் அனைவரும் அறிஞர் நம்பியிடம் சென்றனர். எங்கள் அறிவுரையைக் கேட்டு அரசர் நல்லாட்சி செய்ய வேண்டும். அதற்கு நீங்கள் தான் வழி சொல்ல வேண்டும் என்று வேண்டினர். சிந்தனையில் ஆழ்ந்த அவர், நாளை அரசவைக்கு வருகிறேன். உங்கள் விருப்பத்தை நிறைவேற்ற முயற்சி செய்கிறேன்– என்றார். மறுநாள் அவர் இரண்டு மூட்டைகளுடன் அரசவைக்கு வந்தார். அரசரை வணங்கிய அவர், அரசே! எனது நிலத்தில் இரண்டு இடங்களில் மண் எடுத்தேன். என்ன வியப்பு! இரண்டு இடங்களின் மண்ணும் வெவ்வேறு வகையாக உள்ளன என்றார். ஒரு மூட்டையைப் பிரித்தார். அதில் இருந்த மண்ணை அரசரிடம் காட்டினார். அதைப் பார்த்த அரசர், இது சாதாரண மண் என்றார்.

அடுத்த மூட்டையை அவிழ்த்தார் அவர். அதில் இனிய மணம் பரவியது. அந்த மண்ணை வாங்கி முகர்ந்து பார்த்தார் அரசர்.

மண்ணுக்கா இவ்வளவு மணம்? என்னால் நம்ப முடியவில்லையே. அந்த மண்ணும், இந்த மண்ணும் உமது நிலத்தில் எடுத்ததா? என்று வியப்புடன் கேட்டார்.


அரசே! மணம் மிகுந்த ரோஜாச்செடிகளுடன் இந்த மண் நீண்ட காலம் இருந்தது. ரோஜாவுடன் இனிய மணம் இந்த மண்ணையும் தழுவிக் கொண்டது. நான் முன்னர் காட்டிய மண் ரோஜாவின் தொடர்பு இல்லாதது. இந்த இரண்டு வகை மண்ணும் நமக்கு நல்ல அறிவுரைச் சொல்கிறது – என்றார் அவர். என்ன அறி வுரை? என்று கேட்டார் அரசர்.

அரசே! ரோஜாச் செடிகளின் தொடர்பினால் இந்த மண் மணம் வீசுகிறது. அதைப்போல நல்லோர் தொடர்பு உள்ளவர்கள் நல்லவராகி விடுவர். நீங்களும் அமைச்சர்கள், பெரியவர்களின் அறிவுரையைக் கேளுங்கள். அதன்படி நடந்தால் நாடு வளம் பெறும். உங்கள் புகழ் எங்கும் பரவும் என்றார் அவர்.

அறிஞரே! உம்மால் நல்லறிவு பெற்றேன். இனிமேல் பெரியவர்களின் அறிவுரையைக் கேட்டு நல்லாட்சி செய்வேன் என்றார் அரசர்.

சொன்னது போலவே, அவர்கள் அறிவுரையைக் கேட்டு நல்லாட்சி செய்தார்.







# மாத்தளை

மாத்தளை, இலங்கையின் மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு மாநகரம் ஆகும். மாத்தளை இலங்கையின் மலை நாட்டில் கொழும்பிலிருந்து 96 மைல் தொலைவிலும், கண்டியிலிருந்து 16 மைல் தொலைவிலும் அமைந்துள்ளது. இங்கு அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் மிகப் பிரசித்தி வாய்ந்த வணக்கத்தலமாகும். மாத்தளை மத்திய மலை நாடு என அழைக்கப்படும் இலங்கையின் புவியியல் பிரிவில் அமைந்துள்ளது. கடல் மட்டத்துக்கு மேல் சுமார் 492 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ளது. இங்கு வருடாந்த சராசரி வெப்பநிலை 23 பாகை செல்சியஸ் ஆகும். பெரும்பாலான மழைவீழ்ச்சி தென்மேற்கு பருவக் காற்றின் மூலம் கிடைக்கிறது. 2000 மி.மீ. வருடாந்த சராசரி மழை வீழ்ச்சியைப் பெறுகின்றது.

இங்கு நெற்பயிர்ச் செய்கை, மரக்கறிச் செய்கை முக்கிய இடத்தைப் பெறுகின்றன. மேலும் தேயிலை, இறப்பர் போன்ற பயிர்களும் இங்கு பயிரிடப் படுகின்றன.

# உங்களுடைய இலக்கை எளிதாக அடைய.... உங்களை நம்புங்கள்

இலக்கு இல்லாத மனிதன் அரை மனிதன் என்று சான்றோர்கள் கூறுவார்கள்.எம் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் ஒரு குறிப் பிட்ட இலக்கை நோக்கி பயணித்துக் கொண்டு தான் இருக்கிறது. பலமுறை தோல்விகளைத் தழுவக்கூடும். காரணம் என்ன... நாம் எம்முடைய இலக்கை நோக்கிப் பயணிப்பதில்லை. அடுத்தவரின் வழி காட்டுதல் அல்லது தூண்டுதலின்படி செல்கிறோம். பெரும்பாலானோர் தங்களுடைய இலக்கை நிர்ணயிப்பதில்லை. எம்மைப் பற்றிய எண்ணமும், தன்னம்பிக்கை குறைவுமே அதற்குக் காரணங்கள். இவற்றைப் போக்குவதற்கு சில வழிகள்.

**உங்கள் உள்ளாற்றலை அறியுங்கள்**
தன்னம்பிக்கையை வளருங்கள். மற்றவரிடம் இல்லாத தனித்திறமை உங்களிடம் உண்டு. அந்த திறமையைக் கண்டறிந்து சிறப்பாகச் செயற்படுங்கள்.

**உங்கள் வாழ்க்கையைச் சிறப்பாக்குங்கள்**
உங்களுடைய செயற்றிறனை அறியுங்கள். அதன்மூலம் செய்யும் காரியங்களை வெற்றிரமாக முடிக்கும் பழக்கத்தைக் கொண்டு வாருங்கள்.

**வருத்தம் கொள்ளாதீர்கள்**
உங்களுக்கு ஏற்படும் இழப்புகள் குறித்து வருத்தம் கொள்ளாதீர்கள்.

**கனவு காணுங்கள்**
எத்தகைய முயற்சிகள் மேற்கொண்டால் உங்களுடைய இலக்கை அடையலாம் என்று கனவு காணுங்கள்.



**திட்டமிடுங்கள்**
மேற்கொள்ளும் செயலில் வெற்றி காணத் தேவையான திட்டத்தைத் தீட்டுங்கள். அதை நடைமுறைப் படுத்துங்கள்.

**உங்களை நம்புங்கள்**
உங்கள் மீது அதிக நம்பிக்கை வையுங்கள். அதன் மூலமாகத் தான் தன்னம்பிக்கையும், மனத் தைரியமும் பெருகும்.

**முயற்சியைக் கைவிடாதீர்கள்**
ஒரு செயலைச் செய்யும்போது தோல்வி ஏற்பட்டால் அதனைக் கைவிடாமல் தொடர்ந்து போராடுங்கள். நிச்சயம் வெற்றி கிடைக்கும். இத்தகைய முயற்சிகளை மேற்கொண்டால் உங்களுடைய இலக்கை மிகவும் எளிதாக அடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருப்பு

வட்டுக்கோட்டை மற்றும் கோப்பாய் தொகுதிகளின் முடிவுகளின் அடிப்படையில் ஈ.சரவணபவன் வெற்றி பெற்றார்.

நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 5 ஆசனங்களைக் கைப்பற்றியிருந்தது. இதில் 4 ஆசனங்களுக்கு, சி.சிறீதரன், மாவை.சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். 5 ஆவது ஆசனத்தில் ஈ.சரவணபவன் மற்றும் க.அருந்தவபாலன் ஆகியோருக்கு இடையில் போட்டி நிலவியது.

தபால் மூல வாக்களிப்பு, சாவகச்சேரி தொகுதியின் வாக்களிப்பு என்பவற்றின் அடிப்படையில் க.அருந்தவபாலன் முன்னிலையில் இருந்தார். பின்னர், பருத்தித்துறை, யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டைத் தொகுதிகளின் விருப்பு வாக்கு எண்ணிக்கை வெளிவரத் தொடங்க, சரவணபவன் முன்னிலை வகிக்கத் தொடங்கினார்.

கடைசியாக காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை, கோப்பாய் தொகுதிகளில் அருந்தவபாலனை விட அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்றதன் காரணமாக, 794 வாக்குகள் [illegible]தியாசத்தில் சரவணபவன் கூட்டமைப்பின் ஐந்தாவது நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்வானார். (த-5)

## தேசிய

இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் பொதுத்தேர்தலில் நாம் எதிர்பார்த்த வெற்றியை எட்டாது விட்டாலும் பெரும்பாலான ஆசனங்களைப் பெறுமளவுக்கு வாக்களித்துள்ளீர்கள். 6 ஆசனங்களை எதிர்பார்த்திருந்தும் கூட்டமைப்புக்கு 5 பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. அவர்கள் எம் மீது கொண்டுள்ள விசுவாசம் நம்பிக்கையை நாம் மதிக்கிறோம். நன்றி தெரிவிக்கிறோம்.

தொங்கு நாடாளுமன்றம் வருமா[illegible] தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மற்றும் கட்சிகளையும் அழைத்துப் பேசி அது தொடர்பில் என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றி அறிவிப்போம். அரசுடன் இணைவது பற்றிய எண்ணம் இல்லை. இணையுமாறு அரசு பலமுறை அழைத்துள்ளபோதும் நாம் அதற்குச் சம்மதிக்கவில்லை–என்றார்.

சம அந்தஸ்துடன் கூடிய நாடு ஒன்று அமைக்கப்படும் என்று ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளமை குறித்துக் கேட்டபோது பதிலளித்த அவர், ரணில் விக்கிரமசிங்கவோ அல்லது ஜனாதிபதியோ எமது மக்களுடைய பலத்தைக் கொண்டு தெரிவு செய்யப்பட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அப்படி ஒரு கருத்தைச் சொல்வாராக இருந்தாலும் நாம் அதற்கு என்ன பதில் சொல்ல வேண்டும் என்பதனையும் நாம் தெரிவிப்போம்–என்றார்.

இந்தத் தேர்தலை வெற்றிகரமாகக் கொண்டு நடத்திய தேர்தல் திணைக்கள அதிகாரிகள் உள்ளிட்ட சகல அலுவலர்களுக்கும் பொதுமக்களுக்கும் பொலிஸாருக்கும் மாவை நன்றி தெரிவித்தார்.

அங்கு உரையாற்றிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்,

வடக்குக் கிழக்கில் அதிகூடிய வெற்றி எமக்குக் கிடைக்கும். அதனை வைத்துக் கொண்டு தொங்கு நாடாளுமன்றம் அமைவது உறுதியாகிக் கொண்டிருக்கிறது. அதன்மூலம் நாம் பேரம் பேசும் ஆற்றலைக் கூட்டி விஞ்ஞாபனத்தை அடையக் கூடியளவுக்குக் கூடிய அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக சகல விடயங்களையும் கவனத்தில் எடுத்துக் கொள்வோம் என்றார்.

அங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீ தரன்,

தமிழ்த் தேசிய இருப்புக்காகவும் தமிழ்த் தேசிய அடையாளத்துக்காகவும் தமிழ் மக்களுக்கு விரைவான தீர்வைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலும் தமிழ் மக்கள் கூட்டமைப்புக்கு வாக்களித்துள்ளனர். இதனூடாகத் தமிழ் மக்களின் தேசிய இருப்பையும்; தன்னாட்சி தாயகத்துக்கான அடிப்படை உரிமைகளை வென்றெடுப்பதற்கான வரலாற்றின் அடையாளமாகவும் இதனைப் பார்க்கிறோம். மக்களின் அபிலாசைகளையும் அவர்களின் உணர்வுகளையும் புரிந்து அதனடிப்படையில் எமது பயணம் தெளிவாக அமையும் என்று தெரிவித்தார். (த-4)

## ரணிலுக்கு

டியுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தில், இலங்கை–இந்திய உறவு மேலும் வலுவாக இருக்கும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அத்துடன், நீதியான தேர்தலொன்று இடம்பெற்றமை குறித்து இலங்கை வாழ் மக்களுக்கு தமது பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார். (த)

## அர்ப்பணமற்றோரை

கூட்டமைப்பின் வெற்றி குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நடைபெற்றபொதுத்தேர்தலில்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை

வடக்கு – கிழக்கு மாநிலமெங்கும் அனைத்துத் தொகுதிகளிலும் வெற்றி பெறச் செய்த எம் தமிழ் மக்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் எம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைத் தோற்கடிக்க வேண்டும், அதன் தலைமையை மாற்றவேண்டும் என்றுஅகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் உள்ளிட்ட சில உதிரிக் கட்சிகள் தமது இலக்கு அது தான் எனப் பிரசாரம் செய்தனர். தீவிரவாதச் சிங்களக் கட்சிகளையோ அல்லது கொழும்பு அரசியற் தலைமைகளையோ ஒரு வார்த்தையால் கூட எதிர்த்திருக்க மாட்டார்கள். பத்திரிகைகளில் செய்திகள்,கட்டுரைகள், இணையத்தளங்களில்,முகநூலில் எதிராகத் தீவிர பிரசாரம் செய்தனர். உண்மைக்கு மாறான பல செய்திகள் கடந்த ஓராண்டாகவே எம்மில் சிலரைக் குறி வைத்துக் கட்டியெழுப்பினர். உண்மைகளைப் பொய் என்றனர். பொய்யை உண்மை என்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் அவற்றிற்கு உண்மை விளக்கமளித்துப் பதில் அளித்தனர். மக்கள் அவ்வாறு பொய்யுரைத்தவர்களை, அர்ப்பணமற்றவர் களைத் தெளிவாக அறிந்து முற்றுமுழுதாக இந்தத் தேர்தலில் தோற்கடித்து அரசியல் அரங்கிலிருந்துஅகற்றியுள்ளனர்.

மொத்த வாக்குகளில் ஐந்து வீதத்தை எட்டியவர்கள் மற்றும் உதிரிகள் மக்கள் வாக்குகளைப் பிளவுபடுத்தாமலிருந்திருந்தால் ஏழு இடங்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே வென்றிருக்கும். பொறுப்புள்ளவர்களாக மக்கள் நம்பியவர்களின் கூட்டமைப்புக்கெதிரானதும்,குழப்பமானதும் தொடர்ச்சியானதுமான அறிக்கைகள் மக்களை ஓரளவு குழப்பியிருந்தன. வீட்டுச் சின்னத்திற்குப் போட்டுப் பழுதாகிப் போன இருபதாயிரம் வீணாகிப் போயின.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மீது நம்பிக்கை கொண்ட மக்கள் தமிழர் வாழும் மாநிலத்தில் மிகப் பெரும் வெற்றியை வழங்கியுள்ளனர். நாமும் அம்மக்கள் மீது நம்பிக்கையும் விசுவாசமும் கொண்டவர்களாய் முழுமையாக அர்ப்பணிக்கின்றோம். கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையை எம் மக்கள் ஏற்று வாக்களித்துள்ளனர். அவ்வறிக்கையில் கூறப்பட்டவாறு தமிழ்த் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணல் மற்றும் நிலமீட்பு,மீள் குடியேற்றம்,சிறையிலிருப்போர் விடுதலை, வாழ்விழந்தோர், வாழ்வா தாரமற்றோர் மற்றும் அனாதைச் சிறார்களுக்கு நலத்திட்டங்கள் உருவாக்கி நடைமுறைப்படுத்தல், புதிய நிபுணத்துவத்துடன் தொழில் துறைகளைக் கட்டியெழுப்பி வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்கவும் நடவடிக்கைகள் எடுப்போம்.

எனவே இத் தேர்தல் வெற்றிக்குதம்மை அர்ப்பணித்துத் தீவிரமாக உழைத்தமக்கள் கல்வியாளர், தொண்டர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், புலம்பெயர் தமி ழர்களுக்கும்எம் இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தொடர்ந்தும் நாம் அணி திரண்டுஎம் தமிழர் தேசத்தினதும், தமிழ்த் தேசிய இனத்தினதும் விடுதலைக்கும், விடிவுக்குமாக அர்ப்பணித்து உழைப்போம்–என்றுள்ளது. (த)

## சம

மேலும் குறிப் பிடப்பட்டுள்ளவை வருமாறு:–

ஜனவரி 8 ஆம் திகதி ஏற்படுத்திய புரட்சியை முன்னெடுத்துச் சென்று, நல்லாட்சியையும் இணக்கப்பாட்டினையும் முன்னெடுத்துச் செல்வதற்காக நாட்டின் பெருந்தொகையான மக்களின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

தேர்தல் காலம் முழுவதும் மக்களின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் அயராது உழைத்த அனைத்து தரப்பினருக்கும் எனது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்

கொள்கின்றேன். சுதந்திரமானதும், நேர்மையானதுமான ஒரு தேர்தலை நடத்துவதற்கான சுமுகமானதொரு சூழலை இந்தத் தேர்தலில் உருவாக்கிக் கொள்வதற்கு எம்மால் முடியுமாயிற்று. இந்த சிறந்த சூழலை தொடர்ந்தும் பாதுகாத்துக் கொள்வது எமது கடமையாகும்.

தற்போது வெற்றியாளர்கள், தோல்வியடைந்தவர்கள் என பிரித்துப் பார்க்கக் கூடாது. ஒரு தாயின் பிள்ளைகளைப் போன்று நாங்கள் அனைவரும் புதிய அரசியல் கலாசாரமொன்றை உருவாக்குவதற்காக ஒன்றுபட வேண்டும். புதிய யுகத்தின் சவால்களுக்கு முகம் கொடுத்து எங்கள் தேசத்தை முன்னேற்றுவதற்கு ஒருமனதுடன் ஒத்துழைக்க வேண்டியுள்ளது.

அந்த சவாலை வெற்றிகொள்வதற்கு எங்களுடன் கைகோர்க்குமாறு உங்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன்.

நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து நாகரிகமான சமூகமொன்றை உருவாக்குவோம். இணக்கப்பாட்டுடன் கூடிய ஓர் அரசை உருவாக்குவோம். சகலருக்கும் சம அந்தஸ்துடன் கூடிய புதிய நாடொன்றை உருவாக்குவோம் – எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

## நல்லாட்சியை

எதிர்க்கட்சியாகி யுள்ளது. அம்பாந்தோட்டை,காலி, மாத்தறை உட்பட 7 மாவட்டங்களை ஐ.ம.சு.மு. தன் வசப்படுத்தியுள்ளது.

அதேவேளை, [illegible] முதல் [illegible] வரையிலான ஆசனங்களைக் கைப்பற்றும் ஆசனங்களையே வென்றுள்ளது.

எனினும், அக் கட்சியின் வாக்குவங்கியில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமை அவதானிக்க முடிகிறது. இரண்டு போனஸ் ஆசனங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

யாழ், வன்னி, மட்டக்களப்பு ஆகிய தேர்தல் மா வட்டங்களில் வெற்றி நடைபோட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட் டமைப்பு 2போனஸ் ஆசனங்களுடன் மொத்தமாக 14 ஆசனங்களை வென்று நாடாளு மன்றத்தில் மூன்றாவது கட்சியாக உருவெடுத்துள்ளது.

அத்துடன், இம்முறை தனித்துபோட்டியிட்ட ஈ.பி.டி.பி. யாழ் மாவட்டத்தில் ஒரு ஆசனத்தை பெற்றுள்ளது. மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிஸுக்கு ஒரு ஆசனம் கிடைத்துள்ளது. (த)

## மூன்றாவது

ஆசனத்தையும், மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில் 3 ஆசனங்களையும், அம்பாறை மாவட்டத்தில் ஓர் ஆசனத்தையும் பெற்று கூட்டமைப்பு வெற்றி கொண் டுள்ளது.

அத்துடன், தேசியப் பட்டியல் ஊடாக மேலும் 2 ஆசனங்களைக் கூட்டமைப்புக் கைப்பற்றியுள்ளது.

இதன்மூலம் நாடாளுமன்றில் ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு அடுத்து மூன்றாவது பெரும் கட்சியாகக் கூட்டமைப்பு உருவெடுத்

துள்ளது.

தமிழ் மக்கள் தங்களின் ஏகோபித்த வாக்குகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வடக்கு, கிழக்கில் மீண்டும் அமோக வெற்றியடையச் செய்துள்ளனர்.

எட்டாவது நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்டங் களை உள்ளடக்கிய யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி) 2 இலட்சத்து 7 ஆயிரத்து 577 வாக்குகளைப் பெற்று 5 ஆசனங்களையும், ஈழ மக்கள் ஜன நாயகக் கட்சி

(ஈ.பி.டி. பி.) 30 ஆயிரத்து 232 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தையும், ஐக்கிய தேசியக் கட்சி 20 ஆயிரத்து 25 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தையும் கைப்பற்றி யுள்ளன.

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய தொகுதிகளை உள்ளடக்கிய வன்னித் தேர்தல் மாவட்டத்தில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழரசுக் கட்சி) 89 ஆயிரத்து 886 வாக்குகளைப் பெற்று 4 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 39 ஆயிரத்து 513 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 20 ஆயிரத்து 965 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியுள்ளன.

அதேவேளை, திருகோணமலை தேர்தல் மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 45 ஆயிரத்து 894 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தையும், மட்டக்களப்பு தேர்தல் மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 27 ஆயிரத்து 185 வாக்குகளைப் பெற்று 3 ஆசனங்களையும், அம்பாறை தேர்தல் மாவட்டத்தில் 45 ஆயிரத்து 421 வாக்குகளைப் பெற்று ஓர் ஆசனத்தையும் பெற்றுள்ளது.

யாழ்.தேர்தல் மாவட்டம்

சி.சிறிதரன் மாவை.சேனாதிராசா, எம்.ஏ.சுமந் திரன் , த.சித்தார்த்தன், ஈ.சரவணபவன் வன்னித் தேர்தல் மாவட்டம் சாள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன், சிவமோகன்

திருகோணமலை தேர்தல் மாவட்டம் ஆர்.சம்பந்தன் மட்டக்களப்பு தேர்தல் மாவட்டம்

சிறிநேசன், அமல், யோகேஸ்வரன்

அம்பாறை தேர்தல் மாவட்டம்

கோடீஸ்வரன் (த-சி)

## பொன்சேகாவின்

நாயகக் கட்சி நடைபெற்ற பொதுத் தேர்தலில் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

அத்துடன், பேரினவாத அமைப்பாக கருதப்படும் பொது பலசேனா அமைப்பின் அரசியல் கிளையான பொதுஜன பெரமுன

வாலும் ஒரு ஆசனத்தையேனும் கைப்பற்ற முடியாமல்போயுள்ளது.

அதேவேளை, வடக்கு,கிழக்கில் தனித்து களமிறங்கிய கஜேந்திர குமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் தோல்வியடைந்துள்ளது.

கண்டி, கேகாலை மற்றும் பதுளை மாவட்டங்களில் தனித்துக் களமிறங்கிய இலங்கைத் தொழிலாளர் காங் கிரஸ், நுவரெலியா மாவட்டத்தில் தனித்துப் போட் டியிட்ட பிரஜைகள் ஆகியனவும் தோல்வியடைந் துள்ளன.

அக்கட்சிகள் சார்பில் போட்டியிட்ட பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா, அனோமா பொன்சேகா, ஞானசார தேரர், டிலந்த விதானகே மற்றம் நந்த தேரர், அன்னாமலை பாஸ்கரன் மற்றும் கஜேந்திர குமார் பொன்னம்பலம் உள்ளிட்ட பல முக்கிய வேட்பாளர்கள் வெற்றி பெறவில்லை.

ஜனநாயக கட்சி கடந்த காலங்களில் எழுச்சி பெற்று வந்தபோதிலும் இம்முறைத் தேர்தலில் போட்டியிட்ட அனைத்து மாவட்டங்களில் பின்னடைவைச் சந்தித்துள்ளது.

அதேபோன்று பொதுபல சேனா உறுப்பினர்கள் நாகப் பாம்பு சின்னத்தில் பொதுஜன பெரமுனவின் கீழ் போட்டியிட்டிருந்தனர். இவர்களுக்கு பேருவளையில் மாத்திரமே 2202 வாக்குகள் கிடைத்திருந்தது. அது தவிர அனைத்து தேர்தல் தொகுதிகளிலும் ஆயிரத்துக்கும் குறைவான வாக்குகளையே பெற்றிருந்தனர்.

வடக்கு–கிழக்கில் தனித்துப் போட்டியிட்ட அகில இலங்கை தமிழ் காங்கிர ஸினாலும் ஒரு ஆசனங்களையும் பெற்றுக்கொள்ளமுடிய வில்லை. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 15022 வாக்குகளையும், வன்னி மாவட்டத்தில், 1174 வாக்குகளையும், திருகோணமலை மாவட்டத்தில் 1144 வாக்குகளையும், திகாமடுல்ல 239 வாக்குகளையும், மட்டக்களப்பில் 865 வாக்குகளையும் அது பெற்றிருந்தது.

கண்டி, பதுளை மற்றும் கேகாலை மாவட்டங்களில் தனித்து சேவல் சின்னத்தில் போட்டியிட்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் படுதோல்வியடைந்ததுடன் ஓர் ஆசனத்தையாவது பெற்றுக் கொள்ள முடியவில்லை. பதுளையில் 10259 வாக்குகளையும், கண்டி மாவட்டத்தில்! 4400 வாக்குகளை யும் மற்றும் கேகாலை மாவட்டத்தில் 2448 வாக்குகளையும் பெற்றிருந்தமைக் குறிப்பிடத்தக்கது.

நுவரெலியா மாவட்டத்தில் தனித்துப் போட்டியிட்ட பிரஜைகள் முன்னணி மாவட்ட ரீதியில் 2250 வாக்குகளை மாத்திரமே பெற்றுள்ளது.

இதேவேளை, 12 ஆசனங்களை எதிர்ப்பார்த்திருந்த ஜே.வி.பி.யும் எதிர்ப்பார்த்த ஆசனங்களை கைப்பற்ற முடியாது ஏமாற்ற மடைந்தது. எனினும், அக்கட்சி தனது வாக்கு வீதத்தினை அதிகரித்துக் கொண்டுள்ளதனை காணக்கூடியதாக உள்ளது. (த-சி)

## முன்னாள்

யுள்ளனர்.

இதில் நந்திமித்திர ஏக்கநாயக்க, ரோஹன திஸாநயக்க, ஜகத் புஸ்பகுமார, திஸ்ஸ கரலியத்த, எஸ்.பி. திஸாநாயக்க, விஜித முனி சொய்சா ஆகியோர் அடங்குவர். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## ரியோ ஒலிம்பிக் தொடருக்கான தொடக்கவிழா பயிற்சிகள் ஆரம்பம்

அடுத்த வருடம் ஒலிம்பிக் தொடர் பிரேஸிலின் ரியோ நகரில் நடைபெறவுள்ள நிலையில் ஒலிம்பிக் தொடருக்கான கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன. தொடக்க விழாவுக்கான (தீபம் ஏற்றும் விழா) பயிற்சிகள் தற்பொழுது ஒலிம்பிக்கின் பிறப்பிடமான ஒலிம்பியா நகரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஒலிம்பிக் தொடர் எங்கு நடைபெற்றாலும் அதற்கான தீபம் (ஒலிம்பிக் தீபம்) ஒலிம்பிக்கின் நாயகமான ஒலிம்பியா நகரிலேயே முதல்முதலில் ஏற்றப்படும். பெரும் மதிப்புடன் ஒலிம்பியா நகரினதும் கிறிஸ்துவுக்கு முன்னரான காலப்பகுதிகளினதும் காலாசாரத்தைப் பிரதிபலிக் கும் விதமாகவும் இந்தத் தீபம் ஏற்றப்படும். இதற்கான பயிற்சி ஆரம்பிக்கப்பட்டு விட்டது. (ம)

**வேலையாள்கள் தேவை**

பேக்கரி வேலையில் அனுபவமுள்ள வேலையாள்கள் தேவை.
* றஸ்க் தூள் மொத்தமாக விற்பனைக்குண்டு

தொடர்பு : 077 674 7277

**விற்பனைக்கு**

பாவனையிலுள்ள 100 அடி நீளம் 100 அடி அகலம் கொண்ட இரும்புப் பைப்புக்களால் தயாரிக்கப்பட்டு தகர கூரையைக் கொண்ட கொட்டகை விற்பனைக்குண்டு.

தொடர்பு : 021 222 9296
075 783 6550

**பணியாளர்கள் தேவை**

யாழ். நகரில் உள்ள கடை ஒன்றுக்கு பணியாளர்கள் தேவை.

தொடர்பு: 07777 50318

**வேலையாள்கள் தேவை**

"ஆர்த்தி", மானிப்பாய், சங்கானை, கிளிநொச்சி ஆகிய இடங்களில் இயங்கும் கிளைகளுக்கு கணினிப் பதிவாளர்கள் (Data Entry), விற்பனையாளர், பழக விரும்புவோர், ஆண், பெண் இருபாலாரும் தேவை. நேரில் வரவும்.

தொடர்பு: 076 6829 867

**வேலையாள் தேவை**

கடை ஒன்றில் பணிபுரிய ஆண், பெண் இருபாலாரும் வேலைக்குத் தேவை. 25 வயதுக்கு உட்பட்டவர்கள் வியாபாரம் தெரிந்தவர் விரும்பத்தக்கது.

தொடர்பு : 021 791 2997
075 988 0000

**உடனடி வேலைவாய்ப்பு - New Batch (Management Trainees 2015-2016 Study & Work in North Provincial)**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்துக்கு முகாமைத்துவ பயிற்சிக்கு யாழ்ப்பாணம்/கிளிநொச்சி/முல்லைத்தீவு/மன்னார் வவுனியா ஆகிய பிரதேசங்களில் பயிற்சி பெற விரும்புபவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* பயிற்சி இலவசமாக வழங்கப்படும்.
* பயிற்சியின்போது கொடுப்பனவுகள் வழங்கப்படும். (Fixed income Package 12000/=)
* பயிற்சியின் பின்னர் அடிப்படைச் சம்பளம், ETF, EPF அடங்கலாக ரூபா 60,000/= மேல் பெறலாம்.
* தொழில் நிரந்தரமாக்கப்படும்.
* பயிற்சிக் காலம் 03-06 மாதங்கள்.

Granton International (Pvt) Ltd
No.225, 3rd cross street, Hospital Road, Jaffna.
Contact:- 0774458134, 0779994807

**பதினாறாம் ஆண்டு நினைவலைகள்**



தோற்றம் 19.05.1917 | மறைவு 18.07.1999

அமரர் சின்னத்தம்பி சின்னையா

தாய்ப்பாசமறியா வளர்ந்த எனக்கு
தாய்க்கு தாயாகவும்
அன்பான அப்பாவாகவும்
தரணியிலே வளர்த்து ஆளாக்கிய - என்
தந்தைக்கு உங்கள் இளையமகனின்
இரங்கலிது

40/1, நொத்தாரிஸ் வீதி, அரியாலை மேற்கு, யாழ்ப்பாணம்.

அன்பு மகன் சி. செல்வராஜா குடும்பத்தினர்.

**மரண அறிவித்தல்**



திருமதி சுந்தரம்பிள்ளை நாகரெத்தினம்

24, பிறவுண் வீதியை வசிப்பிடமாக கொண்ட திருமதி சுந்தரம்பிள்ளை நாகரெத்தினம் நேற்று (18.08.2015) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

24, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
0212217076

தகவல்
க.இராஜகுலேந்திரன் (மகன்)
(உரிமையாளர் விவேகானந்த அச்சகம்)

## இரண்டாவது ரி-20 ஆட்டத்தில்
# பழிதீர்த்தது நியூஸிலாந்து
## தொடரும் சமநிலையில் நிறைவடைந்தது




நியூஸிலாந்து தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான இரண்டாவது ரி-20 ஆட்டத்தில் 32 ஓட்டங்களால் தென்னாபிரிக்காவை வீழ்த்தி முதலாவது ரி-20 ஆட்டத்தில் அடைந்த தோல்விக்கு பழிதீர்த்தது டன் தொடரையும் 1:1 என்று சம நிலையில் முடித்தது நியூஸிலாந்து.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானிக்க களத்தில் ஆரம்ப வீரர்களாக குப்திலுடன் வில்லியம்சன். முதலாவது ரி-20 ஆட்டத்தில் காட்டிய தடுமாற்றத்துக்கு தக்க பதிலடி கொடுத்தார் குப்தில். ஆரம்பத்திலிருந்து 150 இற்கும் அதிகமான சராசரியில் 'வேடிக்கை காட்டினார். அடிக்கொரு தடவை சிக்சரும் இருக்கத் தவறவில்லை. குப்திலைப் போல் அதிரடி காட்டவில்லையாயினும் இலக்குச் சரிவை ஏற்பட விடாமல் சுமாரான சராசரியில் ஆடிக்கொண்டிருந்தார் வில்லியம் சன். இலக்குச்சரிவில்லாமல் இணைப்பாட்டம் 50 ஓட்டங்களை எட்டியது. 30 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் குப்தில். 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் வில்லியம்சன். வந்த வேகத்தில் விடைபெற்றார் லாதம். அரைச்சதம் கடந்து ஆட்டமிழந்தார் குப்தில். எலியாட்டும் நீஸ்ஹம் பின்வரிசையில் மிரட்ட முடிவில் நியூஸிலாந்து 177.

120 பந்துகளில் 178 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி. தென்னாபிரிக்காவின் அதிரடிப்பட்டாளத்தால் நிச்சயம் சாத்தியமாகும். ஆனால் மூன்றே ஓட்டங்களுடன் விடை பெற்றார் வான் வைக். தடுமாற்றம் காட்டி பதின்மத்துடன் பவிலியன் திரும்பினார் அம்லா. சிக்சருடன் இன்னிங்ஸை ஆரம்பித்தாலும் 15 ஓட்டத்தைத் தாண்டவில்லை வில்லியர்ஸ். ரொஸ்சொவ், பெக்கார் டின், மில்லர் மூவரும் முறையே 26 ஓட்டங்களுடனும் 36 ஓட்டங்களுடனும் 29 ஓட்டங்களுடனும் சுமாரான பங்களிப்பு கொடுக்க தென்னா பிரிக்கா கௌரவ நிலை மையை அடைந்தது. ஆயினும் வெற்றி தென்னாபிரிக்காவுக்கு வெகுதூரத்தில் இருந்தது. பின்வரிசை வீரர்கள் சொதப்ப முடிவில் தென்னாபிளரிக்கா 145-8 ஓட்டங்களை மட்டுமே பெற்று 32 ஓட்டங்களால் படு தோல்வியடைந்தது. (ம)

## மீண்டும் வருகிறேன்



இந்திய அணியின் அதிரடி வீரரான 3 மாதகால இடைவேளையின் பின்னர் மீண்டும் கிரிக்கெட் பக்கம் திரும்பி வலைப்பயிற்சிகளில் களமிறங்கியுள்ளார்.

அதிரடியில் கொடிகட்டிப் பறந்த யுவராஜிற்கு கடந்த சில வருடங்கள் தோல்வியே மிச்சமாகின. ஐ.பி.எல். தொடருட்பட எதிர்பார்க்கப்பட்ட எந்தத் தொடரிலும் யுவராஜ் சிறப்பாகச் செயற்படவில்லை. இந்த நிலையில் மீண்டும் போமுக்கு திரும்பும் நோக்கத்துடன் ஒக்டோபர் முதல் வாரத்தில் தொடங்கும் ராஞ்சி கிண்ணத் தொடருக்காக இப்பொழுதே தீவிர வலைப்பயிற்சியில் களமிறங்கியுள்ளார்.

வலைப்பயிற்சிக்கு திரும்புவது மகிழ்ச்சியளிக்கிறது. விரைவில் வருகிறேன் என்று ருவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்ட அவர், வலைப் பயிற்சியில் ஈடுபடுவது போன்ற வீடியோ ஒன்றையும் பதிவிட்டுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்னேஸ்வரா வி.கழக முடிவுகள்

யாழ்ப்பாணம், ஓக. 19

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் விக்னேஸ்வர விளையாட்டுக்கழகம் நடத்தும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர் த்து வதிரி டைமன்ஸ்அணி மோதிக் கொண்டது. இதில் வதிரி டைமன்ஸ் அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந் துறை சென். மேரிஸ் அணியை எதிர்த்து சென்.மைக்கல் அணி மோதிக் கொண்டது. இதில் நாவாந்துறை சென்.மேரிஸ் அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ம-23)

## மரண அறிவித்தல்

### பொன்னையா சிவபாதசிங்கம் (குணம்)



அரியாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னையா சிவபாதசிங்கம் (குணம்) நேற்று (18.08.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-பாக்கியலட்சுமி தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான இராசையா-பத்மாசினி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சாவித்திரியின் அன்புக் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2015) புதன்கிழமை பி.ப 3.00 மணியளவில் 59,A V றோட், அரியாலையில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சிந்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

59, A.V றோட், அரியாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்
பிலிப்பியர் 1 :21

### கந்தசாமி மகேஸ்வரி (சாராள்)



மூளாயைப் பிறப்பிடமாகவும் கொக்குவில், தலையாளி, சபாபதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி மகேஸ்வரி 16.08.2015 ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் வண்ணார்பண்ணை கேசாவில் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தங்கவேலாயுதம் மற்றும் மனோகரி (பகவதி), புனிதவதி, துரையம்மா, செல்வம் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்றவர்களான சுந்தரம், ஜெயக்குமார் மற்றும் விநாயகமூர்த்தி, வெற்றிவேல், யோகம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (20.08.2015) வியாழக்கிழமை முற்பகல் 10.00மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக யாழ்ப்பாணம், கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஊழியர்கள், விசுவாசிகள், சபையார் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தலையாளி,
சபாபதி வீதி, கொக்குவில்.

தகவல்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா சின்னத்தம்பி



மயிலிட்டியை பிறப்பிடமாகவும் மதவடி ஒழுங்கை, சுதுமலை வடக்கை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சின்னத்தம்பி 15.08.2015 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி (முன்னாள் ஊழியர் சீமெந்து தொழிற்சாலை, காங்கேசன்துறை) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற கந்தையா - அருமைப் பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ் சென்றவர் களான கணபதிப்பிள்ளை, செல்லாச்சி, இராச ரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சி.யோகநாதன் (கனடா), க.ராகினி ஆகியோரின் அன்புத் தாயாரும் கஜேந் திரன், வசி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற தர்சினி மற்றும் நிஷாந்தன், பபிஷான், கேஷனி, சாம், ஜெய்தா (கனடா) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2015) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மதவடி ஒழுங்கை, சுதுமலை
வடக்கு, சுதுமலை.
0779575620

தகவல்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### தம்பையா கந்தப்பு (கந்தர்)



நாகர்கோவில் தெற்கு நாகர் கோவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா கந்தப்பு 18.08.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - அன்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் இராசம்மாவின் கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (19.08.2015) புதன் கிழமை மு.ப 10.00 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் குடத்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

வலிக்கண்டி,
குடத்தனை.

தகவல்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை ஜெயரத்தினம்



கைதடி மேற்கு கைதடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை ஜெயரத்தினம் நேற்று (18.08.2015) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, பரமேஸ்வரி, திருச்செல்வி ஆகியோரின் அன்புச் சகோ தரனும் காலஞ்சென்றவர்களான இராஜேந்திரம், சோதிலிங்கம் மற்றும் ஏரம்பமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் செல்வக்குமார், நாகபூசனி, சிவகேஜினி, மதிவதனி, காலஞ்சென்ற இராஜகுலேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2015) புதன்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கைதடி மேற்கு, கைதடி.
0214901540

தகவல்
ந.ஏரம்பமூர்த்தி

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா குகபிரசாதன்



தோற்றம்:09.10.1927
மறைவு: 18.08.2015

மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வவுனியா உக்கிளாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா குகபிரசாதன் நேற்று (18.08.2015) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குகபிரசாதனின் மனைவியும், சிவபாதசுந்தரம் (சிவம்), காலஞ்சென்ற குகானந்த சிவம் (குகன்) மற்றும் கிருபானந்தசிவம் (கண்ணன்-பிரான்ஸ்), சிவானந்தசிவம் (செல்லா-வவுனியா), அருட் சிவம் (ராஜா-பிரான்ஸ்) ஆகியோரின் தாயும், கமலாதேவி, சித்ரா (பிரான்ஸ்), இராஜலக்ஷ்மி (வவுனியா), சந்திரா (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும், ராகுலன், கோகுலன், விதுரன், நித்தியா, யதுஷன், நிரூபா, விஜிதா, அனுஷியா, சாதூரி, சாகரி ஆகியோரின் பேர்த்தியும், சயானாவின் பூட்டியும், பரஞ்சோதி, சிவசோதி, புனிதம், ராணி, காலஞ்சென்ற மகாலிங்கம், நாகேந்திர ராஜா, நாதன் ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (19.08.2015) பி.ப 4.00 மணியளவில் தட்சனாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செல்லா 077 1741788

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சானியா இணைக்கு தோல்வி

கனடாவின் மொன்றியேல் நகரில் நடைபெற்றுவரும் மொன்றியேல் மாஸ்டர்ஸ் ரென்னிஸ் தொடரில் பெண்கள் இரட்டையர் பிரிவில் சானியாமிர்சா (இந்தியா), மார்ட்டினா ஹிங்கிஸ் (சுவிற்ஸர்லாந்து) இணை அரையிறுதியில் தோல்வியடைந்து வெளியேறியுள்ளது. அரையிறுதியில் மிர்சா – ஹிங்கிஸ் இணையை எதிர்கொண்ட கரோலின் கார்சிமா கேத்ரினா இணை 6:3, 6:2 என்ற கணக்கில் சானியா இணையை வீழ்த்தி இறுதிக்கு முன்னேறியது. (ம)

**CIMA-UK ENGINEERING-USA**
**BIT - University of Colombo**
**புலமைப்பரிசிலிற்கான விண்ணப்பங்கள்**
கோரப்பட்டுள்ளன. தொழில் தேடுவோர், பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தோர், பல்கலைக்கழக மாணவர்கள் பதவி உயர்வுக்கு விண்ணப்பிப்போர் வெளிநாடு செல்வோர் ஆகியோருக்கு ஏற்றது. கற்கைநெறி முடிவில் அரச வேலையிலும், வங்கிகளிலும் மென்பொருள் நிறுவனங்களிலும் அதிகசம்பளத்துடன் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்வாங்கப்படுவர். ஆகக்குறைந்த கல்வித் தகைமை க.பொ.த.சா.த சித்தி. விண்ணப்ப முடிவு திகதி 28 Aug. புலமைப் பரிசிலிற்கும் மேலதிக விபரங்களிற்கும் உங்கள் முழுப்பெயர், கற்கைநெறி பிறந்த திகதி என்பவற்றை 772395895 ற்கு sms செய்யவும். பதிவுக்கட்டணம், வருடாந்தக்கட்டணம், கற்கை நெறிக்கட்டணம், பரீட்சைக் கட்டணம் என்பன புலமைப்பரிசிலாக வழங்கப்படவுள்ளன. மேலதிக விபரங்களை யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகிலுள்ள MCS நிறுவனத்தில். A.L 2015 மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட வேட்பாளரும், உதயன் குழுமத் தலைவருமான ஈ.சரவணபவன் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றியீட்டி நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார். தேர்தல் முடிவுகள் நேற்று அறிவிக்கப்பட்டதை அடுத்து ஆதரவாளர்கள் அவருக்கு மாலை அணிவித்து வரவேற்பளித்தனர்.

## கண்ணீர் அஞ்சலி

தாயின் மடியில்
24
07
1981



நோயின் பிடியில்
16
'08
2015

### சந்திரலிங்கம் சுதர்சன்

காற்றோடு ஒரு செய்தி காதோரம் வீழ
கறுப்பாக எம்வாழ்வு கனவாகிப் போச்சு
நேற்று வரை எம்மோடு நிஜமாகி நின்று
நெடுதூரம் நீ சென்ற வழிதேடி நொந்தோம்
போற்றாத தெய்வங்கள் புவிமீது உண்டோ ?
பொலிவோடு நோய் நீங்கி வருவாய் நீ என்று
தேற்ற ஒரு மொழியில்லை தேம்பும் மனதிற்கு
தெய்வகதி நீ காண வேண்டுகிறோம் கூடி.

***முகாமையாளர் மற்றும் ஊழியர்கள்.***
***யாழ்ப்பாண சேவை நிலையம்***
***Dialog axiata PLC***

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி (விமலா) ஜெயராஜலிங்கம்



நந்தாவில் லேன், தாவடி கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி (விமலா) ஜெயராஜலிங்கம் 16.08.2015 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் பூமணி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற தெட்சணாமூர்த்தி-பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், ஜெயராஜலிங்கத்தின் (ஜெயம்) அன்பு மனைவியும், டினோதாவின் (கனடா) பாசமிகு தாயும், நவகரனின் (கனடா) பாசமிகு மாமியும், சண்முகநாதன் (கொழும்பு), சிவலோகநாதன் (கனடா), பாலசோதி (கனடா), பவானி (சுவிஸ்), பாஸ்கரன் (சுவிஸ்), பாலகுமார் (இந்தியா), பத்மநாதன் (கனடா) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.08.2015) புதன்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல்தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நந்தாவில் லேன்,
தாவடி.
021 205 3137

தகவல்:
குடும்பத்தினர்.

உலகத்தர ஆங்கிலம் - உன்னத எதிர்காலம்
ஸ்மார்ட் வகுப்பறைகளில் ...
ஆங்கில / கணினி கற்கைநெறிகள்
அலிசன்
புதிய பிரிவுகள் ஆரம்பம் | கொக்குவில், இணுவில், கிளிநொச்சி
077 986 6409 * 021 300 3800

**JOB VACANCY**
**Lecturers**
The following vacancies exist at IIS for immediate engagement
**Lecturers (Computing / IT)**
**(Visiting / Permanent)**
**Areas of Specialisation**
AutoCAD | Programming Language | Networking
- Should be a Degree holder in relevant field
- Should have an in depth knowledge & industrial experience
- Fluent in English

Eligible candidates are invited to attend a walk - in - interview for the post of lecturers at IIS, No 200 Sivan Pannai Road, Jaffna. on Monday 23rd August 2015 at 4.00 pm
**INSTITUTE OF INFORMATICS STUDIES**
200 SivanPannai Road, Jaffna.
Tel : 021 4900 900

**MBA**
MASTER OF BUSINESS ADMINISTRATION
General / Marketing / Finance / HR / IT
New Batch Starts on 29.08.2015
Duration: 1 year
ADMISSION REQUIREMENTS
- A Bachelor Degree - must be from a recognized University or College. /
- An Accepted Professional Qualification /
- Professional Experience - minimum of 3 years of full time Professional work experience.

UGC RECOGNISED
IIS CITY CAMPUS
200 Sivan Pannai Road Jaffna.
Web: www.iis.edu.lk
மேலதிக விபரங்களுக்கு :
021 4 900 900
071 777 5666

## யாழ்ப்பாண விருப்பு வாக்குகள்

யாழ்ப்பாணம், ஓக.19

*யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்*

**இலங்கை தமிழ் அரசுக் கட்சி**
சி.சிறீதரன் – 72, 258
மாவை.சேனாதிராசா – 58, 782
எம்.ஏ.சுமந்திரன் – 58, 043
த.சித்தார்த்தன் – 53, 741
ஈ.சரவணபவன் – 43, 719
ஏனையோர்
க.அருந்தவபாலன் – 42, 925
க.சுரேஷ்பிரேமச்சந்திரன் – 29, 906
க.சிறீகாந்தா – 20,684
ந.அனந்தராஜ் – 15, 408
திருமதி மதினி நெல்சன் – 13, 739
ஐக்கிய தேசியக் கட்சி
திருமதி மகேஸ்வரன் விஜயகலா – 13, 071
ஏனையோர்
ஆர்.சிவசங்கர் – 4, 099
இளையதம்பி நாகேந்திராஜ் – 2, 493
குமாரு சர்வானந்தன் – 2, 374
ரவிந்திரன் துஜீபன் – 2, 089
வன்னியசிங்கம் பிரபாகரன் – 2, 033
சின்னத்துரை குலேந்திராஜா – 1, 594
மொஹமட் சுல்தான் ரஹீம் – 1, 417
சின்னராஜா விஜயரஞ்சன் – 1, 179
செபஸ்தியாம்பிள்ளை மரியதாசன் – 1, 089

***ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி***
டக்ளஸ் தேவானந்தா – 16, 399
ஏனையோர்
சந்திரகுமார் முருகேசு – 10, 163
சில்வெஸ்திரி அலென்ரின் – 4, 404
பி.சீவரத்தினம் – 4, 023
ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் – 3, 463
இரா.செல்வவடிவேல் – 2, 896
திருமதி யோகேஸ்வரி பற்குணராசா – 2, 623
இ.ஐங்கரன் – 2, 616
சூசைமுத்து அலெக்ஸாண்டர் – 2, 205
சிவகுரு பால்கிருஷ்ணன் – 2, 075
(த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதன் பொய்கை

உதயன்

19 ஒகஸ்ட் 2015 புதன்கிழமை

> பெற்றோர்களின் வாழ்க்கையானது குழந்தைகளின் பாடப் புத்தகம்.
>
> – ஆர்னால்ட் பென்னெட்

# மனிதர்கள் திருந்த வேண்டிய தருணம்

ராஜராஜன்

உலகில் நடந்து கொண்டிருப்பவை எல்லாமே தலைகீழாகத்தான் எமக்குத் தெரிகின்றன. நல்லவை நடக்காதா என்ற ஏக்கமும் கூடவே எழுகின்றது.

மனிதர்கள் நிறையவே மாறிவிட்டார்கள். மாற்றம் என்பது தேவையானதுதான். ஆனால் உலகில் இன்று ஏற்பட்டுள்ள மாற்றத்தை எவரால்தான் ஏற்றுக்கொள்ள முடியும்? எல்லாமே கலியுகத்தின் பிறழ்வு என்று சாதாரணமாக ஒதுக்கிவிடவும் முடியவில்லை.

தொடர்ந்தும் வெப்பமடைந்து வருவதால் பேராபத்து ஒன்றை எதிர்கொள்ளப் போகின்றது. ஓசோன் படலமும் சிதைவடைந்து போவதால் பூமியில் வாழுகின்ற உயிரினங்கள் மோசமாகப் பாதிக்கப்படப் போகின்றன. இதைவிட எதிர்காலத்தில் போர் ஒன்று ஏற்படுமானால் அது தண்ணீருக்கானதாகவே இருக்குமென எதிர்வு கூறப்படுகின்றது. நிலநடுக்கங்கள் அடிக்கடி ஏற்படுவதால் அழிவுகளுக்குக் குறைவில்லை. சூறாவளி, புயல், பெருவெள்ளம், வறட்சி, கடும்வெப்பம் ஆகியவற்றுக்கும் இங்கு குறைவில்லை. பூமியின் இறுதித் தருணம் நெருங்குவதை இவையாவுமே கட்டியம் கூறி நிற்கின்றன.

ஆனால் இங்கு வாழுகின்ற மனிதர்கள், இவற்றையெல்லாம் பொருட் படுத்துவதாகத் தெரியவில்லை. பல்வேறு வழிகளிலும் தம்மை மட்டுமல்ல இந்தப் பூமியையும் அழித்து விடுவதிலேயே கண்ணும் கருத்துமாகச் செயற்படுகின்றனர்.

புகையிலைப் பாவனையால் ஏற்படுகின்ற கெடுதல்கள் தொடர்பாக எத்தனையோ அறிவுறுத்தல்கள், எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன. ஆனால் புகையிலைப் பாவனை அதிகரிக்கின்றதே தவிர குறைந்தபாடாகத் தெரியவில்லை. தம்வழி தனிவழியென எண்ணிச் செயற்படும் இவர்கள் அற்ப ஆயுளில் தமது உலக வாழ்க்கையைத் துறந்து விடுகின்றனர். தண்ணீருக்குப் பதிலாக மதுபான வகைகள் மனிதர்களின் தாகத்தைத் தணிக்க ஆரம்பித்து விட்டன. அரசுக்கு வருமானத்தை அள்ளி அள்ளி வழங்கும் மதுபானங்கள் மனித உயிர்களைக் காவு கொள்வதிலும் பின்நிற்பதில்லை. உணவு வகைகளில் கூடப் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. நாவுக்கு ருசிதேடி அலைகின்ற மனிதர்கள் நோய்களுக்கு ஆளாகிப் படுக்கையில் வீழ்ந்து விடுகின்ற பரிதாபமும் இந்த உலகில்தான் காணப்படுகின்றது. இதனால்தான் எங்கு பார்த்தாலும் வைத்தியசாலைகள் பெருகிக் காணப்படுகின்றன. புதுப்புது மருந்து வகைகள் வேறு, எண்ணிக்கை தெரியாத அளவுக்கும் பல்கிப் பெருகிவிட்டன.

மருத்துவத்துறை இன்று இலாபமீட்டக் கூடிய நல்லதொரு துறையாகவே மாறிவிட்டது. மனிதர்களுக்கு ஏற்படுகின்ற புதுப் புது வியாதிகள் மருத்துவத்துறையைச் செழிக்க வைத்துக் கொண்டிருக்கின்றன. உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமான காற்று மாசடைந்து காணப்படுகின்றது. நிலத்தடி நீரும் நஞ்சாக மாறிவிட்டது. அதிகரித்த இரசாயனப் பாவனையால் உலகில் கிடைக்கின்ற எதையுமே உண்ண முடியவில்லை. இயற்கையாகப் பழுக்க வேண்டிய பழவகைகள் செயற்கையாகப் பழுக்க வைக்கப்படுகின்றன.

இவற்றை உண்ணுகின்றவர்கள் நோய்களை எதிர்கொள்ளுகின்றனர். தற்போதுள்ள நிலையில் பழங்களை வாங்கி உண்பதற்கு மக்கள் அஞ்சுகின்ற நிலைதான் காணப்படுகின்றது.

எமது புராண, இதிகாசங்களில் மனிதர்களுக்குத் துன்பம் ஏற்படும் போதெல்லாம் தெய்வங்கள் தோன்றி அவற்றைக் களைந்து விடுவதாகக் கூறப்படுகின்றது. ஆனால் இன்று அவ்வாறான அதிசயங்கள் நிகழ்வதாகத் தெரியவில்லை. மனிதர்கள் புரிகின்ற அக்கிரமங்களுக்குத் தெய்வங்கள் கூட அஞ்சி ஒதுங்குவதாக எண்ணத்தோன்றுகிறது. இந்த நிலையில் வெறும் சம்பிரதாயத்துக்காக, மட்டுமே மனிதர்கள் ஆலய வழி பாடுகளில் ஈடுபடுவதாகக் கருதவேண்டியுள்ளது. ஏனென்றால் எளிமையும்,அமைதியும்நிலவவேண்டிய ஆலயங்கள் ஆடம்பரமும், அமைதியின்மையும் காணப்படுகின்ற இடங்களாக மனிதர்களால் மாற்றியமைக்கப்பட்டு விட்டன. இந்த நிலையில் தெய்வங்கள் அங்கு குடி கொள்ளுமென நாம் எதிர்பார்க்க முடியாது.

ஆதிகால மனிதர்கள் இயற்கையைத்தான் தெய்வமாக வழிபட்டார்கள். அவர்கள் பஞ்ச பூதங்களுக்கும் அஞ்சி நடந்தனர். அவற்றை வழிபட்டும் வந்தனர். மரங்களைக் கூட அவர்கள் தெய்வத்துக்கு நிகராக வைத்து வணங்கிப் போற்றினார்கள். இயற்கைக்கு விரோதமாக நடந்து கொள்வதற்கு அவர்கள் ஒருபோதுமே துணிந்ததில்லை. மலைகளில் உருவாகின்ற நதிகள் பூமியில் சுதந்திரமாக ஓடிக் கடலில் சங்கமித்தன. இவற்றுக்கு அப்போதெல்லாம் எவரும் கட்டுப்பாடு விதிப்பதில்லை. ஆனால் இன்றோ நிலைமையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுவிட்டது. நதிகள் மறிக்கப்பட்டு பெரும் அணைகள் அமைக்கப்பட்டு விட்டன. அங்கு பெருமளவில் நீர்தேக்கி வைக்கப்படுவதன் காரணமாகவும் நிலநடுக்கங்கள் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது. பூமியின் சமநிலை பாதிக்கப்படுவதன் காரணமாகவே இத்தகைய இடர்கள் நிகழ்கின்றன.

மனிதகுலம் இன்னமும் பல கோடி ஆண்டுகள் இந்த பூமியில்தான் வாழ வேண்டும் என்பதை நாம் மறந்துவிட முடியாது. ஆகவே பூமியை எந்தவிதமான பாதிப்புக்கும் உட்படுத்தாது பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் எம்மிடம்தான் உள்ளது. ஆனால் இதை நாம் மறந்தவர்களாக வாழ்வது மட்டுமல்லாது இயற்கைக்கு விரோதமாகவும் நடந்து கொள்கின்றோம்.

இந்த நிலை தொடருமேயானால், மனிதகுலம் பேரழிவுகளைச் சந்திக்கும் காலம் வெகுவிரைவில் அருகில் வந்து விடுவதை எவராலும் தடுக்கவே முடியாது.

ஆகவே இனிமேலாவது தாம் புரிந்த தவறுகளை மனிதர்கள் உணர்ந்து புதுவாழ்வொன்றை ஆரம்பிக்கத் தொடங்க வேண்டும். அவர்கள் இயற்கையை நேசிக்க வேண்டும். புவியில் பாதிப்புக்கள் ஏற்படாது நடந்து கொள்ள வேண்டும். கேடு தருகின்றனவற்றை ஒதுக்கித் தள்ளி விடவேண்டும். இவற்றின் மூலமாகவே பூமியும் பாதுகாக்கப்படுவதோடு மனிதர்களின் இருப்பும் நிரந்தரமாக்கப்படும்.



மனிதகுலம் இன்னமும் பல கோடி ஆண்டுகள் இந்த பூமியில்தான் வாழ வேண்டும் என்பதை நாம் மறந்துவிட முடியாது. ஆகவே பூமியை எந்தவிதமான பாதிப்புக்கும் உட் படுத்தாது பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் எம்மிடம்தான் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுபகாரியங்களில் வெற்றிலை பாக்கு, பழம்

இறைவனுக்கு வெற்றிலை பாக்கு வைத்து வணங்குவது எமது மரபு. வெற்றிலையில் எல்லா விற்றமின்களும் இருக்கின்றன.
வெற்றிலை பாக்குடன் சுண்ணாம்பு சேர்த்துச் சாப்பிட்டால் நீண்ட நேரம் நல்ல சக்தி இருக்கும். வயிறு செரிமானத்துக்குப் பெரிதும் உதவும்.



சுபநிகழ்ச்சிகளில், விருந்துக்குப் பிறகு ஜீரணத்துக்காக வெற்றிலை பாக்கு கொடுத்து வழியனுப்பும் வழக்கம் ஏற்பட்டது. வாயுத் தொல்லை நீங்கும். வெற்றிலையுடன் சுண்ணாம்பு சேர்த்துச் சாப்பிடுவதால் கல்சியம் உடலில் சேரும்.
வெற்றிலையைக் கசக்கிச் சாறு எடுத்து அந்த சாற்றில் சிறிதளவு கர்ப்பூரத்தைச் சேர்த்துக் குழப்பி வலியுள்ள இடத்தில் தடவினால் தலை வலி உடனே குணமாகும். தலை வலித்தால் பலர் வெற்றிலையைக் கிள்ளி தலையில் ஒட்டிக்கொள்வதைப் பார்த்திருப்போம். வெற்றிலைச் சாறும் சீரகமும் வயிற்று வலிக்கு நல்லது. சளி இருமல் போன்றவற்றுக்கும் வெற்றிலையுடன் சுக்கு கஷாயம் குடிப்பார்கள். வெற்றிலையையும் மிளகையும் சேர்த்துத் தின்றால் தேள் விஷம் கூட முறியும் என்பார்கள். வெற்றிலை பாக்கு சுண்ணாம்புக் கலவை ஆண்மையின் உந்துதலுக்கு நல்லது. கணவனுக்கு மனைவி வெற்றிலை மடித்து கொடுத்து சந்தோஷப்படுத்துவது ஏன் என்று இப்போது புரிந்திருக்கும்.
அதனால் தான் சிறு வயது பிள்ளைகள் வெற்றிலை போட்டால் மாடு முட்டும் என்று பயமுறுத்துவார்கள். வாழைப்பழமும் வெற்றிலையும் ஆண்மைக்கு நல்லதென்பதாலேயே கல்யாணம் மற்றும் சுபகாரியங்களுக்கும் ஒருவருக்கொருவர் வெற்றிலைபாக்கு பழம் கொடுத்து பரிமாறிக்கொள்கிறார்கள். குறிப்பாக பெண்கள் வீட்டுக்கு வரும் பிற பெண்களுக்கு வழியனுப்பும்போது வெற்றிலை, பாக்கு, பழம் வைத்துக் கொடுத்து வழியனுப்புகிறார்கள். அதாவது இதனால் எனக்கு கிடைத்த இன்பத்தை நீயும் உனது வீட்டில் அனுபவி என்பது அதன் அர்த்தம். ஏனெனில் கணவன் மனைவி உறவு எந்தளவுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறதோ, அந்தளவுக்கு குடும்பம் பலப்படும். அதனால் வெற்றிலை, பாக்கு, பழம் இல்லாத சுபகாரியங்களையும் நற்காரிய பரிமாற்றங்களையும் எமது சமூகத்தில் பார்க்கவே முடியாது. எமக்கு குடும்பமே கோவில் அல்லவா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செ.மகேஷ்

# துணிச்சற்காரன்

## கவிதைத் தொகுப்புடன் கவிஞர் நேதாமோகன்



**கடலில் பூத்தகர்ப்பூரமே,கல்லில்
துளிர்த்த இளந்தளிரே!
உன் மடிமேல் முளைத்த
முள்மிதிக்கநான்
வெறுங்காலோடேமண் மிதிப்பேன்
என் தாயகமே எனக்கொருபழக்கம்
உன்னையாரிடமும் என்
ஊரென்றுசொல்வதில்லை என்
வீடென்றுசொல்வதிலேவிருப்பம்.**

எனத் தொடங்கும்போதே உடல் சிலிர்க்கிறது. உள்ளம் புளகாங்கிதமடைகிறது. தாய் மண்ணின்மீதும்தாய்மொழியாம்தமிழ்மொழியின் மீதும், கொண்ட பற்றின் ஆழம் பரவச மூட்டுகிறது. இது நேதாமோகன் தனதுகவிதை நூலுக்கு வடித்த முகவுரையில் சொல்லியவை.

தொடக்கமே கவிஞரின் துணிச்சலுக்கு எடுத்துக்காட்டு. ஊரைச் சொல்லவும் தமிழன் என்றுதன் இனத்தைஉரத்துக் கூறவும் தயங்காத வீரம், நீதி விளையும் நிலத்திற் பிறந்த நெடுந்தீவானின் சொத்து. எவனொருவன் தனது ஊரையும் இனத்தையும் மறைக்க முயலுகின்றானோ, அவனிடத்தில் தன்னூர் கெடப் பேசும் வகை செய்த அவனது தீச்செயல்களே அவனை உறுத்துகின்றன. உலகம் போற்றத் தன் தாய் மண்ணின் வளம் பெருக்கி, தவழ்ந்த தாய்மடியின் புகழ்பரக்க வாழப் பிறந்தவனோ, நேர்மை சிறக்க, உலகறிய வாழ்வான். ஊரைச் சொல்லத் துணிந்தமனிதம் அது.கவிஞரின் கவிதைகளால் அவர் தம்மையும் தமது நிலத்தையும் மகிழ்வுறச் செய்துள்ளார்.

என் தீவப்போல ஏது, சாமியே! என் தாயைப் போலயாரு? என்று தொடங்கும் என் குல சாமி எனும் தலைப்புடன் கூடிய அன்னை தந்தையரின் மகிமை சொல்லும் அருமையான கவிதை. கல்லும் கூடப் பூப்பூக்கும், தாய் மண்ணும் தாயன்பும் இருக்கும் வரை, நான் ஊர்விட்டுப் போக அகதியில்லை சனங்க சாமி சாமியென்று திரியுதுக, சாமி கண்ணும் திறந்த தில்ல கதவும் திறந்த தில்ல, வீட்டில வெறுப்பு வச்சு கோயிலுக்குப் பூ வைப்பவனே புரியாத ஜடமாய் இருக்கிறாயே பெத்த உசுருதான் சாமி! என நிறைவுறுகின்றது பெற்றோருக்காய் கவிஞர் வடித்த கவிதை.




நேதாமோகன் நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவரது ஆழ் நிலைப்பட்ட வாசிப்புக்கும் தேடலுக்கும் மொழியழகு பெய்து நனைக்கப்பட்ட சிறந்த கவிதைகளின் தொகுப்பாகி வெளிவந்திருக்கிறது இந்த நூல்.. நேதாமோகன் ஆக்கித் தொகுத்த இந்தக் கவிதை நூலின் பெயர் துணிச்சற்காரன். சமுதாய அவலங்களையும், சமுதாயத்தில் விளைந்து விட்ட பெருமை பிடித்தவர்களின் சிறுமைத்தனங்களையும், எமது காட்சிக்குப் புலப்படாத எத்தனையோ மனித மாண்பற்ற கோரங்களையும் அனுபவித்து விசுவரூபம் எடுத்த மொழியின் வண்ண வடிவங்களே கவிதைகளாகி நூலை அழகு செய்துள்ளன. இது கவிஞரது முதலாவது கவிதைத் தொகுப்பாகும்.

இளம் கவிஞரான நேதாமோகன் நீண்ட காலங்களாக தனது ஆக்கங்களைப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் பிரசுரித்து வெளிப்படுத்தி வருகின்றார். ஈழத்து இலக்கியப் பரப்பில் இன்று நூலுருப் பெற்றுள்ள இவரது துணிச்சற்காரன் கவிதைத் தொகுப்புக்கு உன்னதமான ஓரிடம் உண்டென்பது நிச்சயமாகும். காலங்கள் குரலெழுப்பும் நல்ல ஆரோக்கியமான கருத்துக்களுடன் ஒளிரும் நேதாமோகனின் கவிதைகள் என்றும் வாழும் பலம் வாய்ந்தவையாகும்.

காலத்துக்கேற்ப வகைகள், அவ்வக் காலத்துக்கேற்ற ஒழுக்கமும் சீலமும் ஞாலம் முழுமைக்கும் ஒன்றாய் எந்தநாளும் நிலைத்திடும் நூலொன்றும் இல்லை எனக் காலத் தத்துவத்தைக் கூறும் மகாகவி பாரதியாரின் கவிதையை நினைவுறுத்திக் கவிஞரது பாரியாரும் கலைப்பட்டதாரியுமான கலைவாணி அவர்களின் கூற்று,மாறும் உலகில் மாறும் வாழ்வை மனதிலிருத்தச் சொல்லுகிறது.

வாழ்க்கையின் திக்குகள் அனைத்தையும் வாழ்பவன்,திரும்பும்திசைகள் யாவற்றையும் பார்த்து அனுபவித்து இரசித்து நொந்து மகிழ்ந்து வடித்த கவிதைகளின் தொகுப்பாக இது விளங்குகிறது. உயிர்த் துடிப்பும் உணர்வுப் பெருக்கும் விரியும் கவிதைகளின் வண்ணங்களால் துணிச்சற்காரன் இலக்கியப் பாதையில் நின்று நிலைத்து ஒளிர்வான். நேதாமோகனின் கவிவளம் சிறக்க வாழ்த்துகிறோம்.

# திருமதி பாலஜெயந்தி விஜயகாந்தன் மானியர் மகிழ்ந்த மணி விழா மாதரசி

கே.எஸ்.சிவஞானராஜா

நல்ல பாதையில் கலை வளம் சேர்க்கும் பணியை செவ்வனவே ஆற்றி இளைப்பாறிய ஆசிரியப் பெருந்தகை வையமெல்லாம் நிறைந்த பதில் அதிபர், பிரதி அதிபர் திருமதி பாலஜெயந்தி விஜயகாந்தன் அவர்களது அகவை அறுபது மணிவிழா கடந்த மாதம் 24ஆம் திகதி வெள்ளியன்று ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்தில் சீரும் சிறப்பாக நடைபெற்றது.

நல்லதோர் ஆசிரியன் ஒருபோதும் தோற்பதில்லை, அல்லாமலும் அவன் எப்போதும் சாவதுமில்லை. அவ்வாறு இரண்டுக்கும் சொந்தக்காரனாகிய பலர் இன்றும் இந்த மண்ணில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களது ஆசீர்வாதத்தாலேயே இந்த மண் இன்றும் உயிர் வாழ்கிறது. இத்தகு பெருமை கொண்ட ஒரு பெருந்தகையே திருமதி பாலஜெயந்தி விஜயகாந்தன் அவர்கள்.

**சேவை**

ஓர் ஆசிரியன் நியமனமாகும்போது முன்னதாக, வெளிமாவட்டங்களிலேயே நியமனம் செய்யப்படுவது நன்மை பயக்கும். சந்தோஷமாகவும் இருக்கும். உள்ளூரில் வேலை கிடைக்குமாயின், பலபல சோலிகள் வந்து கடமைக்குக் குந்தகம் விளைவிக்கும். வெளிமாவட்ட சேவை ஒவ்வொரு ஆசிரியனுக்கும் வெற்றியைக் கொடுத்தே தீரும். அந்த வகையில் இந்த ஆசிரியை களுத்துறையில் ஜிலான் மத்திய கல்லூரியில் ஆறு வருடங்கள் கடமையாற்றி, இஸ்லாமிய சமூகத்தில் தனக்கென ஓரிடத்தைப் பதிவு செய்து கொண்டார்.அத்துடன் தனது தகைமைகளையும் திறமைகளையும் பெருக்கியும் கொண்டு ஒரு சிறந்த பட்டதாரி பேறு கொண்டார். பட்டங்களை அடுக்கிக் கொண்டு போவது பதவிகளுக்கும் சம்பாத்தியத்துக்கும் என்றில்லாமல் மாணவர்களுக்குப் பாடம் புகட்டுவதற்காக மட்டும் என்ற திட்டத்தை அனுசரித்த நல்ல பெண்மணியாகக் களுத்துறையில் பிரகாசித்தார்.

**நல்ல பெண்மணி மிக
நல்ல பெண்மணி நம்
நாட்டின் நாகரிகம் பேணி
நடப்பவர் எவரோ அவரே
நல்ல பெண்மணி**

என்றவாறு நடையுடை பாவனை, ஒப்பாசாரம் யாவற்றையும் கல்வியில் சேவையாகக் கொண்டார்.

1884 தொடக்கம் 1990 வரை முதற் கட்டமாகக் களுத்துறையில் முழுமையான சேவையைப் பூர்த்தி செய்த பின்னர், அடுத்த பணியாக யாழ்.மானிப்பாய் மகளிர் கல்லூரியில் சுமார் இருபத்தொரு வருடங்கள் ஆசிரியராக, பிரதி அதிபராக மானிப்பாய் கல்விச் சமூகம் போற்றும் வகையில் மிகுந்த அர்ப்பணிப்புடன் சேவையாற்றினார். ஆசிரியர் வாண்மை, ஆசிரியர் நலம், மாணவர் நலன், மாணவர் கல்வி, பெற்றோர் நல் உறவு, கோட்ட, வலய, மாகாண ஈடுபாடு, முக்கியமாக மாணவர் ஒழுக்கம் யாவற்றிலும் முதன்மையாளராகச் செயற்பட்டார்.

மற்றும் சீர்மியக் கருத்துக்களை வளர்ப்பதிலும், சமய நெறிகளை ஆசிரிய மாணவ சமுதாயத்துக்குப் வழங்குவதிலும் வெற்றி கண்டவர்.

வளமான பாடசாலைகளில் கடமையாற்றுவதிலும் பார்க்க வசதி குறைந்த கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றும் அதிபரோ, ஆசிரியரோ இறைவனால் ஆசீர்வதிக்கப்படுகின்றனர். திருமதி பாலஜெயந்தி அவர்களும் நானும் 21 வருடங்கள் வெவ்வேறு பாடசாலைகளில், அதுவும் 1ஏபி பாடசாலைகளில் இருந்து ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலயத்துக்கு நாங்களாகவே மாற்றல் வேண்டிப் பெற்றோம். மணிவிழா நாயகி 01.01.2012 இல் இருந்து 23.07.2015 வரை அவர்தம் கடமையில் பதில் அதிபராகவும், பிரதி அதிபராகவும் மிளிர்ந்தார். அவரது காலத்தில் பௌதிக வளங்கள், இரவு நேர வகுப்புகள், பாலர் விளையாட்டு முற்றம், ஆலய வழிபாடுகள், கண்காட்சிகள்,சீரான பால், மதிய உணவு வகைகள், மூத்த நயினார் திருவிழா உற்சவ வழிபாடுகள், விளையாட்டுப் போட்டிகள் என



எந்தவிதக் குறைவுமின்றி சிறப்பைப் பெற்றன. எல்லாவற்றுக்கும் மேலாகச் சமூக மேம்பாடு சிறந்து விளங்கிற்று. அல்லாமலும் இடைவிலகல் யாதொன்றும் நிகழவில்லை. பெறு பேறும் அதிகரித்தது. வெல்லப்பட்ட பாடசாலைச் சமூகம் எடுத்த விழாவில் அதிபர் வே. சிவசக்திவேல் உட்பட பல கல்விமான்கள் உரையாற்றிக் கௌரவித்தனர். இதயம் நிறைந்த நன்றிகளை ஏற்புரையில் அலங்கரித்து விழா நாயகியாவுருக்கும் வணக்கம் கூறி விடை பெற்றார். ஆசிரியம் ஒருபோதும் தோற்பதில்லை. அவர்களின் சேவை வெல்லப்பட்டே தீரும். அவர்களின் சேவையை இந்த மண் ஒரு போதும் மறந்துவிட மாட்டாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நூல் வெளியிடு

விஞ்ஞான ஊக்கி நூல் வெளியீட்டு விழா கடந்த மாதம் 19 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெற்றது.
நிகழ்வுக்கு பிரதம விருந்தினரர்களாக வடமாகாண கல்விப் பணிப்பாளர், தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி, உப பீடாதிபதி, யாழ்ப்பாணம் பல் கலைக்கழக கல்வியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வில் வர வேற்பு நடனத்தை யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவிகள் லக்ஷனா சுகுந்தன், லதுஷனா சுகுந்தன் ஆகியோர் வழங்கியிருந்தனர். முதற் பிரதியை சதாசிவம்அமிர்தலிங்கம்வெளியிட்டு வைக்க சத்தியேந்திரம்பிள்ளை பெற்றுக் கொண்டார். இரண்டாவது பிரதியை செ. உதயகுமார் வெளியீடு செய்து வைக்க திருமதி சந்திரிக்கா நாகேந்திரம் பெற்றுக் கொண்டார்.

# லண்டன் மாநகரில் நாவலருக்கு மிகச் சிறப்பான பெருவிழா

மு.க.மாசிலாமணி

இலங்கை பிரித்தானியர் ஆட்சிக்குட்பட்டிருந்த 19ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து கிறிஸ்தவ மதத்தை இந்த நாட்டில் பரப்பும் தீர்க்கமான நோக்குடன் ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய ஆங்கிலக்கல்வி, கல்வியில் பெரிதும் பின்தங்கியிருந்த இலங்கைத் தமிழ் மக்களை வெகுவாகக் கவர்ந்தது. தமது பெயர்களையே ஜோன், ஜோர்ஜ் என மாற்றுமளவுக்கு ஆங்கிலக் கல்வி மூலமாகப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு வளங்களை இறுக்கமாகக் கைப்பற்றிக்கொண்டு தமது சமயம், மொழி, பண்பாடு, வாழ்வியல் விழுமியங்கள் அனைத்தையும் புறந்தள்ளிக் கிறிஸ்தவ சமயத்தையும், அது சார்ந்த மேல் நாட்டுக் கலாசாரத்தையும் கைக்கொள்ள உந்தப்பட்டனர். ஈழம் வாழ் தமிழினத்தின் மிக நெருக்கடியான காலத்தில் நாவலர் தோன்றிப் பணிபுரிந்திராதிருப்பின் தமிழருடைய வரலாறே வேறுவிதமாய் அமைந்திருக்கும் என தமிழ் மக்களின் பேரன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய பெருந்தலைவர் அமரர் சா.ஜே.வே. செல்வநாயகம் நாவலர் மாநாடுஆனி 1969 விழா மலரில் தமிழ் மொழிக்கும் தமிழர் கல்விக்கும் நாவலர் ஆற்றிய பன்முகப் பணிகளின் வரலாற்று முக்கியத்துவத்தை மதிப்பிட்டுள்ளார். சைவ சமயத்தையும் தமிழ் மொழியையும் அவை சார்ந்த பண்பாட்டு விழுமியங்களையும் இருள் கௌவிக் கொண்ட பேராபத்துச் சூழ்ந்திருந்த அத்தகையதொரு பாதகமான காலகட்டத்தில்தான் நாவலர் உதய சூரியனென யாழ்ப்பாணம் நல்லூரில் 1822ஆம் ஆண்டு தோன்றினார். கல்வி கற்பதற்காக ஏறக்குறைய 14 ஆண்டுகளைக் கிறிஸ்தவ சூழலில் கழித்த நாவலர் இந்தக் காலத்தில் கிறிஸ்தவர்களின் மூர்க்கமான கிறிஸ்தவ சமயப் பரப்புரை நடவடிக்கைகளினால் மனம் விரக்தியுற்றவராய் மிஷனரியிலிருந்து வெளியேறிப் பணபலமும் ஆளணிப்பலமும் கொண்ட கிறிஸ்தவ மிஷனரியுடன் எதிர்த்துச் செயற்பட்டுச் சைவமும், தமிழும் கல்வியும் செழித்து வளரும் வகையில் காலங் கடந்தும் நிலைத்து நிற்கக்கூடிய அரும் பெருந்திட்டங் களைத் தனிமனிதனாக நின்று நிறுவன அமைப்புக்கு நிகராக முழு வீச்சுடன் முன்னெடுத்துச் சாதனைகள் பல நிறுவித் தமிழர் வரலாற்றில் புதுயுகம் படைத்த யுகபுருஷராவார்.

தமிழ்மொழி தோற்றுவித்த இத்தகைய ஒப்புயர்வற்ற பேராசானுக்கு லண்டன் திரிசக்தி இலக்கிய சங்கமம் அண்மையில் பெருவிழா ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. Londan Alperton Community School மண்டபத்தில் தமிழ் ஆர்வலர்கள், இலக்கியக் கலைஞர்கள், பல்துறைசார்ந்த பிரமுகர்கள் எனப்பலர் நிறைந்திருந்த அவையில் தமிழ் அபிமானிகளான வீ.ஆர். இராமநாதன், சிவாப்பிள்ளை ஆகியோரின் இணைத் தலைமையில் இடம்பெற்ற இந்த நாவலர் விழா, மங்கல விளக்கேற்றல், இறைவணக்கம், தமிழ்த் தாய் வணக்கம் என்பவற்றுடன் ஆரம்பித்தது. தொடர்ந்து இடம்பெற்ற நிகழ் வில் ஆசியுரை வழங்கிய என்பீல்ட் Enfield நாகபூஷணி அம்மன் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ கமலநாதக் குருக்கள் தமதுரையில், சைவ சமயிகள் பின்பற்றி ஒழுகவேண்டிய நடைமுறைகளை விவரிக்கும் நாவலர் சைவசமயிகளுக்கென எழுதிய விஞ்ஞாபனங்களிலிருந்து முக்கிய சில பகுதிகளை விளக்கிக்கூறி, சைவ மக்களை நெறிப்படுத்திய பெருமகன் நாவலர் எனக்கூறினார். வாழ்த்துரை வழங்கிய புதினம் பத்திரிகை ஆசிரியர் இராசகோபால், ஈலிங் அம்மன் ஆலயத்தலைவர் இரத்தினசிங்கம், யோகநாதன் ஆகியோர் திரிசக்தி இலக்கிய சங்கமத்தின் பணிகளையும் அதன் அமைப்பாளர் சிவ.தணிகாசலத்தையும் வாழ்த்தியும் பாராட்டியும் பேசினர். அடுத்துப் பேருரை நிகழ்வில் பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்கத் தலைவர் சதாசிவம் ஆனந்தத் தியாகர் நாவுக்கரசரும் நாவலரும் என்ற தலைப்பில் நாம் யார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் என அரசன் கட்டளையினையே நிராகரித்த நாவுக்கரசரின் அஞ்சா நெஞ்சம் நாவலரிடமும் அமைந்திருந்ததனால்தான் ஆங்கில அரசின் மதமாற்ற நடவடிக்கைகளைத் தீவிரமாக எதிர்த்துச் சைவத்தைப் பாதுகாத்தார் எனக்கூறினார். நாவலர் வலம் என்ற பொருளில் உரை நிகழ்த்திய சிவஸ்ரீ



பா.வசந்தன் குருக்கள் சைவத்தையும் தமிழையும் காத்து வளர்த்து நாவலர் தமிழினத்துக்கு வலக்கரம் போல் என்றும் பக்கபலமாகவே விளங்கினார் எனக்கூறினார். இலக்கணத் காவலர் ஈழத்து நாவலர் என்ற தலைப்பில் கவிதை வாசித்த புலவர் சிவநாதன், உணர்ச்சி மிக்க கவிதைகளின் [illegible] விளக்கினார் ஒருகி[illegible] வசம் ஈர்த்துக்கொண்டார் என்று சொல்லும் அளவுக்கு புலவரின் கவிதை வரிகளுடன் சபையினர் ஒன்றிவிட்டனரென்றே கூற வேண்டும். அறிஞர்கள் சிறப்புரை என்ற நிகழ்வில் Ratnam Foundation அதிபர் கலாநிதி இரத்தினம் நித்தியானந்தன் பேசும் பொழுது சைவத்தைக் கண்டித்துக் கிறிஸ்தவ மிஷனரியினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் ஒவ்வொன்றையும் தானும் பின்பற்றி அதாவது பிரசங்கம் செய்தல், சமய உண்மைகளை வினாவிடையாக எழுதுதல், கண்டன நூல்கள் எழுதுதல் எனப் பேசியும், எழுதியும் நாவலர் சைவத்தையும் தமிழையும் வளர்த்தார் எனக் கூறினார். அடுத்து இல்போட் செல்வவிநாயகர் அறங்காவற் சபைத்தலைவர் செல்வராசா உரை நிகழ்த்து கையில் பேச்சுடன் நின்றுவிடாது சைவத்துக்கும் தமிழுக்கும் காலத்தால் அழியாத பணி செய்த நாவலருக்கு லண்டனில் சிலை நிறு வுவதன் மூலம், என்றும் அவரைப் போற்ற வேண்டுமெனக் கூறினார். அடுத்து உரை நிகழ்த்திய மு.க.மாசிலாமணி தனதுரையில் கிறிஸ்தவ ஆக்கிரமிப்பிலிருந்து சைவத்தை மீட்டுப் பாதுகாத்து வளர்ப்பதுதான் ஆரம்பத்தில் நாவலரின் நோக்கமாக இருந்தாலும், சைவம் நீடுநின்று நிலைக்க வேண்டுமாயின் கல்வியில் மிகமிகப் பின்தங்கியுள்ள தமிழ் மக்களை மையமாகக் கொண்டு சைவத்துடன் அதற்குக் கருவியாகிய கல்வியையும் ஒரு சேர வளர்க்க வேண்டுமென்ற நோக்கில், அதற்காகப் பாடசாலைகளை நிறுவியும் பாடப் புத்தகங்களைப் படிக்கிரமத்தில் எழுதியும் பெரும் பணியாற்றினார் என்றும் சென்ற நூற்றாண்டில் யாழ்ப்பாணம் கல்வியில் மிகமிக உன்னத நிலையை எய்தியமைக்கு நாவலர் கல்வி தொடர்பாக வெளியிட்ட கொள்கைகளும் திட்டமிட்டு மேற்கொண்ட கல்வி நடவடிக்கைகளுமே முன்னோடியாக, வழிகாட்டியாக விளங்கின என்றும் குறிப்பிட்டு உரை நிகழ்த்தினார்.

[illegible] தயாரித்து வழங்கிய "பண்டார வன்னியன்" என்ற அடுத்து இடம் பெற்ற வரலாற்று நாடகத்தில் பண்டார வன்னியனாக நடிக்க காந்தலிங்கத்தின் அபாரமான நடிப்பு நடிகரான காந்தலிங்கத்தையல்ல நிஜமான பண்டாரவன்னியனையே, நேரில் பார்த்ததுபோல் அவருடைய விறுவிறுப்பான நடிப்பு சபையை வியப்பிலாழ்த்தியதுடன் பலத்த கரகோஷத்தையும் பெற்றுக்கொண்டது.
விழாவின் முக்கிய நிகழ்வாக அடுத்து இடம் பெற்ற தனிமனித சாதனையாளர் விருது, எண்பது வயதை எட்டியவரும் கடந்த ஆறு தசாப்தங்களாக அரசியலில் தமிழ்த் தொண்டனாகத், தொழிற்சங்கவாதியாகச், சமூக சேவகனாகச், சமயப் பணியாளனாக, எழுத்தாளனாக, நூலாசிரியனாகப், பத்திரிகையாளனாகப் பலபரிணாமங் கொண்ட பணிகளாற்றிச் சாதனை படைத்த சுடரொளி ஆசிரியரும், கொழும்பில் 1969இல் நாவலர் சிலையை நிறுவி மிகப்பிரமாண்டமான முறையில் நாவலர் விழாவை மிகச்சிறப்பாக நடத்திய நாவலர் சபையின் இப்போதிருக்கும் ஒரேயொரு உறுப்பினருமான ஐ.தி.சம்பந்தனுக்கு லண்டனில் நடக்கும் நாவலர் விழாவில் வழங்கி அவரைக் கௌரவித்தமை, வாழும் போதே வாழ்த்தும் லண்டன் இலக்கிய சங்கமத்தின் சீரிய பண்பாக மிளிர்ந்தது.
அடுத்த நிகழ்வாகப் புலம்பெயர் தமிழ் இளைஞர்களின் இலக்கிய ஈடுபாட்டை ஊக்குவிக்கும் நோக்குடன் இலக்கிய சங்கமத்தின் பட்டிமன்றம் இடம்பெற்றது. இறுதியாக ஆர்.இரவீந்திரமோகனின் பாராட்டுரையைத் தொடர்ந்து லண்டன் இலக்கிய சங்கமத்தின் அமைப்பாளர் சிவ.தணிகாசலம் தனது நன்றியுரையில் புலம்பெயர் நாட்டில் செம்மொழியாம் எம் செந்தமிழின் சிறப்பை, அதன் இலக்கியச் செழுமையை வெளிக்கொணரவும், அதனூடாக இலக்கிய ஆர்வலர்கள் இலக்கிய இன்பம் நுகரவும் தொடர்ந்து செயற்படுவேன் என்று கூறி, விழா மிகச்சிறப்புற நிறைவேறுவதற்கு அனைத்து வழிகளிலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்த அனைவர்க்கும் கலந்து சிறப்பித்த பெருமக்களுக்கும் நன்றியை மிக உணர்வு பூர்வமாகக் கூறி நிறைவு செய்தார். இலக்கிய விருந்துடன் நாவுக்கும் சுவையான விருந்தளிக்கப்பட்டது. இரவு 10.30 மணிக்கு மிக அருமையான நிகழ்வொன்றைப் பார்த்துச் சுவைத்த மனநிறைவுடன் அடுத்தடுத்து இலக்கிய இன்பம் நல்கும் மிகச்சிறப்பான நிகழ்வுகளை வழங்கும் சிவ.தணிகாசலத்தின் சோர்விலா முயற்சியையும் அவர் தமிழ் மீது கொண்டிருக்கும் அளவற்ற பற்றுறுதியையும் விழாவுக்கு வருகை தந்திருந்த அனைவரும் பாராட்டி வாழ்த்தியதுடன் நாவலர் பெருவிழா வும் இனிதே நிறைவெய்தியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் லயித்த, கொக்குவில் இந்துவின் முத்தமிழ்ப் பெருவிழா

ஆரபி சிவகுகன்

என்றுமே இனிதாய், எண்ணவும் இனிதான எம் தாய் மொழி தமிழுக்கு அழகூட்டும் விதமாக, அர்ச்சிக்கும் வகையாக கொக்குவில் இந்து கடந்த மாதம் 20 ஆம் திகதி முத்தமிழ் விழாவை அரங்கேற்றியிருந்தது. கல்லூரி அன்னைக்குக் கடல் கடந்த போதிலும் மட்டற்ற பாசத்துடன் அரும்பணியாற்றி, அளவிலா உதவி புரிந்த திரு. திருமதி ரகுதேவ ராசா தம்பதிகள் பிரதம விருந்தினர்களாக அவையை அலங்கரித்தனர். சிறப்பு விருந்தினர்களாக, வடக்கு மாகாண தமிழ் மொழிக்கான உதவிக் கல்வீப் பணிப்பாளர் திருமதி கௌரி முகுந்தனும்(ஐக்கிய ராச்சியம்), பழைய மாணவர் சி.ஸ்ரீரஞ்சனும் வருகை தந்திருந்தனர்.



செல்வன் வி.விஷ்ணுஜன் தலைமையில் விழா ஆரம்பமாகியது. இறையாசியுடன் விருந்தினர்கள் விழா இடம்பெற்ற பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்துக்கு அழைத்து வரப்பட்டனர். மங்கல விளக்கேற்றல், தேவாரம், இறைவணக்கம் நிகழ்வுகளைத் தொடர்ந்து பதினைந்து நிமிடங்கள் மங்கல இசையினால் அரங்கம் மகிழ்ந்தது. மிக விஸ்தாரமான வரவேற்பு நடனம் பார்வையாளர்களை மிகவும் கவர்ந்தது. மேடையை நிறைத்த பாவையர் கூட்டம் கண்களோடு, கருத்தையும் கவர்ந்தது.



வரவேற்புரையை செல்வி லிசியா நிகழ்த்தினார். தொடர்ந்து, தேசிய மட்டத் தமிழ்த்தினப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற, மன்றத் தலைவர் செல்வன் விஷ்ணுஜன் தன் அழகு தமிழால் தலைமையுரையை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து கல்லூரி முதல்வர் வெ.ஞானகாந்தனின் ஆசியுரை இடம் பெற்றது.

**கனியிடை ஏறிய சுளையும்முற்றல்**
**சுழையிடை ஏறிய சாறும்**
**பனிமலர் ஏறிய தேனும் காய்ச்சுப்**
**பாகிடை ஏறிய சுவையும்**
**நனிபசு பொழியும் பாலும்தென்னை**
**நல்கிய குளிரிள நீரும்**
**இனியவை என்பேன் எனினும்தமிழை**
**என்னுயிர் என்பேன் காண்பீர்**

என்ற பாரதிதாசனின் கவிதையை நினைவூட்டிய முதல்வர், தமது ஆசியுரையை சுருக்கமாக நிறைவு செய்தார்.

அடுத்ததாக, தமிழ்த்தினப் போட்டிக்கு மேடை ஏற்றப்பட்ட கோலாட்ட நிகழ்வின்போது திருமதி காம ினியின் நட்டுவாங்கமும, செல்வி கிருபாநந்தியின் கணீர்க்குரலும், நடன நிகழ்வுக்கெல்லாம் சோபை சேர்த்ததை மறக்க இயலாது. மாணவர்களின் பேச்சு, கவிதை நிகழ்வுகளைத் தொடர்ந்து கந்தனைக் கண்டு கொண்டேன் சாஸ்திரிய மெல்லிசை அரங்கேறியது. கல்லூரியின் இசை ஆசிரியர், மிருதங்க வித்துவான் துரைராஜாவின் வழிகாட்டலின் கீழ் மிகப் பிரமாதமான நிகழ்வாக, தரமானதாக அரங்கை மகிழ வைத்த நிகழ்வு அது. செல்வி தமிழிசை, செல்வன் சுலக்ஷன், லக்ஷன், செல்வி வைஷ்ணவி ஆகியோரின் குரல்கள் கேட்டவர்களை வசீகரித்தன. செல்வி துவாரகியின் வயலினும், யதுஷன் துரைராசாவின் மிருதங்கமும், செல்வி லக்ஷாயினியின் வீணையும் இணைந்து மறக்க முடியாத ஓர் நினைவைப் பார்ப்போர்க்கு தந்தது எனலாம்.

மிகச் சிறப்பான இந்த நிகழ்வை மேடையேற்றிய நேர்த்திக்காகவும், உருப்படிகளின் தேர்வுக்காகவும் ஒரு சபாஷ் சொல்லியேயாக வேண்டும். ரசனை மிகுந்த மனங்களில் நிகழ்ச்சி இவ்வளவு சீக்கிரம் முடிந்து விட்டதே என்ற பாவனையை ஏற்படுத்தி கந்தனைக் கண்டு, உணர வைத்ததற்காக சபையின் ஏகோபித்த வாழ்த்துக்கள்.

அதன்பின்னர் குழந்தை ப.சண்முகலிங்கத்தின் எந்தையும் தாயும் நாடகம் அரங்கேற்றப்பட்டது. ஸ்கைப்பும், வைபரும், முகப்புத்தகமும், டுவீட்டரும், கோலோச்சும் இந்த நாளில், ஆறாம் விரலாக அலை பேசி ஆகிவிட்ட எம் இளவல்களுக்கு, பேனாவால் மனம் திறந்த, பேசிக்கொண்ட அந்த நாள்கள் நிச்சயமாக புராண காலம்தான். சுருக்கமான அறிமுகத்துடன் ஆரம்பமான நாடகத்தின் பிரதான பாத்திரமான பெரியய்யா மிகப் பொருத்தமான தெரிவு. எட... மோனே மோனே என வினவுவதும், ஆற்றாமையுடன் தவிப்பதும், கழிவிரக்கத்தில் பிதற்றுவதும், பிள்ளைகளின் தபால்களுக்காக பரிதவித்து ஏங்குவதும் பெரியய்யாவாகவே வாழ்ந்து காட்டிய சதீசுக்கு பாராட்டுக்கள். ஒருவருக்கு ஒருவர் சளைத்தவரென்று எவருமே இல்லை. பாத்திரங்களை மிகப் பொருத்தமாகத் தெரிவு செய்வதற்காக நாடகமும், அரங்கியலும் ஆசிரியர் மகேஸ்வரனுக்கு பாராட்டுக்கள்.

அடுத்ததாக, பாஞ்சாலி சபதம் நாட்டிய நாடகம் மேடை ஏற்றப்பட்டது. துஷ்டன் துச்சாதனின் அநாகரிகமான கொடூரமும், பாஞ்சாலியான அபிராமியின் தீனமான இறைஞ்சுதலும், கெஞ்சுதலுமான பாவங்களும் அபாரம். கண்முன்னால் நின்ற கணவர் கற்றவரிடம் காத்திடக் கெஞ்சியதும், கண்ணனே கதி என சரணாகதி அடைந்ததும் காக்கப்பட்டதும் பிரமாதம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ம.பொ.சிவஞானம்

# குழந்தையில்லாக் காப்பியம்

ஐம் பெரும் தமிழ்க் காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம், மிகச் சிறந்த நாடகக் காப்பியமாகும். நாடகம் என்ற சொல்லுக்கு நாடு முழுவதையும்அதாவது, நாட்டிலுள்ள அனைத்தையும் தன்னகத்தே காட்டுவது என்று பொருள் கூறப்படுகின்றது. சிலப்பதிகாரம் நாடு முழுவதையும் தன்னகத்தே காட்டும் தன்மையுடையதாகும். சேரசோழபாண்டிய மண்டலங்களைக் கொண்ட முழுத் தமிழகத்தைச் சிலப்பதிகாரத்தில் காண்கிறோம். நில ஒருமைப்பாட்டின்படி, தென்குமரிக்கும் வட இமயத்துக்கும் இடைப்பட்ட பாரதநாடு முழுவதையும்கூட களமாகக் கொண்டிருக்கிறது சிலப்பதிகாரம்.

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகிய நால் வருணங்களி லிருந்தும் பாத்திரங்களைத் தேர்ந்தெடுத்துள்ளார் ஆசிரியர் இளங்கோ.

இலக்கண முறைப்படி, குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை என்று ஐவகை நிலங்களையும் பிரித்துக்காட்டியுள்ளார் ஆசிரியர். ஐவகை நிலங்களையே அன்றி, ஒவ்வொரு நிலத்துக்கும் உரிய தனித் தனித் தெய்வங்களை அந்த அந்த நில மக்கள் வழிபடுவதையும் தெளிவாகக் காட்சிப்படுத்தியிருக்கிறார். மருதத்தில் இந்திர விழா, பாலையில் கொற்றவை வழிபாடு (வேட்டுவ வரி), முல்லையில் திருமால் வழிபாடு (ஆய்ச்சியர் குரவை), குறிஞ்சியில் முருகன் வழிபாடு (குன்றக் குரவை) நிகழக் காண்கிறோம். நெய்தலுக்குரிய வருணன் வழிபாடு கானல் வரிப் பாட்டின் இறுதியில் 'மாக்கடல் தெய்வம்நின் மலரடி வணங்குதும்' என்று கடல் தெய்வத்தை மாதவி வழிபடுவதனால் அறியப்படுகிறது.



பாத்திரங்களிலே, பதினாறு வயதளவுடைய கோவலன் முதல். மதம் பிடித்த யானையின் துதிக்கையில் அகப்பட்ட அந்தண முதியோன் வரையிலும், பன்னிரண்டு வயதுடைய கண்ணகி முதல், முதியோளான இடைக்குல மாதவி வரையிலும் பலவேறு பருவத்தினரைச் சிலப்பதிகாரத்தில் பார்க்கிறோம். இப்படி நாடு முழுவதையும் தன்னகத்தே காட்டும் தலைசிறந்த நாடகக் காப்பியமாகிய சிலப்பதிகாரத்திலே குறுகுறு நடைபயிலும் குழந்தை நடமாடக் காண்கிறோம் இல்லை; அதன் மழலைக் குரலைக் கேட்கிறோம் இல்லை. இது, கதையின் போக்குக் காரணமாக ஏற்பட்ட ஒரு குறைபாடு என்றே கொள்ள வேண்டும்.

அணியிலக்கணம் தந்த தண்டியாசிரியர் பெருங்காப்பியத்துக்கு இலக்கணம் கூறுகையில், நன்மணம் புணர்தல்.... சிறுவரைப் பெறுதல் பெருங்காப்பியத்தின் உறுப்புக்களாகும் என்று உரைத்துள்ளார். சிலப்பதிகாரத்திலே கண்ணகிக்கும் கோவலனுக்கும் நன்மணம் நடைபெறக் காண்கிறோம். ஆனால், காப்பியத் தலைவனும் தலைவியும் சிறுவரைப் பெற்றதாகச் செய்தி இல்லை. குழந்தையில்லாக் குறை காப்பியத் தலைவியோடும் தலைவனோடும் அமையாமல் குழந்தை நடமாடாத குறை சிலப்பதிகாரக் காப்பியத்துக்கும் அமைந்து விட்டது.

பாத்திரம் என்று சொல்வது களத்தில் நடமாடி, கதை நிகழ்ச்சியிலிருந்து பிரித்தெடுக்க முடியாமல் பிணைத்திருப்போரைத்தான். இந்த வகையிலே சிலப்பதிகாரக் காப்பியத்தில் மழலை பேசும் குழந்தை ஒரு பாத்திரமாக நடமாடவில்லை.

சீவக சிந்தாமணிக் காப்பியத்தினுள் காப்பிய நாயகனான சீவகனுடைய பிறப்பும் வளர்ப்பும் கூறப்படுகின்றன. பெருங்கதையுள்ளும் கதாநாயகனான உதயணன், பிறக்கும் போதே எமக்கு அறிமுகப்படுத்தப் படுகிறான். கம்பராமாயணத்துள்ளும் காப்பிய நாயகனான இராமனுடைய பிறப்பை அவதாரப் படலத்துள் விரித்துரைக்கின்றார் கவியரசர் கம்பர். வில்லி பாரதத்துள்ளும் காப்பிய நாயகர்களின் பிறப்பும் வளர்ப்பும் விரிவாகக் கூறப்படுகின்றன.

ஆம்; சிந்தாமணி, பெருங்கதை, கம்பராமாயணம், வில்லி பாரதம் ஆகியபெருங்காப்பியங்கள் அனைத்திலும் காப்பிய நாயகர்களையே குழந்தை வடிவில் கண்டு மகிழ்கிறோம்.

பெருங்காப்பியமாகக் கருதப்படாத நளவெண்பாவினுள்ளும், நளனும் தமயந்தியும் ஈன்றெடுத்த செல்வர் இருவரின் மழலைக் குரலைக் கேட்கிறோம்.

வறுமையால் வருந்தும் நளன் தம்பதியர் தாங்கள் ஈன்ற செல்வங்களை, தாய்வழிப்பாட்டன் வீட்டுக்கு அனுப்புகையில்,

தந்தை திருமுகத்தை நோக்கித்
தமைப்பயந்தாள்
இந்து முகத்தை எதிர்நோக்கி எந்
தம்மை
வேறாகப் போக்குதிரோ என்றார்
விழிவழியே
ஆறாகக் கண்ணீர் அழுது.

என்ற வெண்பாவிலே குழந்தைகளின் அழுகுரலைக் கேட்கிறோம். மணிமேகலைக் காப்பியத்துள்ளும் குறுகுறுநடை பயிலும் குழந்தை நடமாடவில்லை. ஆனால், சாத்தனார் தந்த மணிமேகலையைச் சிலப்பதிகாரத்துடன் சேர்த்து வைத்து,

மணிமே கலைமேல் உரைப்
பொருள் முற்றிய சிலப்பதிகாரம்
முற்றும்

எனச் சிலப்பதிகாரத்தில் உள்ள நூற்கட்டுரையில் கூறுகின்றார் இளங்கோவடிகள். ஆகவே மணிமேகலையில் குழந்தை நடமாடாததை ஒரு குறையாகவே கொள்வதற்கில்லை. தண்டியலங்காரம், சிலப்பதிகாரத்துக்குப் பின்பு தோன்றிய காப்பிய இலக்கணமாகும். இதனால், அந்த நூலைக் கொண்டு சிலப்பதிகாரத்தை அளந்து குழந்தை இல்லாததை ஒரு குறையாக நான் கொள்ளவில்லை. குடும்ப வாழ்விலே குழந்தைக்குள்ள முக்கியத்துவத்தை நோக்கினாலும், சிலப்பதிகார நாடகக் காப்பியத்தில் குழந்தைப் பாத்திரம் இல்லாதது குறையாகி விடுகிறது.

காப்பியத் தலைவியை அல்லது தலைவனைக் குழந்தைப்பருவத்திலேயே அறிமுகப்படுத்துவது ஒரு முறை. சிலப்பதிகாரக் காப்பியம் இந்த முறைக்கு விலக்காக இருக்கிறது. கண்ணகி பன்னிரண்டு வயதுடையவளாகவும், கோவலன் பதினாறு வயதுடையவனாகவும் மணவறையிலே முதல்முதலாக நமக்கு அறிமுகமாகின்றனர்.

காப்பியத் தலைவனும் தலைவியும் மனமொத்து இல்வாழ்க்கை நடத்துகையிலேயே, அவர்கள் பெற்றெடுக்கும் குழந்தையைக் காப்பியத்தின் பாத்திரமாக அறிமுகப்படுத்துவது மற்றொரு முறை.

சிலப்பதிகாரத் தலைவனும் தலைவியும் இந்தப்பேற்றையும் பெறவில்லை. சிலப்பதிகாரக் காப்பியத்திலேயே குழந்தை நடமாடவில்லை என்று நான் கூறுவது சிலருக்குப் பிழையாகத் தோன்றலாம். கோவலனுக்குக் காதலியாக வாய்த்த மாதவியாள் பெற்றெடுக்கும் மணிமேகலையைக் காட்டி, இதோ சிலப்பதிகாரத்திலே குழந்தைப் பாத்திரம் என்று கூறலாம். இது வெறும் மயக்கம். மணிமேகலை, சிலப்பதிகாரத்தில் நடமாடும் பாத்திரமாக இல்லை. அவளுடைய மழலைக் குரல் காப்பியத்தில் ஓரிடத்தில்கூட ஒலிக்கவில்லை. அவள் பிறந்த செய்தி கூடக் கோவலன் மாதவி இல்லத்தில் இருந்த காலத்திலேயே எமது காதில் விழவில்லை. கோவலன் கண்காண மாதவியின் மனையிலே அவள் நடமாடுவதை எமது அகக்கண்கள் காணவில்லை. கோவலன் மாதவியிடம் ஊடல் கொண்டு, அவளைத் தழுவிய கையை நழுவவிட்டு, கண்ணகியை நோக்கி ஓடுங்கால், காதல் பாணியில் கடிதம் எழுதி, அதனைக் கோவலனுக்கு வயந்தமாலை மூலம் அனுப்புகின்றாள் மாதவி. அதில்கூடக் குழந்தை மணிமேகலையை நினைப்பூட்டி அவன் மனத்தை மாற்ற மாதவியால் முயலவில்லை.

கொலைக்களக் காதைக்கு முன்புள்ள அடைக்கலக் காதையில் மனமொடிந்த நிலையில் உள்ள கோவலனைச் சந்திக்கும் அவனுடைய மதிப்புக்குரிய நண்பன் மாடலன்,

மாந்தளிர் மேனி மாதவி மடந்தை
பால்வாய்க் குழவி பயந்தனள்
எடுத்து
வாலா மைந்நாள் நீங்கிய பின்னர்
..................................................
அணிமே கலையார் ஆயிரங் கணி
கையர்
மணிமே கலைஎன வாழ்த்திய..........

செய்தியைக் கோவலனிடமே கதை சொல்லும் பாணியில் கூறுகின்றான். வாழ்த்துக் காதையினுள்,

மாதவி 'தன்துறவும் கேட்டாயோ
தோழீ
மணிமே கலைதுறவும் கேட்
டாயோ தோழீ'

என்று கண்ணகியின் கோவில் முன்பு அடித்தோழி அரற்றும் போதும், மணிமேகலைபற்றி அறிகிறோம். இப்படி மாதவிக்கு மணிமேகலை பிறந்த செய்தியை மாடல மறையோன் மூலமும், அவன் துறவு பூண்ட செய்தியை அடித்தோழி மூலமும் அறிவிக்கின்றார் இளங்கோ. நாடக முறைப்படி குழந்தை மணிமேகலையை ஒரு பாத்திரமாகக் கொள்வதற்கில்லை.

சுருங்கச் சொன்னால் மணிமகலையைப் பற்றிய குறிப்பு, சிலப்பதிகாரத்தில் தரப்படுகிறது; அவ்வளவு தான்.

சிலப்பதிகாரத்துள் உபகதைகளாக வரும் சில நிகழ்ச்சிகளிலே குழந்தைகளைப் பற்றிய குறிப்புக்களைக் காண்கின்றோம்.அவற்றுள் ஒன்று,

மேலோர்நாள் மாலதி மாற்றாள்
மகவுக்குப் பதிலளிக்கப் பால்விக்கிப்
பாலகன் தான்சோர......

என்னும் அடிகளிலே, மாண்டு மடிந்த குழந்தை ஒன்றைப் பற்றிய குறிப்பைப் படிக்கிறோம்.

இப்படி, சிலப்பதிகாரத்துள் ஒன்றிரண்டு இடங்களில் கூறப்படும் பழைய நிகழ்ச்சிகளிலே குழந்தைகளைப் பற்றிய செய்திகள் வருகின்றன. இவை தவிர, நடமாடும் குழந்தையை, அதன் மழலைக் குரலைச் சிலப்பதிகாரத்தில் பார்க்கவும் கேட்கவும் நாம் கொடுத்து வைக்கவில்லை. இது மகாகவி இளங்கோவடிகள் இழைத்த பிழையன்று. வரலாறு தந்த குறைபாடே என்பேன். சிலப்பதிகாரம் இளங்கோவடிகளின் புனைந்துரையன்று; வரலாற்றுக் காப்பியம். ஒரு சில கற்பனைகள் கலந்திருப்பினும் பாத்திரங்களைப் பொறுத்தவரையிர் கற்பனை இல்லை என்று சொல்லலாம். வரலாற்று நாயக நாயகியரைக் கொண்டே காப்பியத்தை உருவாக்கியிருக்கிறார் இளங்கோவடிகள். குழந்தை இல்லாக் குறையைக்கொண்டும், சிலப்பதிகாரம் முழுக்க முழுக்க வரலாற்றுக் காப்பியம் என்ற உண்மையைப் புரிந்து கொள்கிறோம்.




## பிரிட்டிஷ் கவுன்சிலில் ஏன் ஆங்கிலம் கற்க வேண்டும்?

நாம் பின்வருவனவற்றை வழங்குகின்றோம்

- வயதுவந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் பலதரப்பட்ட பயிற்சிநெறிகள் (வார, வார இறுதி நாட்கள்)
- பயிற்சிநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததும் பிரிட்டிஷ் கவுன்சில் சான்றிதழ் வழங்கப்படும்.
- ஐக்கிய இராச்சிய தராதரமுடைய தொழில்சார் மற்றும் அனுபவமுடைய ஆங்கில ஆசிரியர்கள்
- இரண்டு தவணைக் கட்டண முறைகள் எங்கள் யாழ்ப்பாணம், கண்டி கிளைகளில்.

### செப்டம்பர் மாதம் ஆரம்பிக்கும் பயிற்சிநெறிக்கு தற்போது பதிவு செய்யவும்

நான் எவ்வாறு பதிவுகளை மேற்கொள்ள முடியும்?

- தரப்படுத்தல் பரீட்சைக்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்வதற்கு
  வயதுவந்தவர்களுக்கு (16 வயதிற்கு மேற்பட்டோர்களுக்கு) அடையாள அட்டை/கடவுச்சீட்டுடன் வரவும்
  பிள்ளைகளுக்கு (6-15 வயதிற்கு உட்பட்டோர்களுக்கு) உங்கள் பிள்ளையின் பிறப்புச்சான்றிதழ்
- தரப்படுத்தல் பரீட்சைக்கான கட்டணம் ருபா. 1000.

70 ரக்கா வீதி, கண்டிக்குளி யாழ்ப்பாணம்
தொ.பே (021) 7521521
அலுவலக நேரங்கள்:
புதன் முதல் ஞாயிறு வரை 0830-1800

49 அல்பிரட் ஹவுஸ் கார்டன்ஸ், கொழும்பு 3
தொ.பே (011) 4521521, (011) 7521521
அலுவலக நேரங்கள்:
திங்கள் முதல் ஞாயிறு வரை: 0830–1800

88/3 கொட்டுகொடல்ல வீதி, கண்டி
தொ.பே (081) 7222410
அலுவலக நேரங்கள்:
செவ்வாய் முதல் சனி வரை: 0900-1730
ஞாயிறு 0900-1600

நாங்கள் Apex Business Academy உடன் இணைந்து எங்கள் பாடநெறிகளை

www.britishcouncil.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோயில் வழிபாட்டு மரபுகளும் மாற்றங்களும்

## இலங்கையின் வடபுலத்தை மையப்படுத்திய பார்வை



ச.லலீசன், பிரதி அதிபர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

**(கடந்த வாரத் தொடர்ச்சி)**

பெரியவர் சுட்டிக்காட்டிய தவறுகள் தற்போதும் எங்கள் திருக்கோவில்களில் நிகழ்கின்றன.

**வழிபாட்டு மரபு**

கோவில் வழிபாட்டில் ஆண்களும் பெண்களும் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் தற்காலத்தில் ஒப்பீட்டளவில் பெண்களே அதிகளவில் ஆலயங்களுக்குச் சென்று வழிபடும் நிலை ஏற்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது. இதனால் தேர் இழுப்பது, சகடை தள்ளுவது முதலான, ஆண்கள் மேற்கொண்ட செயற்பாடுகளில் தற்போது பெண்களும் ஈடுபட்டு வருகின்றனர். இந்தச் செயற்பாடுகளின் ஆரம்பம் தெல்லிப்பழைத் துர்க்கை அம்மன் கோவிலிலேயே சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களால் ஏற்படுத்தப்பட்டது. தற்போது ஒரு சில ஆலயங்களில் பெண்களும் சுவாமி காவும் வழிபாட்டு மரபு காணப்படுகின்றது.

கோவில் வழிபாட்டு மரபில் காணப்பட்ட வர்க்க அடிப்படையிலான பேதங்கள் 1960களில் வழிபாட்டு மரபுசார்ந்த புரட்சிகளை ஏற்படுத்தியிருந்தன. வழிபாட்டை மையப்படுத்தி ஆலயப் பிரவேசம், நீதிமன்ற வழக்கு என அவை பெருகின. ஆனால் தற்போது ஆலயப் பிரவேசத்தைப் பொறுத்தவரையில் எல்லோரும் ஆலயப் பிரவேசம் செய்யும் நிலைமையே காணப்படுகின்றது. இதற்கு விதிவிலக்காக ஒரு சில ஆலயங்கள் உள்ளன.

ஆலயம் தவிர நிறுவன மயப்பட்ட சமய நிலையங்களை நாடிச்சென்று வழிபாடு செய்யும் மரபும் ஏற்பட்டுள்ளது. மேல்மருவத்தூர் பீட வழிபாட்டு நிலையங்கள், அம்மா பகவான், சாயி சமித்தி, சின்மய மிஷன், சீரடி சாயிபாபா, பிரம்ம குமாரிகள் என அமைந்த நிலையங்கள் வடபுலத்தில் பிரபலம் பெற்று வருகின்றன. இவை அகநிலைப்பட்ட வழிபாட்டு நெறிக்கு முதன்மை வழங்குகின்றன. இத்தகைய நிலையங்களை நாடிச் செல்லும் பக்தர்களுடைய எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதைக் காணமுடிகின்றது.

பிரார்த்தனை மரபில் திருமுறை பாடும் வழக்கம் அருகி வருகின்றது. ஓதுவார் முறைமையும் வழக்கொழிந்து வருகின்றது. பஜனைகளில் மிகவும் எளிமையான தமிழ் நடையில் உள்ள பாடல்களை மக்கள் விரும்பிப் படிக்கும் நிலைமை உள்ளமையைக் காணமுடிகின்றது.

பூசை மரபில், திருமுறைக்கு முதன்மை வழங்கும் தன்மையிலும் மாற்றம் ஏற்பட்டிருப்பதைக் காண முடிகின்றது. பூசை மரபில் ஆசீர்வாதத்தின் பின்னர் படிக்கப்பட்ட திருமுறைப் பாராயணம் வேதபாராயணத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளும் நிலைமை காணப்படுகின்றது. சைவக்குருமார் மேற்கொள்ளும் வழிபாட்டு நெறியில் இந்நிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது.

திருமுறைகளைப் படிக்கும்போது நாவலர் ஏற்படுத்திய பஞ்ச புராணம் ஓதும் மரபைத் தவிர்த்து, தேவாரம் புராணத்துடன் நிறைவு செய்யும் மரபும் தற்போது ஏற்பட்டுள்ளது.

பெருந்தெய்வ வழிபாட்டு நடைமுறைகளில் சிவன் கோவில்களுக்குச் செல்லும் பக்தர்களுடைய எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படுவதையும் அவதானிக்க முடிகின்றது. ஐயப்பன் வழிபாடு, ஆஞ்சநேயர் வழிபாடு முதலியவற்றில் மோகம் அதிகரித்துக் காணப்படுகின்றது. சிறு தெய்வங்களைப் பெருந்தெய்வங்களாகக் குறிக்கும் நெறியாகவே இதனைப் பார்க்க முடிகின்றது.

விரத நடைமுறைகளில் கந்தபுராண கலாசாரம் வேரூன்றிய யாழ்ப்பாண மண்ணில் தற்போது கேதார கௌரி விரதம், வரலஷ்மி விரதம் என்பவற்றையே அதிகளவில் மக்கள் கைக்கொள்கின்றனர் என கணிப்பிட முடிகின்றது. கந்த சஷ்டி விரதம் அனுட்டிப்போருடைய எண்ணிக்கைக்குச் சமதையாக, கேதார கௌரி விரதம் மற்றும் வரலஷ்மி விரதத்தை அனுட்டிப்போருடைய எண்ணிக்கை காணப்படுகின்றது.

கடந்த ஜூன் 2015 இல் யாழ். வண்ணார் பண்ணை பெருமாள் கோவிலில் ஏற்பட்ட மாற்றமும் வழிபாட்டு மரபில் ஏற்பட்ட மாற்றமாகக் கொள்ளத்தக்கது. பெருமாள் கோவிலில் சிவப்பிராமணர்கள் பூசை செய்யும் வழிபாட்டு மரபை நிறுத்தி, வைணவ பட்டாச்சாரியார்கள் பூசை செய்யும் மரபு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மாற்றம் குறித்து சில பிராமண அமைப்புக்கள், இந்து சமய அமைப்புக்கள் கண்டனம் வெளியிட்டிருந்தாலும், கோவில் வழிபாட்டு நடைமுறையில் கலந்து கொள்ளும் பக்தர்கள் தரப்பில் எதிர்ப்பு ஏற்படவில்லை என்பதையும் கோவிலுக்குச் செல்லும் பக்தர்களது எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படவில்லை என்பதையும், சுட்டிக்காட்ட வேண்டும். ஆயினும் சிவபூமியில் சிவாம்சமாக மேற்கொள்ளப்பட்ட பெருமாள் வழிபாட்டில், மரபு நிலை மாற்றம் ஏற்படுவதை சைவப் பெரியோர்கள் வரவேற்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

கோவில்களின் பெருக்கம், வழிபடும் அடியவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி என்பவற்றால் கோவில்களில் உள்ள உற்சவ மூர்த்தியின் பருமன் சிறுத்துச் செல்லும் நிலையும் காணப்படுகின்றது. இலகுவாகத் தூக்கிச் செல்லக் கூடிய, ஓரிருவர் சேர்ந்து கையாளக் கூடிய பருமனுள்ள மூர்த்திகளை உற்சவ மூர்த்தியாகக் கைக்கொள்ளும் நிலையும் தற்போது ஏற்பட்டுள்ளது.

வழிபாட்டில் தமிழ்ப்பூசை முறைமை ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற குரல்களும் ஒலிக்கத் தொடங்கியுள்ளன. 2013 ஆம் ஆண்டு இணுவிலில் இதற்கான பயிற்சி மையம் ஒன்றும் நிறுவப்பட்டது. ஆயினும் இந்தக் கற்கை நெறி குறிப்பிடத்தக்களவு வெற்றியை பெற்றதாகக் காணமுடியவில்லை.

சமஸ்கிருத பூசை மரபில் தமிழ் கலந்து மேற்கொள்ளப்படும் நடைமுறையைத் தற்போது காண முடிகின்றது. சமஸ்கிருத சுலோகங்களுக்கான பொருளை குரு எடுத்துக் கூறி அடியவர்களை வழிப்படுத்துவதும், கிறிஸ்தவ தேவாலய வழிபாட்டு மரபில் காணப்படும் மன்றாட்டு வழிபாட்டு மரபும் தற்போது இந்து ஆலயங்களில் ஏற்பட்டுள்ளன.

ஆலயங்களில் நேர முகாமைத்துவம் பேணப்படும் நடைமுறை தற்போது சற்று ஆரோக்கியமாக முன்னெடுக்கப்படுகின்றது. நல்லூர் கந்தசுவாமி, தெல்லிப்பழை துர்க்கை முதலிய ஆலயங்களில் நேர முகாமை நேர்த்தியாகப் பேணப்படுகின்றது. ஆயினும் கடவுளுக்கு நேரவரையறை வைத்து அடியவர் வழிபாட்டுக்கு முழுநேரமும் இடமளிக்காமல் ஆலயத்தைப் பூட்டி வைத்திருக்கும் நிலைமையும் காணப்படுகின்றது.

கோவில் வழிபாட்டுக்கென விலக்கப்பட்ட மலர்களைக் கொண்டு பூசை செய்யும், மாலை கட்டும் மரபும் தற்போது ஏற்பட்டுள்ளது. பூசை வழிபாட்டில் இருந்து விலக்களிக்கப்பட்ட கடதாசிப் பூக்களை வைத்து மாலை கட்டும் பண்பாடும் அலங்காரம் செய்யும் பண்பாடும் காணப்படுகின்றது. தவிர, வாசனையற்ற மரபணு மாற்றத்தால் உருவாக்கப்பட்ட வாடாத பூக்களை தமிழகத்தில் இருந்து இறக்குமதி செய்து இறைவனை அலங்கரிக்கும் புதிய போக்கும் உருவாகியுள்ளது.

**நிர்வாக மரபு**

ஆலயங்களில் காணப்படும் தற்போதைய நிர்வாக நடைமுறை தனியொருவர் (எசமான்) நிர்வகிக் கும் முறையுடையதாக, தர்மகர்த்தா முறை யுடையதாக, பரிபாலன சபை முறையுடையதாக, பிரதேச செயலகத் தலையீட்டுடனான நிர்வாக முறையுடையதாகக் காணப்படுகின்றன. இத்தகைய நிர்வாக நெறிமுறைகளில் ஏற்பட்ட முரண்பாடுகளால் பிணக்குகள் ஏற்பட்டு நீதிமன்றம் வரை கோவில் பிரச்சினைகள் வாதிக்கப்படுகின்றன. தற்போது யாழ்ப்பாண நீதிமன்றங்களில் அதிகளவில் உள்ள வழக்குளில் முதன்மை பெறுவன கோவில் தொடர்பான வழக்குகளும், விவாகரத்துத் தொடர்பான வழக்குகளுமே என அமரர் நீதிவான் திருநாவுக்கரசு நல்லூர் ஆலயச் சூழலில் 2013 ஆம் ஆண்டில் உரையாற்றும் போது தெரி வித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆலய பரிபாலன சபையினர் ஆலயக் குருக்களை தமக்குக்கீழ்ப்பட்ட பணியாளராகப் பார்க்கும் நிலைமையும் உள்ளது. மேலும் குருக்கள் மற்றும் பணியாளருக்கான கொடுப்பனவுகள் நிர்வாக நெறிப்பட்டதாக சம்பளப்பட்டியல் முறைமையில் வழங்கப்படுகின்ற நிலைமையைப் பெரிய ஆலயங்கள் கொண்டுள்ளன.

கோவில்களில் அர்ச்சனை மேற்கொள்வதற்காக அர்ச்சனைச் சீட்டு வியாபார முறைமை தற்போது வழக்கில் உள்ளது. பெரும்பாலான ஆலயங்களில் இதன் ஆகக் குறைந்த கட்டணமாக பத்து ரூபா அறவிடப்படுகின்றது. அர்ச்சனை மேற்கொள்ளும் அடியவர் எவராக (சிவதீட்சை கேட்காதவராயினும்) இருப்பினும் தர்ப்பை அணிவித்து அர்ச்சனை செய்யும் நடைமுறையை ஆலயக் குருமார் ஏற்படுத்தியுள்ளனர். மேலும் அர்ச்சனை நிறைவில் பவித்திரத்தை (தர்ப்பையை) கழற்றும் போது குருவுக்கு தட்சணை வழங்கும் மரபும் ஏற்பட்டுள்ளது.

தீட்சை பெற்றவர், பெறாதவர், புலால் உணவு உண்பவர், உண்ணாதவர் என எவ்வித பேதமும் இன்றி எவருக்கும் தர்ப்பை என்ற புனிதத் தன்மையான பவித்திரத்தை அணிவிக்கும் தன்மையும் தற்போது கைக்கொள்ளப்படுகின்றது.

சண்டேசுவரர் பூசை இடம்பெற்ற பின்னர் வணக்க முறைமைகள் மேற்கொள்ளப்பட ஆகம விதிகளின் பிரகாரம் இடமில்லையாயினும், சுவாமிக்கான அர்ச்சனைகள் வசதி கருதி, சண்டேசுவர பூசையின் பின்னர் மேற்கொள்ளும் புதிய செல்நெறியே காணப்படுகின்றது.

ஆலயக் கட்டட அமைப்பு முறையில் நிர்வாக அலுவலகம் ஏற்படுத்தப்படும் முறையும் காணப்படுகின்றது.

**சூழல் மரபு**

ஆலயங்கள் அமைப்பதற்கெனத் தெரிவு செய்யப்படும் இடம் இயற்கையோடு இணைந்த இடமாகக் காணப்பட்டது. சங்ககால வணக்க முறைகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட இடங்கள் இதற்குச் சான்று பகர்கின்றன.

கோவில்களின் விமான அமைப்பைப் பொறுத்து கரக்கோவில், ஞாழற்கோவில், கொகுடிக் கோவில், இளங்கோவில், மணிக் கோவில், ஆலக்கோவில் என ஆறு வகையான கோவில்கள் தேவார காலத்தில் இருந்ததாக திருநாவுக்கரசர் தேவாரத்தின் ஊடாக அறிய முடிகின்றது.

**பெருக்காறு சடைக்கணிந்த**
**பெருமான் சேரும்**
**பெருங்கோயி லெழுபதினோ**
**டெட்டும் மற்றுங்**
**கரக்கோயில் கடிபொழில்சூழ்**
**ஞாழற்கோயில்**
**கருப்பறியல் பொருப்பனைய**
**கொகுடிக் கோயில்**
**இருக்கோதி மறையவர்கள் வழிபட்**
**டேத்தும்**
**இளங்கோயில் மணிக்கோயில்**
**ஆலக் கோயில்**
**திருக்கோயில் சிவனுறையுங்**
**கோயில் சூழ்ந்து**
**தாழ்ந்திறைஞ்சத் தீவினைகள்**
**தீரும் அன்றே**

(தேவாரம் – திருநாவுக்கரசர் – ஆறாம் திருமுறை – அடைவுத் திருத்தாண்டகம்)

தற்போது தத்தமது வசதிகளை மையப்படுத்தி ஆலயங்களை அமைக்கும் போக்குக் காணப்படுகின்றது. இதனால் ஆகம மரபைக் கைக்கொள்ளாமல் ஆலயங்களை நிர்மாணிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. புலம்பெயர் தேசங்களில் தேவாலயங்களைக் கொள்வனவு செய்து கோவில் அமைப்பதைப் போன்று இங்கும் ஆகமம் சாராத வணக்கத் தலங்கள் புதிதாக அமைக்கப்படுகின்றன.

சனநெருக்கடியுள்ள கொழும்பு போன்ற இடங்களில் கீழ்மாடியில் குடியிருப்பும், மேல் மாடியில் கோவிலும் காணப் படுகின்றன.

**நிறைவுரை**

ஏனைய சமயங்களைப் போல இந்து சமயம் நிறுவன மயப்பட்டிருக்கவில்லை. இது இந்தச் சமயத் தின் பலமாகவும், பலவீனமாகவும் கொள்ளப்படுகின்றது. இதனால் மாற்றங்களை உள்வாங்குவது குறித்த சரி பிழைகளுக்குத் தீர்ப்புக் கூறக்கூடிய அதிகாரம் எவரிடமும் இல்லை. மாற்றங்கள் தக்கன பிழைத்தலும் தகாதன அழிதலும் என்ற கூர்ப்புக் கொள்கையுடன் பொருந்தியவாறு நிகழ்வது தவிர்க்க இயலாதது. ஆயினும் இவற்றில் காலத்தின் தேவையுணர்ந்த, சமயத்தின் இருப்புக்குப் பங்கம் ஏற்படுத்தாத மாற்றங்கள் ஏற்கத்தக்கவையே.

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே என்பது நன்னூலாரது வாக்கு. திருக்கோவில் வழிபாட்டு மரபில் ஏற்பட்டிருக்கக் கூடிய மாறுதல்கள் நன்னூலாரது வாக்குடன் பொருத்திப் பார்க்கத்தக்கவை. ஆயினும் பழையன கழித்தல் புதியன புகுத்தல் என்ற நிலைமை ஏற்படாதிருப்பது எமது சமயம் சார்ந்த பண்பாட்டு இருப்புக்கு ஆதாரமாக அமையும்.

உசாவியவை

கைலாசநாதக் குருக்கள். கா., (2009) சைவத் திருக்கோவிற் கிரியை நெறி, யாழ்ப்பாணம் : பேராசிரியர்
பிரம்மஸ்ரீ கா.கைலாசநாதக் குருக்கள் ஞாபகார்த்தச் சபை.
சிவானந்த சர்மா. ப., (1986) சைவாலயக் கிரியைகள், ஆவரங்கால் : பாலாவி
தேஜோமயானந்தர், (2009) இந்து கலாச்சாரம் – ஓர் அறிமுகம், சென்னை, சின்மயா மிஷன் ரஸ்ட்.
கணபதி.ரா., (1999), தெய்வத்தின் குரல் (இரண்டாம் பாகம்), சென்னை : வானதி பதிப்பகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு:சோபனா

(சென்றவாரத் தொடர்ச்சி...)

இயற்கை வனங்களில் வாழும் பழங்குடி மக்கள் தேனெடுத்தல், நிலத்தினை அகழ்ந்து கிழங்கெடுத்தல், காடுகளில் கிடைக்கும் காய்கனிகளை உணவாக்கிக் கொள்ளுதல் போன்றவை மூலம் வாழ்க்கை நடத்துகின்றனர்.

பழங்குடியினர் இயற்கையை வழிபடும் பழக்கமுள்ளவர்கள், தங்களை வாழவைக்கும் மலையையும், வனத்தையும் தெய்வங்களாகப் போற்றுகின்ற பண்பாடு இவர்களிடம் காணப்படுகிறது. காற்றையும், மழையையும், இடியையும் இவர்கள் வழிபடுகின்றனர். அச்சமும், அறியாமையும் பழைமை நம்பிக்கையும் இவர்களிடம்



# இயற்கையோடு ஒன்றித்த பழங்குடியினர்

காணப்படுகிறது. பலம் பொருந்திய சக்திவாய்ந்த யானை மற்றும் விலங்குகள் வந்தால் அச்சத்தினால் வழிபட்டும் பழகிப்போன பழங்குடி மக்களுக்கு இந்த விலங்குகளும் தெய்வங்களே.

இறந்து போன இவர்களின் முன்னோர்கள் ஆவிவடிவில் வனத்தில் வாழ்வதாக இவர்கள் நம்புகிறார்கள். தலைமுறை தலைமுறையாக வனங்களில் வாழ்ந்த தங்களது முன்னோர்கள் வனத்திலே தெய்வங்களாக இருந்து தங்களைக் காத்து வருகின்றார்கள் என்ற நம்பிக்கை இவர்களிடம் வலுவாக இருக்கின்றது. காடு, மலையை விட்டு வெளியேற ஒரு போதும் விரும்பாதவர்களாக, இயற்கையின் அங்கமாக உள்ளனர்.

இவர்கள் வனங்களில் சிறு தெய்வங்களை வழிபடுகிறார்கள். இவர்களின் கடவுள்களுக்கு கட்டப்பட்ட கோயில்கள் இல்லை. காடுகளில் இருக்கும் சில மரங்கள், கல், ஆறு, அருவி, நெருப்பு இவைகளையும் வணங்குகின்றனர்.

இவர்களின் மலை நிலங்களை ஆதிக்க சக்திகள் பறித்துக் கொள்வது போலவே, இவர்களது தெய்வங்களையும் பறித்துக் கொள்கிறார்கள். சிறுதெய்வங்களை சக்தியாக, சிவனாக, விஷ்ணுவாக மாற்று ஐக்கியப்படுத்திக் கொள்கின்றன.

அந்தச் சிறு தெய்வங்களுக்கு சக்தி அதிகமாக இருப்பதாக நம்பி மற்றச் சமூக மக்கள் வழிபாட்டுக்குப் படை எடுத்து வரும் போது பழங்குடியினர் விரட்டப்பட்டு வருகின்றனர். பழங்குடியினரின் தெய்வங்களைக் கூட அவர்களிடமிருந்து பறித்துத் தமதாக்கிக் கொள்கின்றனர்.

பேய், பில்லி, சூனியத்தில் நம்பிக்கை உள்ளவர்கள். கெட்ட காற்று(பேய்) மற்றும் தீயசக்திகளால் கேடு வந்துவிடக் கூடாதென தமது முன்னோர்களையும், கடவுளையும் வேண்டிக் கொள்கின்றனர்.

உணவுக்காக வேட்டையாடுதல் தொல்பழங்குடியினரின் அன்றாடப் பழக்கமாக இருந்தது. ஆனால், வேட்டை அரசால் தடை செய்யப்பட்டுவிட்டது. வேட்டையில் ஒரு விலங்கு கிடைத்து விட்டால் அது அம்மக்கள் அனைவருக்குமே பொது. வேட்டையாடியவர் மட்டும் அனுபவிப்பதில்லை. அது பழங்குடி மக்கள் கடைபிடித்து வரும் வாழ்க்கை முறை. எவருக்கு வேட்டை கிடைப்பினும் அங்கு வாழும் பழங்குடி மக்கள் அனைவருமே பகிர்ந்துண்ணும் பண்பினர். ஒருவர் பட்டினி கிடக்க மற்றொருவர் வயிறு நிரப்பி மகிழும் சிறுமைக் குணத்தை பழங்குடியினரிடம் காண முடியாது. இத்தகைய பண்பு மலையென இம்மக்களிடம் உயர்ந்து காணப்படுகிறது. பழங்குடிமக்கள் பிச்சை எடுக்கமாட்டார்கள்.

இத்தகைய பண்பு வனத்தை ஒட்டிவாழும் பழங்குடியினர் அல்லாத சமூக மக்களிடமும் தாக்கமாக இன்றளவும் நிலவி வருகிறது. வனத்தை ஒட்டி வாழும் பகுதியில் மானோ, பன்றியோ மற்ற விலங்குகளோ வந்து, வேட்டை கிடைத்துவிட்டால் வேட்டையாடியவரே எடுத்துக் கொள்ளும் பழக்கமில்லை. வேட்டையாடிவருக்கு ஒரு பங்கோ அல்லது அதன் ஓர் உறுப்போ கூடுதலாகக் கொடுப்பர். மற்ற மாமிசத்தை எத்தனை குடும்பங்கள் உள்ளனவோ அவ்வளவு பேரும் பகிர்ந்து கொள்கிறார்கள். மாமிசத்தை வெயிலில் உலர்த்தி உப்புக்கண்டம் (வத்தல்) போடும் பழக்கத்தை வைத்திருக்கிறார்கள்.

காட்டில் கிடைக்கும் காய்கனி, தேன் மற்றும் பொருள்களை வனத்தை ஒட்டி வாழும் ஊர்களுக்குச் சென்று விற்றுவிட்டு அதற்குப் பதிலாக உணவு தானியங்களைப் பெற்று வருகிறார்கள். கிராமங்களில் உள்ளவர்களிடம் பழைய துணிகளைப் பெற்று பழந்துணிகளை அணியும் பழக்கமே பெரும்பாலானவர்களிடம் உள்ளது. ஆடைக்கும் பற்றாக் குறை உள்ள மக்கள். இவர்களின் குழந்தைகள் போர்வை கூட இல்லாமல் இருக்கின்றார்கள். பிறந்த மேனியாய் இருக்கும் குழந்தைகள் குளிரைத்தாங்கிக் கொள்ள தரையில் மண்ணைக்கிளறி அதில் படுத்துறங்குகிறார்கள். மண்ணைப் பறித்து அல்லது கிளறிப் படுத்து அந்த மண்ணின் சூட்டில், கதகதப்பில் குளிரைத் தாங்கி பழக்கப்படுத்திக் கொண்டுள்ளனர். இந்த பரிதாபகரமான நிலை தொல் பழங்குடியினரிடையே இன்றும் நிலவுகிறது.

பழங்குடியினர் திருமணத்தில் சில முறைகளைக் கடைப்பிடித்து வருகின்றார்கள். பொதுவாக ஆணோ, பெண்ணோ மணந்து கொள்ள விரும்பினால் அவர்கள் இருவரையும் ஒன்றாகப் பழகவிடும் பழக்கம் இன்றும் கடைப்பிடிக்கப் படுகிறது. இருவரையும் காட்டுக்குள் அனுப்பிவிடுகிறார்கள். தங்களுக்குள் மனம் விட்டுப் பேசி தனியே தங்கி சில நாள்கள் பழகுகின்றனர். பின்னர் திரும்புகின்றபோது பெரியோர்களின் முன் நிறுத்தப்படுகின்றனர். இருவரும் மனம் ஒத்து மணந்து கொண்டால் மட்டுமே கணவன் மனைவியாகலாம். விரும்பாவிடில் இருவரும் பிரிந்து வேறு ஒருவரை (இருபாலாரும்) மணக்கலாம்.

ஒரு பெண்ணை மணக்க விரும்பும் ஆடவனைப் பெண் வீட்டுக்கு அனுப்பி அங்கேயே இருந்து உழைத்து வர வேண்டும். சரியான தகுதியுள்ள மாப்பிள்ளை என்று பெண்ணும், பெண் வீட்டாரும் கருதினால் மட்டுமே பெண் கொடுக்கப்படும். இல்லையேல் பெண் கொடுக்க மறுத்து விடுவார்கள். ஆண்டுக்கணக்கில் உழைப்பவரும் உண்டு. இன்னும் சில பழங்குடி சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பெண்ணை மணக்க விரும்பும் ஆடவன் வீட்டுக்கே பெண்ணை அனுப்பி விடுவார்கள். பெண்ணும் ஆணும் பழகி பிறகு மனம் ஒத்து திருமணம் செய்கிறார்கள். சிலர் குழந்தைகள் பிறந்த பிறகு திருமணம் செய்து கொள்வதும் உண்டு.

ஒரு பெண்ணுக்கு ஆடை கொடுத்துவிட்டால் அவளை மணப்பெண்ணாக உறுதிப்படுத்திக் கொண்டதாகப் பொருள். பொதுவாக மணமாகிவிட்டால் கணவன் மனைவி எங்கு சென்றாலும் இணை பிரியாமல் இருப்பர். வயதான நிலையிலும் கூட எந்தச் சூழ்நிலையிலும் இணைபிரியாமல் இருப்பது இவர்களின் குணமாகும். ஒருவன் ஒருத்தியை மணந்துவிட்டால் வேறு நபர்களை நாடாமல் இருப்போரும் உண்டு. இருவரிடையே மாறுபாடு எழுந்தால் மணமுறிவும் செய்து கொள்ளலாம். மறுமணமும், விதவைகள் மறுமணமும் பழங்குடி மக்களிடையே காணப்படுகின்றன.

ஓர் ஆணுக்கு ஒரு பெண்ணோ அல்லது ஒரு பெண்ணுக்கு ஓர் ஆணோ வெற்றிலைபாக்கு கொடுத்து பெற்றுக் கொண்டால் ஒருவரை ஒருவர் விரும்புகின்றனர் என்று பொருள். வெற்றிலை பாக்கு பெற்றுக் கொண்டவர் காதலர்களாக சேரும் பழக்கம் இவர்களிடம் உள்ளது.

பழங்குடி மக்கள் இறந்துவிட்டால் சில இடங்களில் புதைக்கும் பழக்கம் உள்ளது. ஆனால் பெரும்பாலான வனவாழ் பழங்குடிகள், இறந்தவர்களை பாறைச்சந்துகள், அல்லது குகை போன்ற பகுதிகளில் சடலத்தை வைத்து மூடிவிடும் பழக்கமே உள்ளது. அதை அடையாளம் வைத்து வணங்குகிறார்கள். பெரும்பாலான பழங்குடிகளுக்கு சுடுகாடு வைத்துக்கொள்ளும் பழக்கமில்லை.

பழங்குடி மக்களிடையே பலவிதமான இசை, நாட்டிய முறைகள் இருக்கின்றன. இசை ஆய்வாளர்களுக்கும், நாட்டிய நடனக் கலையின் தொடக்கத்தை ஆய்வோருக்கும் பெரும் பயனுள்ள களமாக இந்தப் பகுதி திகழும். பண்டைய இலக்கியங்களில் வரும் குரவைக் கூத்து இன்றும் மலைப் பகுதிகளில் காணப்படுகின்றது. ஆண்களும், பெண்களும், கூட்டமாகப் பாடி ஆடுகிறார்கள். தோற்கருவியை அடித்து பிக்கியை (முகவீணை போன்று சிறிய இசைக்கருவி) ஊதி கூட்டத்தினர் ஆரவாரம் செய்து எழுப்பும் ஒலி உண்மையிலேயே பரவசப்படுத்திவிடுகிறது. கர்நாடக மலையை ஒட்டிய பகுதிகளில் வாழும் பழங்குடியினர் பழங்கால சிறிய யாழ் போன்ற இசைக்கருவிகளை வைத்துப் பாடி ஆடுகின்றனர். இயற்கைச் சீற்றங்கள் பேய்காற்று, பெருமழை, கோடைக் கொடுமை, கடுங்குளிர் போன்றவற்றிற்குப் பரம்பரையாகப் பழக்கப்பட்டுவிட்ட பழங்குடியினர் இவைகளைத் தாங்கி உடற்கூறு பக்குவப்பட்டு விட்டனர். ஆனால், மாறிவரும் சூழ்நிலையில் பழங்குடியினரல்லாத சமூகத்தினரால் ஏற்படும் இன்னல் இவர்களின் வாழ்க்கை முறையை சீரழித்து விடும். பழங்குடி மக்களின் பாரம்பரிய அனுபவ அறிவு, மனிதநேய மிக்க பண்பு, மருத்துவம், இசை, மரபு வழியாக காணப்படும் மானுடத்தன்மை, சமூக, கலை, கலாசார தன்மைகளை ஆய்வோருக்கும், வேளாண்முறை, தாவரவியல் ஆய்வாளர்களுக்கும் ஆய்வுச் சுரங்கமாகவே பழங்குடிமக்கள் விளங்குகின்றனர். இம்மக்களை அழியவிடாமல் காப்பது அனைவரின் கடமையாகும்.

பரபரப்பான இன்றைய உலகில் தங்களுக்குள் ஏற்றத்தாழ்வு இல்லாமல், உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பாகுபாடு இன்றி, பெண்ணடிமைத்தனமோ வரதட்சணைக் கொடுமையோ இல்லாமல் சாதி சண்டைகளுக்கோ, மதமோதல்களுக்கோ வாய்ப்புத் தராமல் அனைத்துப் பழங்குடி மக்களும் சமமாக வாழும் உயர்ந்த பண்புடன் பழங்குடிமக்கள் வாழ்ந்து வருகின்றனர். பசியால், பஞ்சத்தால் வாடினாலும் கிடைப்பதை அனைவரும் பகிர்ந்துண்ணும் பண்பும், அன்பால் பாசத்தால் பிணைந்த உயர்ந்தவாழ்வும், கள்ளங்கபடமற்று இயற்கையின் மடியில், மலை நிலங்களில் வாழும் பழங்குடி மக்களின் வாழ்க்கை முறையும் உயர்ந்த பண்பும் போற்றத்தக்கவையாகும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org